# பகவத்கீதை ஒரு உட்டாலக்கடி

**-சித்தூர்.முருகேசன்**

## முன்னுரை

இந்த தொடர் எழுதப்பட்ட காலக்கட்டம் வேறு. ஆனால் சமீபக காலமாய் அஃதாவது திருவாளர் மோதி அவர்கள் பிரதமரான பிறகு காவி கூட்டம் ஆட்டை கடித்து ,மாட்டை கடித்து கடைசியில் மனிதனை கடித்த கதையாக செம அலப்பறை.

இந்த வரிசையில் "பகவத்கீதையை தேசீய நூலாக அறிவிக்கும் முயற்சிகள்" இன்றைக்கு ஹாட் டாப்பிக். இந்த தொடர் என் வலைப்பூவில் எழுதப்பட்டது. இதை காலத்தின் கட்டாயம் கருதி மின் நூலாக தந்திருக்கிறேன்.

தலைப்பை பார்த்ததும் இந்தாளு பெரியாரிஸ்டு போல, நாத்திகன் போலனு நினைச்சுராதிங்க. ராமகிருஷ்ண பரம ஹம்சர்ல ஆரம்பிச்சு ஓஷோ வரை என் செல்லங்கள் அனேகர். இதரர் போல டைம் பாஸ் சாதகன் நானல்லன். எதுவாக இருந்தாலும் "இறங்கி பார்த்துர்ரது" நம்ம ஸ்டைல்.

நான் கண்ணனை ஏத்துக்கறேன். புராணங்கள் காட்டும் கண்ணனை அல்ல. என் உள்ளுணர்வு எனக்கு காட்டிய கண்ணனை.ஆனால் கீதையை ஏற்கவில்லை. கண்ணனின் வாழ்வை அடிப்படையாக வைத்து கீதையை அணுகினேன். பாலகுமாரன் கதையில் பாலகுமாரன் இருப்பார். சுஜாதா கதையில் சுஜாதா இருப்பார். ஆனால் கீதையில் கண்ணன் இல்லை என்பதே என் ஆராய்ச்சி முடிவு.

இதைத்தான் சாங்கோபாங்கமாக அவா விரலை எடுத்து அவா நொள்ளை கண்ணை குத்தியிருக்கன். கீதை இடை செருகல் அல்ல, கண்ணனின் ஆத்மா கீதையில் இருக்கிறது என்று ஆருனா நிரூபிச்சா ஏத்துக்க இப்பவும் தயாரா

இருக்கன்.

இந்தியா என்பது பல்வேறு இன,மத,சாதி மக்கள் இணைந்து வாழும் ஒரு நிலப்பகுதி. வேற்றுமையில் ஒற்றுமை என்பதே நம் பலம். அதை விட்டு ஒரே மதம்,ஒரே மொழி,ஒரே கட்சி,ஒரே ஆட்சியாளர் என்ற லட்சியங்களோட இப்பம் ஒரே மத நூல் என்ற கயவாளித்தனத்தையும் காவி கும்பல் தன் அஜெண்டாவில் சேர்த்துக்கொண்டிருக்கிறது.

இந்த நிலையில் கீதையின் நிஜ சொரூபத்தை -அசலான நோக்கத்தை கு.பட்சம் பிராமணரல்லாதோரும் ,சூத்திரர்களும் , சில நூறு அக்கிரகாரத்து அதிசயங்களும் புரிந்து கொண்டாலன்றி இந்த விபத்தை தவிர்க்கவே முடியாது.

எனவே தான் இந்த மின் நூல் முயற்சி. யாரேனும் இதன் அச்சு வடிவத்தை கொண்டு வர நினைத்தாலோ - தமது வலைதளத்தில் பிரசுரிக்க முன் வந்தாலோ மகிழ்வேன். நான்

எதிர்ப்பார்ப்பதெல்லாம் முன் கூட்டிய தகவல் மட்டுமே.

மற்றபடி வக்கீல் நோட்டீஸ் வழங்க துடிக்கும் அன்பர்களுக்காக என் தபால் முகவரி : #17-201,கும்மர தெரு,சித்தூர் ஆ.மா 517001. திட்டியோ ,மிரட்டியோ மகிழத்துடிப்பவர்களுக்கான எனது மெயில் முகவரி: swamy7867@gmail.com.

அடுத்து ஆர்ரா இவன் விஜாரிங்கறவுகளுக்காக அவர்களின் சிரமத்தை குறைப்பதற்காக என் வலைதளத்தில் என்னை பற்றிய அனைத்து தகவல்களும் இருக்கின்றன .http://www.anubavajothidam.com

-இவண்

சித்தூர்.எஸ்.முருகேசன்

**பகவத் கீதை ஒரு உட்டாலக்கடி**

நீங்கள் குறிப்பிட்ட காலத்துக்கு முந்திய எந்த ஒரு பழைய )நூலை வேண்டுமானாலும் எடுத்துப்

பாருங்கள். சிற்ப சாஸ்திரம்/வைத்தியம் /கொக்கோகம் என்ற் எது வேண்டுமானாலும் பாருங்கள்.

அந்த நூலாசிரியர் குறிப்பிட்ட அந்த சப்ஜெக்ட் சிவனாரால் பார்வதிக்கு கூறப்பட்டு அது ஒலிம்பிக் தீப்பந்தம் போல பல கைமாறி தனக்கு இன்னாரால் கூறப்பட்டதாகவும் உலக நன்மை கருதி தான் இதை எழுதியதாகவும் தான் துவங்குவார். இது ஒரு ஃபார்ம் தான்.அல்லது சம்பிரதாயம் என்பதை எளிதாக அவதானிக்கலாம்.

(இங்கே சின்ன ஆன்டி சென்டிமெண்ட்- Aunty இல்லிங்கண்ணா Anty. பழைய நூல்கள்னு தட்டறப்ப விரல் தடுமாறி பழினு டைப் ஆயிருச்சு. இந்த பதிவை போடறாதால .பழி வருமோ? வரட்டுமே நான் பழி சுமப்பதால் தான் என் நாட்டு இழி நிலை மாறும் என்றால் சுமந்தால் போச்சு. )

பகவத் கீதையும் இப்படித்தான் துவங்குது. கிருஷ்ணர் அர்ஜுனனுக்கு சொல்ல அதை வியாச மகரிஷி வரம் காரணமாக சஞ்சயன் கேட்டு திருதராஷ்டிரனுக்கு சொல்கிறாராம். இது ஒரு ரொட்டீன் எடுப்பு ,தொடுப்பு,தொகையறா மாதிரி.

இதை பிடிச்சுக்கிட்டு கீதைய கண்ணன் தான் சொன்னாருன்னு பிடிவாதம் பிடிச்சா அடுத்த பதிவுல சிவனார் பார்வதிக்கு சொல்லி வழி வழியா நூல்களின் பட்டியல நான் வெளியிடுவேன்.

எனக்கு ஏற்கெனவே ஸ்பார்க் ஆகி நான் என் வரை ஃபாலோ பண்ணிக்கிட்டிருந்த , சமூகம் ஏத்துக்கவே ஏத்துக்காத பல சமாசாரங்களை சொன்ன ஓஷோ கூட இந்த டுபுக்கையெல்லாம் ஏத்துக்கிட்டு தன் அளவற்ற, ஞானம்,அறிவு, தர்கங்களின் உதவியுடன் கீதைக்கு பின்னான /கீதையிலான ஃபேண்டசிக்கெல்லாம் தன் தர்க அறிவு & விஷய ஞானத்தை வைத்து முட்டும் கொடுத்திருக்கிறார்.

நான் எதை பத்தி பேசினாலும் என்ன பேசனும்னு நினைக்கிறேனே அதைத்தான் பேசுவேன் இதெல்லாம் (கீதை,உபனிஷத் எல்லாம்) ஒரு சாக்குன்னு ஓஷோவே

ஒரு சந்தர்ப்பத்துல சொல்லியிருக்காரு. எனவே ஓஷோ எப்படி இந்த உடான்ஸை எல்லாம் ஒத்துக்கிட்டாருங்கற கேள்விக்கே இடமில்லை.

இந்த பதிவுல கீதையில இருக்கிற அன் சைன்டிஃபிக், இல்லாஜிக்கல் (தர்கத்துக்கு ஒவ்வாத) விஷயங்களையும் முரண்பாடுகளையும் துவைச்சு, அலசி காயப்போட போறேன். அவாள்ள யாராவது ஜூரிகள் இருந்தால் என் பதிவை கண்டிக்கலாம். விமர்சிக்கலாம். அவிக முன் வந்து சம்மதிச்சா அவிக போடற எதிர்பதிவையும் நம்ம கவிதை07லயே பப்ளிஷ் பண்ணவும் நான் ரெடி.

பகவத்கீதை சமஸ்கிருதத்துல இருக்கு. அதை நீ எப்படி படிச்சே.. எப்படி விமர்சிக்க போறேன்னு சனம் கேட்கும். என் பதில் சின்ன வயசுலருந்து கண்டசாலாவோட கீதைய கேட்டுக்கிட்டேதான் இருக்கேன். ஒரிஜினல்+ தெலுங்கு உரையோட காந்த குரல்ல அப்படியே கட்டிப்போட்டுருமில்லே. தெலுங்குல நாம எப்படிப்பட்ட புலின்னா அம்மனுக்காக ஆயிரத்துக்கு மேல வசன கவிதைகள் எழுதி வச்சிருக்கேன். அதெல்லாம் எவ்ள டென்சா (Dense) இருக்கும்னா தெலுங்கை தாய்மொழியா கொண்டவர்களுக்கே ஓரளவாவது ப்ராக்டிக்கல் ஸ்பிரிச்சுவல் எக்ஸ்பீரியன்ஸ் இருந்தாதான் ஒரு குன்ஸாவாச்சும் புரியும்.

மேலும் கவிஞர் கண்ணதாசன் பாணில அவரோட மொழி பெயர்ப்பு+ விளக்க உரைய முன்னாடி வச்சுக்கிட்டுத்தான் இந்த பதிவை அடிச்சிக்கிட்டிருக்கேன்.

(அவரும் மொ.பெ ஐ வச்சுக்கிட்டுதான் கண்ணன் அருளிய பகவத்கீதை கண்ணதாசன் விளக்க உரைங்கற புஸ்தவத்தை எழுதியிருக்காரு. அதை வானதி பதிப்பகம் அருவறுப்பான அர்த்தமே மாறிவிடக்கூடிய அச்சுப்பிழைகளோட வெளியிட்டிருக்கு. உதாரணம்: உணவு/உணர்வு)

**இதுக்கு கலவை புகழ், சங்கர் ராமன் கொலை வழக்க் புகழ், திருப்பதி மருத்துவக்கல்லூரி புகழ் ஜெயேந்திர சரஸ்வதி சுவாமிகள் அருளுரை வேறே வழங்கியிருக்கார்.இதுக்கு மிஞ்சின ஆத்தன்சிட்டி வேறேன்ன தேவை?**

நான் பகவத்கீதையே குப்பை. அதுல சொல்லப்பட்டிருக்கிறதெல்லாம் சப்பைன்னு சொல்லல. அது கண்ணனால சொல்லப்பட்டதில்லே. அதனால அதுல இருக்கிறதெல்லாமே அட்சர சத்தியங்கற கியாரண்டி இல்லேன்னு

நிரூபிக்கத்தான், கீதையோட உள்ளடக்கத்தின் மீது எவ்வித ஒப்பனையோ, காம்ப்ரமைஸோ இன்றி ஒரு ஆரோக்கியமான விவாதம் நடக்கனும்னு நான் இந்த பதிவை போடறேன்.

எங்கண்ணன் ஃப்ரண்டும், யாதவ குல தோன்றலுமான ......கிட்டே இப்படி ஒரு பதிவு போடப்போறேன்னு சொன்னதுக்கு "யோவ் உனக்கு எவனோ உதை கொடுக்கப்போறான்யா. கிருஷ்ணன் கிட்டே மோதினே மாடு வுட்டுருவாருன்னாரு.(கிண்டலாத்தான்)

ஏற்கெனவே ஒரு பதிவுல நான் சொன்ன மாதிரி எத்தனை எத்தனை ராமன்? எத்தனை எத்தனை இராம இராவண சங்கிராமம்?

அதே மாதிரி இந்த கால வெள்ளத்துல எத்தனை எத்தனை கிருஷ்ணர்களோ ? எத்தனை எத்தனை கீதைகளோ?

வானவெளியில் மிதக்கும் எண்ண அலைகள் எனும் அகண்ட பாத்திரத்து அமுதின் துளிகளை சேகரித்தவன் எவனோ? , அதில் அவனது சுயம் கலந்த விஷம் எத்தனை எத்தனையோ? (ஆனால் இப்போ செலாவணில இருக்கிற கீதைய எழுதினது மாத்திரம் சர்வ நிச்சயமா ஒரு பிராமணோத்தமரா தான் இருக்கனும். வர்ணாசிரம தர்மத்தை குலத்தொழிலை ஆதரிக்கிறதுலருந்தே இதை கார்ட்டூன் சேனல் பார்க்கிற பாப்பா கூட சொல்லிரலாம்)

இருக்கிறதெல்லாம் இருக்கட்டும் கிழவியை தூக்கி மணைல வைங்கற மாதிரி பகவத்கீதை மேல ஏன் போச்சுன்னு கேட்பிங்க. இந்தியா ஒரு மதசார்ப்பற்ற அரசு. இங்கே இருக்கிற நீதிமன்றங்கள்ள சாட்சிகளை விசாரிக்கிறதுக்கு முந்தி பகவத்கீதை மேல சத்தியம் வாங்கறாய்ங்க. இது ஒரு மதம் தொடர்பான புஸ்தவம். இதுல ஆத்தர் யாருங்கறதுலயே தகராறு இருக்கு.

சத்தியத்துக்கு புறம்பான ( ரொம்ப தொலைவு போயிராதிங்கண்ணா .. நிஜங்கற அர்த்தத்துல தான் எழுதறேன்) இன்றைய சட்டத்துக்கு எதிரான, ஏன் மனிதத்துக்கே எதிரான எத்தனையோ தகவல்கள் இதுல இருக்கு.(எல்லாத்தயும் பட்டியலிட்டு காட்டறேன் வெயிட் அண்ட் சீ. )

இதை இந்துக்கள் மட்டுமல்ல உலக தத்துவ ஆராய்ச்சியாளர்கள் உட்பட ஏதோ

ஒரு புஸ்தவமா பார்க்கிறதில்லை. இந்துமதங்கற பழத்தோட்டத்துலருந்து எடுத்த ஃப்ரூட் கான்சன்ட்ரேட்டா தான் பார்க்கிறாய்ங்க. இந்துமதத்துல இருக்கிற 18 புராணம், வேதம், உபனிஷத்துனு கண்டதையும் எடுத்துக்கிட்டு கிழிக்கறதை விட கீதைய கிழிச்சாலே போதும் சனம் வேக் அப் ஆயிருவாய்ங்கனு ஒரு நப்பாசை.

ஏற்கெனவே சொன்னபடி என்னுது ரெண்டே பாயிண்ட். **கீதைய கண்ணன் சொல்லலே. எனவே இதுல இருக்கிறதெல்லாம் (ஒவ்வொண்ணும் ) ரத்தினம் கிடையாது. (சில ரத்தினங்கள் இருக்கலாம்)** .

ஓகே ஜெயேந்திர சரஸ்வதி கொடுத்திருக்கிற அருளுரைல ஒரு பத்திய பார்த்துட்டு (பேர்த்துட்டு) மேல போயிருவங்கண்ணா. ஸ்டே வித் மி.

//உலகம் முழுதும் நன்றாயிருக்க வேண்டுமென்று//

உலகம் முழுதும் நன்றாயிருக்க வேண்டுமென்று என்று தான் கீதை அருளப்பட்டதாம். கீதையோட உடனடி விளைவு குருக்ஷேத்திரம். பின் விளைவு பாண்டவர் வமிசம் கூட நாஸ்தி.

//பிரார்த்தித்து//

இன்னாங்கடா இது நாமெல்லாம் பகவானை பிரார்த்தனை பண்றோம்னா ஒரு லாஜிக் இருக்கு. பரமாத்மா என்னத்துக்கு பிரார்த்தனை பண்ணனு. அப்படி பண்ணா யாருக்கு பண்ணுவாரு

//கிருஷ்ண பரமாத்மா அருளிய//

தனக்கு உறுதிபட தெரியாத, தர்கத்துக்கே ஒவ்வாத மேட்டரை இன்னா அசால்ட்டா ஆத்தரைஸ் பண்றாரு பாருங்கோ

// கீதை பகவத் கீதை  என்றே பெயரிடப்பட்டுள்ளது//

அப்போ நம்ம வலைப்பூவுக்கு பகவத் நிர்வாண நிஜங்கள்னு பேரைவச்சுட்டா கிருஷ்ணர் தான் ப்ளாக் எழுதறாருன்னு ஆயிருமா என்ன?

//பகவான் எல்லோருக்கும் பொதுவானவரானதலால் எல்லோரு அதை

ஏற்றுக்கொள்ளலாம்

பகவான் பொதுன்னு வெறும் வாய் வார்த்தையா சொல்லிட்டா போதுமா? இந்து மதத்துலயே நாலு கேட்டகிரி. அந்த நாலுக்குள்ள நானூறு சப் கேட்டகிரி. இதுல ஒரே ஒரு கேட்டகிரிதான் சோல் ஃப்ரான்சைஸ், சோல் ஏஜென்சி வச்சிருக்காய்ங்க. பி.ஏவும் அவிகளே அஃபிஷியல் ஸ்போக்ஸ் மென்னும் இவிகளே. மத்தவனெல்லாம் கல் சுமந்து மண் சுமந்து கோவிலை கட்டி பூட்டி சாவிய கொடுத்துட்டா எல்லாம் அவன் செயல் இல்லே. எல்லாம் அவாள் செயலாயிரும்.

ஒரு இந்து மதத்துலயே இத்தனை லிட்டிகேஷன். இதுல எல்லாருக்கும் பொதுவானவர்னு விடறார் பாருங்க. தி.தி.தேவஸ்தானத்துக்கு பூமன கருணாகர ரெட்டி சேர்மனானப்போ தலித்த கோவிந்தம்னு ஒரு ப்ரோக்ராம் பண்ணாரு, அதாவது உற்சவர் தலித்களை தேடி சேரிக்கே போய் அருள் பாலிப்பார். அடடே நல்ல ப்ரோக்ராம் தானேம்பிங்க. ஆனால் அவாள் இருக்காளே இப்படியெல்லாம் "தீட்டு"பட விட்டுருவாளா என்ன? அதுக்குன்னே தனி சிலைய செட்டப் பண்ணாங்க. சாமி(?) சேரில என்டர் ஆகி ரிட்டர்ன் வந்தா அவரும் தலித் கணக்குதான் போலும். அந்த ஸ்பெஷல் உற்சவரை ஸ்பெஷலா மடைப்பள்ளில வச்சுட்டாய்ங்க.

இந்த அழகுல சுவாமிகள் சொல்றார் "எல்லாருக்கும் பொதுவானவாராம்" அட டுபுக்கே நீங்க கடவுளுக்கு உருவம் கொடுத்திருக்கிங்க. கண்ணாலம் பண்றிங்க. தாலி கட்டறிங்க. முதலிரவு நடத்தறிங்க (எங்கயோ ஒரு ஊர்ல அம்மனுக்கு மாதவிலக்கு வந்ததா கூட அலப்பறை பண்ணானுங்கோ) இஸ்லாம் இறைவனை உருவமற்றவன்னு சொல்லுது அவிக எப்படி உங்க கிருஷ்ணனை ஏத்துப்பாங்க.

## அத்யாயம்: 2

கீதைக்கு ஆரம்ப புள்ளி அர்ச்சுனனின் குழப்பம் .

எல்லாரும் சொந்தகாரவுக ஆச்சே அவிகளை எப்படி கொல்லுவேன். இவிக எல்லாம் செத்து தொலைஞ்ச பிறகு நான் வாழ்ந்தென்ன? ( பந்தா காட்ட முடியாதில்லே) - இப்படியெல்லாம் அர்ச்சுனன் சொல்லிட்டு வரான் இதுல நமக்கு நோ அப்ஜெக்சன். அடுத்து ஒரு காரணத்தை சொல்றான் பாருங்க:

யுத்தத்தால் //குலம் அழிந்தால் நிலையான குல தர்மங்கள் அழிகின்றன//

யுத்தத்தால குலம் எப்படி அழியும்னா..வார்ல மஸ்தா பேரு டிக்கெட் வாங்கிருவானுங்கோ. அப்போ அவிக பெண்டாட்டி மார் எல்லாம் அவிக சாதி ஆம்பளையதான் கட்டுவேன்னு பிடிவாதம் பிடிக்க முடியாதில்லயா? ஆண் சனத்தொகை ஃபணாயிலிட்டிருக்கும் நைனா.

ஒரு ஐயரு மனைவி சத்ரியனை கட்டவேண்டிவரலாம். சத்ரியன் மனைவி வைசியனை, வைசியன் மனைவி சூத்திரனை கட்ட வேண்டி வரும். இப்படி கலப்பு திருமணம் நடந்தா குலம் அழிஞ்சுருமாம். குலம் அழியறதுல கீதாசிரியருக்கு ( கண்ணனை சொல்லலே .. கீதைய எழுதின பிராமணோத்தமருக்கு) என்ன நஷ்டம்?

மிருகங்களை கூட க்ராஸ் பண்ணாதான் பெட்டர் ப்ரீட் கிடைக்குது. ஒரே லிமிட்ட்டட் க்ரூப்ல தொடர்ந்து கல்யாணங்கள் நடந்ததால தான் நம்ம நாட்ல மனிதர்களோட சராசரி உயரம், உடல் பலம் எல்லாம் குறைஞ்சுகிட்டே வருது.

குலம் அழியாம இருந்தா பிராமண குலம் உத்தம வர்ணமா கன்டின்யூ ஆகலாம். பிராமண குலத்துல கலப்பு ஏற்பட்டுட்டா இவன் ஏற்படுத்திக்கிட்ட விதிப்படி பிறக்கற குழந்தை சூத்திரனாயிருது.

வர்ணக்கலப்பால ஒன்னு மைனாரிட்டி ஆயிர்ராய்ங்க. ரெண்டு க்ராசிங்க் ஆகி பேட்டண்ட் ரைட்ல குழப்பம் வருது.அக்மார்க் பிராமண சனத்தொகை குறையறதால என்ன நஷ்டம்னா ஆளும் வர்கத்துக்கு ஜல் ஜக் போட்டு முக்கியமான போஸ்டிங்ல போட்டுவைக்கவாவது பிராமண பிள்ளைங்க தேவையாச்சே.அப்புறம் அதிகாரத்துல பங்கு போயிரும். ரிமோட் கண்ட் ரோல்

போயிரும், மானியம் போயிருமே,. கண்ட சூத்திர பயலுவ ராசாவுக்கு நெருக்கமாயிட்டா?

சரி பிராமண இனம் அக்மார்க் முத்திரையோட தொடர்ரதுல என்ன லாபம்? இவிக ஜீன்ல இருக்கிற சுய நலம், இன உணர்வு, சதி, புத்தி கூர்மை இதர வர்ணங்களுக்கு பரவாம இருக்கும். இனக்கலப்பால ராமானுஜர் மாதிரி அஷ்டாக்ஷரி மந்திரத்தை கோபுரமேறி கூவிர்ர கூமுட்டைங்க (?) பிறந்துருவாய்ங்க.

தங்கள் இனம் கலப்பில்லாம் தொடர்ந்தாதான் இதர வர்ணத்தாரையும் இனக்கலப்புக்கு வழியில்லாத அவிக ரத்ததுல உள்ள அடிமைத்தனம் தொடர்ராப்ல செய்யமுடியும்.

//குல தர்மம் அழிந்தால் தலைமுறை முழுவதையும் அதர்மம் சூழுமே//

குல தர்மம்னா என்ன ?

பிராமணன் சூ .. நோகாம உட்கார்ந்து திங்கறது, ராசாவுக்கு சால்ரா போட்டு கிராமம் கிராமமா மானியமா வாங்கிக்கிறது. அடுத்தவன் உழைச்சு விளைவிச்ச தானியத்துல லையன்ஸ் ஷேரை பங்கா வாங்கி அனுபவிக்கிறது.

சத்ரியன் ராசா பண்ற அ நியாய யுத்தத்துல எல்லாம் சண்டை போட்டு சாகனும், இவன் பெண்டாட்டி தாலியறுக்கனும், வைசியன் வியாபாரம் தான் செய்யனும், சூத்திரன் இவிகளுக்கு அடிமையாத்தான் இருக்கனும்.அப்பத்தான் பிராமண குலத்தோட வாழ்வு ஜாஜ்வல்யமா தொடரும்.

வர்ணாசிரம தருமம் எல்லாம் நடைமுறைக்கு வந்தது சமீபத்துல தான்.அதுக்கு முன்னாடி? மாத்ரு ஸ்வாம்ய சமாஜம் தான். அம்மா யாருனு தெரியும் . அப்பன் யாருனு தெரியாது. அப்ப எந்த வர்ணத்தான் எந்த வர்ணத்தாளை போட்டானோ தெரியாது. ரத்தக்கலப்பு சர்வ சகஜம். கச்சாமுச்சானு இடம் மாறின ஜீன்கள் சில சமயத்துல பல நூறு வருஷங்களுக்கு பின்னாடி பிறக்கிற குழந்தைகளுக்கு கூட கிடைக்கலாம்.

அப்படி ஒரு சூத்திரனுக்கு ஃப்ரீ சிங்ல இருந்த பிராமண ஜீன் கிடைச்சு அவன் வேதம் படிக்கிறேன்னா அவன் காதுல ஈயத்தை காய்ச்சி ஊத்தனும். வேதத்தை உச்சரிச்சா அவன் நாக்கை வெட்டனும்னு சட்டம் இருந்தது (மனுஸ்மிருதி).

இந்த செட்டப் அப்படியே தொடரனும்னா வர்ணாசிரம தர்மம் (கர்மம் ! கர்மம்!) குலதர்மம் தொடரனும். செருப்பு தைக்கிறவன் பிள்ளை செருப்பு தைக்கனும், கக்கூஸ் கழுவறவன் பிள்ளை கக்கூஸ் கழுவனும். இதான் குலதர்மம். யுத்தம் வந்தா இதெல்லாம் ஃபணாலாயிரும்னு அர்ச்சுனன் பயப்படறான். (அப்படின்னு கீதையை எழுதின பஞ்ச கச்சம் பயப்படுது , சொல்லுது)

//கண்ணா தர்மம் கெட்டால் மாதர் கற்பும் மடவார் நோன்பும் கெடும்//

பாருங்க இங்கே தர்மங்கற வார்த்தைய கரெக்டா புரிஞ்சிக்கிடனும் அது வெறும் தர்மமில்லே குலதர்மம். இனக்கலப்பு ஏற்பட்டா கற்பு கெட்டுருமாம்.

இவிக கற்போட அழகென்னனு கடைசில சொல்றேன். பார்ப்பனன் தன் மனைவியை இன்னொரு பார்ப்பனனுக்கு விட்டா கற்பு கெடாது. ஒரு பார்ப்பனன் ராசா மனைவிய பதம் பார்த்துட்டா கற்பு கெடாது. இனக்கலப்பு (அதாவது பார்ப்பன பெண் பார்ப்பனனல்லாத ஆணை மணந்தால் மட்டுமே) கற்பு கெடும்.

இதே மனு ஸ்மிருதில பார்ப்பனன் ஒருவன் சூத்திரப்பெண்ணை ரேப் பண்ணிட்டா அவன் மயிரை(குடுமியை) வெட்டிட்டா போதும், ஆனா ஒரு சூத்திரன் பார்ப்பன பெண்ணை கெடுத்துட்டா அவன் உயிரை எடுத்துரனும்னு சொல்லியிருக்கு.

இவன் சூத்திர பெண்ணை தக் ஜம் பண்ணிட்டா பார்ப்பன இனம் பெருகும். ( ஜஸ்ட் மேல் ஷேவனிசம் தட்ஸால்) அவன் ஒரு பார்ப்பன பெண்ணை தக்க ஜம் பண்ணிட்டா சூத்திர இனம் பரவும்னு இப்படி வச்சானுங்களா இல்லை அவாள்

மயிரும் இவன் உயிரும் ஒன்னுங்கற அகம்பாவத்துல வச்சாளா தெரியலை. எதுக்கு இதை சொல்லவரேன்னா மாதர் கற்பு சாந்தி காலத்துலயே மானாவாரியா கெட்டிருக்கு அதனால தான் மனு ஸ்மிருதில இப்படி ஒரு செக்ஷன் வருது. ஆனால் கீதாசியரோட ( பஞ்ச கச்சத்தோட) உத்தேசத்துல அவாள் அவாள் எப்படி போனாலும் கற்பு கிடையாது. பார்ப்பனன் சூத்திரச்சியை தக்க ஜம் பண்ணாலும் கற்பு கெடாது. சூத்திரன் பார்ப்பன பெண்ணை பண்ணா மாத்திரம் கற்பு கெடும்.

ராசாவுக்கு பிள்ளையில்லன்னா இவாள் தான் கர்ப தானம் பண்றது அதுக்குத்தான் புத்ர காமேஷ்டி யாகம்னு பேரு. ஒரு பார்ப்பன சிறுவன் வேதம் கத்துக்க தூர தேசம்போயி ரிட்டர்ன் ஆகறச்சே பொலி காளை கணக்கா இருப்பான். அவனுக்கு வீரியம் புரண்டு எவளையாச்சு கச முசா பண்ணீட்டா பேஜாருன்னு வர்ர வழியில உள்ள பிராமணாள் வீடுகள்ள தங்கி அதிதி மரியாதைய ஏத்துக்கிட்டபடியே ரிட்டர்ன் ஆவாரு. அதிதி மரியாதைன்னா சோத்த போடறது மட்டுமில்லிங்கண்ணா பெண்டாட்டிய படுக்க போடறதும்தான்.

என்னடா முருகேசன் சுத்தி வளைச்சு அர்ச்சுனன் பேச்சுக்கு தானா ஒரு அர்த்தம் கொடுத்து ஆப்பு வைக்கற மாதிரி இருக்கேனு நினைக்கிறிங்க . அடுத்த வரிய பாருங்க நான் சொன்னது 100 சதம் கரெக்டுனு அர்ச்சுனனே கன்ஃபார்ம் பண்றான்.

//மாதர் கெட்டால் நான்கு வருணங்களும் குழப்பமடையும்//

அவிகளோட அசலான உத்தேசம் என்னனு புரியுதா "நான்கு வர்ணமும் குழப்பமடையுமாம்" வர்ணாசிரம தர்மம் ஃபணாலாயிட்டா இவிக நாட்டாமை நட்டாத்துல போயிருமில்லியா.. இதான் அசலான மேட்டர்.

பகவத்கீதை ஒரு உட்டாலக்கடி தொடர்பதிவை தொடர்ந்து படிக்கும் உங்களுக்கு கண்ணனின் உன்னத அதிர்வுகள் கிடைக்கட்டும். அண்டை வெளியில்

இன்றைக்கும் மிதக்கும் கண்ணனின் உண்மையான குரல் உங்கள் ஆத்மாவை வந்தடையட்டும். இந்த மூன்றாவது அத்யாயத்திலும் குலதர்மம் குறித்த பிரஸ்தாபனையே தொடர்கிறது.

//அப்படி குழப்பமமேற்பட்டால் (குலதர்மத்திலிங்கண்ணா) யார் அதனை அழித்தார்களோ அவர்களுக்கும் அவர்கள் குலத்தாருக்கும் நரகமே ஏற்படும் அவர்களுடைய மூதாதையர் சோறும், நீரும் இன்றி வீழ்ச்சி பெறுவார்கள்//

பாருங்கண்ணா குலதர்மம்ங்கறது அவிக வொக்காபிலரி. நம்ம வொக்காபிலரில இதுக்கு பேரு சாதீயம் (Castism) . சாதீயத்தை அழிச்சவுகளுக்கு நரகம் ஏற்படுமாம். அழிக்கலன்னா அந்த நரகம் இங்கனயே உருவாயிருமே. என்னைக்கோ .. செத்தபிறகு கிடைக்கப்போற நரகத்துக்கு பயந்து நிகழ்காலத்தை நரகமாக்கிக்க நாம என்ன கேணையனுங்களா? இந்த ப்ளாக் மெயில் இதோட முடிஞ்சுரலை.

//அவர்களுடைய மூதாதையர் சோறும், நீரும் இன்றி வீழ்ச்சி பெறுவார்கள்//ன்னும் சொல்லப்படுது. இங்கே மூதாதையர்னா யாரு? செத்துப்போனவுக. செத்துப்போனவுங்களுக்கு சோறு, நீர் எல்லாம் கொடுக்கறது யாரு? அவாள் . அதாவது பிராமனோத்தமர்கள். அவிக பொழப்பு கெட்டுடுமேன்னு தான் அர்ச்சுனன் வாக்காக கீதாசாரியரோடவாக்கு வருது.

கிருஷ்ணர் யுத்தம் பண்ணச்சொல்றார். யுத்தம் நடக்குது. யுத்தம் நடந்தா குலதர்மம் (சாதீயம்) அழிஞ்சு போயிரும்னு கிருஷ்ணருக்கு தெரியாதா? தெரியும். நிச்சயமா தெரியும்.அப்போ கிருஷ்ணரோட மனசுல குலதர்மம் நிலைக்கனுங்கற எண்ணம் இல்லையா? குல தர்மம் அழியனும்னுதான் யுத்தத்தை தூண்டினாரா? நம்ம ஊகம் கரெக்டா இருந்தா கண்ணன் ஒரு பெரிய ரேஷனலிஸ்டா இருக்கனும். குலதர்மம் ஒழியனும்னு திட்டமிட்டு " வேலை பார்த்திருக்கனும்"

குலதர்மம் அதாங்க சாதீயம் மட்டுமில்லே அரசு ஆதரவோட அல்லது பாராமுகத்தால தொடர்ர சமூக கொடுமைகள் ஒழியனும்னா அரசாங்கம் பலவீனமடையனும். யுத்தங்கள் அரசாங்கத்தை பலவீனப்படுத்தும். இரண்டாம் உலகப்போரே நடக்காம இருந்திருந்தா பிரிட்டீஷ்காரனுக்கு இந்தியாவுக்கு சுதந்திரம் கொடுக்கனுங்கற எண்ணமே வந்திருக்காது.

மத்தியில காங்கிரஸ் கட்சி பழைய காங்கிரஸ்,புதிய காங்கிரஸ்னு உடையறதுக்கு முன்னாடி ( பூரண மெஜாரிட்டியோட இருந்த காலத்துல ) இந்திராம்மாவுக்கு தாழ்த்தப்பட்டோர் மேல கருணை பிறக்கலை. எப்போ மூத்ததலைவர்கள் எல்லாம் அந்தம்மாவுக்கு எதிரா திரும்பினாங்களோ அப்பத்தான் அம்மாவுக்கு கருணை பொங்கிவந்தது.

இதுலருந்து என்ன தெரியுது சமூக கொடுமைகள் ஒழியனும்னா அரசாங்கங்கள் வலுவிழக்கனும். அரசுகள் வலுவிழக்க யுத்தங்களும் காரணமாகின்றன. சமூக கொடுமைகளை பாதுகாத்த, ஊக்குவித்த, கண்டுக்காத அரசுகள் பலவீனமடைஞ்சா மேற்படி சமூக கொடுமைகள் ஆட்டோமெட்டிக்கா ஒழிஞ்சு போயிரும். ஆக கிருஷ்ணர் ஒரு ரேஷ்னலிஸ்டாதான் இருந்திருக்கனும்.

(கீதோபதேசத்துக்கு பிந்தின நிகழ்வுகளை பார்க்கும் போது இந்த முடிவுக்குதான் வரவேண்டியிருக்கு. குல தர்மத்தை அழிக்கிற யுத்தம் நடந்தேறியது. இப்படிப்பட்ட சீர்திருத்தவாதியான கிருஷ்ணர் " யாகங்களால் மழை பெய்கிறது"ன்னு முட்டாள் தனமா சொல்லியிருப்பாரா?. இன்னைக்காச்சும் பொல்யூஷன் அதிகமாகிப்போய் மழை வருமா வராதாங்கற நிலை. அந்த காலத்துல மாசத்துக்கு மூணு மழை பெய்திருக்கும். இதுல என்ன மயித்துக்கு யாகம் பண்ணானுக? அடுத்தவன் உழைப்புல ,பிராமணோத்தமர்கள் சோமபானத்தை ஃபுல்லா ஏத்திக்கிட்டு ஆடு,மாடு,குதிரைய அறுத்துப்போட்டு பண்ற யாகத்துல மிஞ்சினதை மட்டும் திங்கறவன் உத்தமன்னு கிருஷ்ணர் சொல்வாரா? இதையெல்லாம் வச்சுத்தான் இன்னைக்கு செலாவணில இருக்கிற கீதை கண்ணன் சொன்னதில்லை, யாரோ ஐயரு சொன்னதுன்னு சொல்றேன் )

//வருணகுழப்பத்திற்கு வித்தூன்றும் குடிகேடர்கள் செய்கையால் சாதி தருமங்கள் அழிகின்றன. குல தர்மங்கள் கூண்டோடு போகின்றன//

போகட்டுமே. குலதர்மத்தை பின்பற்றி சூத்திரன் கண்ட சுகம் என்ன? இவன் கல் சுமந்து, மண் சுமந்து கட்டின கோவிலுக்குள்ள நுழையற யோகமில்லாம, இவன் பாடுபட்டு விளைவிச்ச ஆடு,மாடை, தானியத்தை யாகத்துக்குன்னு தத்தம் பண்ணிட்டு மிச்சம் மீதி பொறுக்கி தின்னதுதானே அவன் கண்ட சுகம். குலதர்மங்கள்னா என்னமோ ஏதோனு நினைச்சுராதிங்க.. செருப்பு தைக்கிறவன் பிள்ளை செருப்பு தைக்கனும். கக்கூஸ் கழுவறவன் பிள்ளை கக்கூஸ் கழுவனும் . இதான் குலதர்மம்.

சாதீயம் காரணமா ஒரு லிமிட்டட் குழுவுக்குள்ள பெண்ணெடுத்தல், பெண் கொடுத்தல் காரணமாதான் இந்திய மனிதவளமே வறண்டு போச்சு. அதனாலதான் அன்னியர்கள் நம்ம நாட்டை நூற்றாண்டு காலம் ஆள முடிஞ்சது. இன்னைக்கு பாருங்க கலப்பு திருமண்ங்கள் பரவலா நடக்குது. ஐ.டி துறைல தூள் கிளப்புறாய்ங்க. ஐக்யூ அதிகமாகியிருக்கு. அரசாங்கம் ஒரே சாதிக்குள்ள திருமணங்களை தடை செய்தா ஜஸ்ட் ஒரு பத்து,பதினைஞ்சு வருஷத்துல இந்தியாவோட தலையெழுத்தே மாறியிருக்கும்.

//கிருஷ்ணன்:

ஆரியருக்கு இது அடுக்காது ( பக்கம்: 26)//

நான் வெறுமனே பரபரப்புக்காக எழுதற ஆளாயிருந்தாலோ, காழ்ப்புணர்ச்சில எழுதற ஆளாயிருந்தாலோ "ஆரியருக்கு" ங்கற ஒரு வார்த்தைய வச்சு கிழி கிழின்னு கிழிக்கலாம். ஆனால் நான் நடு நிலை தவறாம எழுதிக்கிட்டிருக்கேங்கறதுக்கு இது ஒரு ஆதாரம்.

இன்னைக்கு செலாவணில இருக்கிற கீதைய சொன்னது கண்ணனில்லே. கண்ணன் சொல்லியிருந்தா இந்த வார்த்தைய உபயோகிச்சிருக்கமாட்டாரு.

ஆரியர் திராவிடர் ஆராய்ச்சியெல்லாம் சமீபத்துல வந்த பஞ்சாயத்து. ஆதியில ஆர்யாங்கற வார்த்தைக்கு மரியாதைக்குரியவர்னு குத்துமதிப்பா ஒரு அர்த்தம் உண்டு. அவ்ளதான்.

இன்னைக்கும் சிலர் தெலுங்குல கடிதம் எழுதும்போது ஐயாங்கறதுக்கு பதில் ஆர்யா னு துவங்குறாய்ங்க.

//இறந்தவர்கள் வாழ்பவர்களாகிய இருவருக்குமே அறிஞர்கள் துயரப்படமாட்டார்கள்//

அறிஞன் என்பவன் யார்? தான் இந்த படைப்பின் ஃபோன்சாய்க் பிரதி. இந்த படைப்புல எல்லாமே இன்டர்லிங்க் ஆகியிருக்கு. எங்கனயோ வெள்ளம் வந்தாலும் எனக்குள்ளவும் ஏதோ நனையுதுனு உணர்ரவன் தான் , நினைக்கிறவன் தான் ,நினைச்சு செயல்படறவன் தான் அறிஞன். ஆனால் கிருஷ்ணர் எவன் எக்கேடு கெட்டுப்போனா எனக்கென்னனு நினைக்கிறவந்தான் அறிஞன்ங்கறார்.

அரசாங்க ஆதரவோட தொடர்ர குலதர்மத்தாலதான் (சாதீய வாதம் ) பெருவாரியான மக்கள் சுரண்டலுக்கு பலியாகிறாங்க. யுத்தம் வந்து அரசாங்கம் பலவீனப்பட்டா குலதர்மம் அழியும் சுரண்டல் ஒழியும், பெருவாரியான மக்கள் சுதந்திர வாழ்க்கைய வாழமுடியும்னு ஸ்கெச் பண்ணி யுத்தத்தை தூண்டி விட்ட கிருஷ்ணர் இந்த மாதிரி ஒரு பொறுப்பில்லாத வாக்கியத்தை சொல்லியிருப்பாரா? ரோசனை பண்ணுங்க

//அழிவற்ற பிறப்பற்ற என்றும் உள்ள ஒரு பொருளை உணர்ந்தவன் யாரை கொல்கிறான் அ அவனை எவன் கொல்கிறான்//

இது அந்த இனத்துக்கே உரிய சாலாக்கான வாதம். மேம்போக்கா பார்த்தா ஆஹா கரீக்டா சொல்றார்பானு தான் தோணும்.

தாளி மனுஷனுக்கு உடல், மனசு,புத்தின்னு மூணிருக்கு. ஆத்மானு ஒன்னிருக்கிறதா சொல்றாய்ங்க. சரி இருந்துட்டு போவட்டும்.

உலக வாழ்க்கைய பொருத்தவரை அன்னைக்காகட்டும் இன்னைக்காகட்டும் அரசு, நீதிமன்றம் எல்லாமே நீங்க ஸ்தூலமா/உடலளவுல என்ன செய்திங்கங்கறத வச்சுத்தான் அவார்டோ, தண்டனையோ கொடுக்குது. உங்களுக்கு நல்ல மனசிருந்தா போதாது அந்த மனசு சொல்றத செயலால காட்டனும். புத்தி இருந்தா போதாது அதை டாக்குமெண்டாவோ, ப்ளாக் போஸ்டாவோ ஆடியோ ஃபைலாவோ , வீடியோ ஃபைலாவோ வைக்கனும். அப்பத்தான் உலகம் அதை பரிசீலிக்கும்.

இவிக சொல்றபடி அழியாத ஒன்னு இருக்குன்னே வச்சுக்குவம் . அது என்னன்னு தெரிஞ்சுக்கிட்டம்னும் வச்சுக்குவம் இதெல்லாம் உன் அந்தரங்கத்துல நடக்கிற காரியம்.

//யாரை கொல்கிறான் அ அவனை எவன் கொல்கிறான்//ன்னிட்டு நீ பாட்டுக்கு போட்டு தள்ளிக்கிட்டே போனா என்ன ஆகும்? மனிதன் மிருகத்துக்கும் தேவனுக்கும் இடைப்பட்ட நிலைல இருக்கான். மதம் மனிதனை தேவனாக்கனும். அட்லீஸ்ட் அவனுக்குள்ளே மனிதாபிமானத்தை வளர்க்கனும்.

உண்மையான மதம் மனிதன் தன்னையே டிட்டாச் டா தேர்ட் பார்ட்டியா பாவிச்சு யோசிக்கிற பக்குவத்தை தரனும். இந்த இயற்கைல தான் தனிப்பட்டவனில்லே. தான் இந்த ஒட்டு மொத்த இயற்கையோட பிணைக்கப்பட்டிருக்கானு ஃபீல் பண்ண வைக்கனும். வாடிய பயிரை கண்டபோதெல்லாம் வாடினேன்னாரே வள்ளலார் அவரோடதுதான் உண்மையான மதம். அகிம்சைய போதிக்கிறதெதுவோ அதுதான் உண்மையான மதம். அதை விட்டுட்டு நமக்குள்ள அழியாதது எதுன்னு தெரிஞ்சிக்கிடறதான் கண்டவனையும் போட்டுத்தள்ளிர்ரதான்.

மனிதர்களுக்குள்ள ஒளிஞ்சிருக்கிற இரண்டே கோரிக்கைகள் கொல்வது அ

கொல்லப்படுவதுதானாம். இந்த அடிப்படை கோரிக்கைய தான் கீதாசாரியர் வெளிப்படுத்தறார்.

ஒரு செல் அங்கஜீவியான அமீபாலருந்து உருவான உயிர்கள் பல்லுயிராய் பெருக தனிமை வாட்ட மீண்டும் ஒன்னு சேர துடிக்கிற துடிப்புதான் மேற்படி இச்சைகளா வெளிப்படுதுங்கறது என் சித்தாந்தம்.

எல்லா உயிர்களோடவும் பின்னி பிணைக்கப்பட்டிருப்பதை அகந்தை காரணமாய் உணரமுடியாது ஒன்னு சேர துடிப்பானேன் ? கொல்வானேன்? கொல்லப்படுவானேன்? அதுக்கு ஆல்ட்டர் நேட்டிவா செக்ஸ், வாரிசு பிரச்சினையாலயும், செக்ஸுல இவன் வீக்குங்கறதாலயும் அதுக்கு ஆல்ட்டர் நேட்டிவா பணத்தை தேர்வு செய்வானேன். பணம் பணம்னு அலைவானேன்னு பணம் பற்றிய மர்மங்கள் டிவிடில சுந்தர தெலுங்குல விஸ்தாரமா சொல்லியிருக்கேன்.

இதை பரிசீலிச்சு அனுபவபூர்வமா இது கரெக்டுன்னு ஒருத்தன் புரிஞ்சிக்கிட்டா அவனால ஈ எறும்புக்கு கூட தீமை செய்ய முடியாது.

ஆனால் பகவான் சொல்ற கீதை " இவன் இவனுக்குள்ள அழியாத ஏதோ ஒரு சமாசாரத்தை கண்டுகிட்டு ஊர்ல இருக்கிறவனையெல்லாம் கொல்லலாம்னு லைசென்ஸ் கொடுக்குது. இது ஒரு புனித நூலா? இந்து வேத,உபனிஷத், புராண,இதிஹாசங்களுக்கு பிரமாணமா?

தெலுங்குக்கு தாய்மொழி சமஸ்கிருதம் . தெலுங்குல மதம் ( மத்தம்னு உச்சரிக்கனும். மதம்னா ஆனைக்கு பிடிக்கிற மதங்கற அர்த்தம் வந்துரும்) என்ற வார்த்தைய கருத்துங்கற அர்த்தத்துல உபயோகிக்கிற வழக்கம் இருக்கு. அதுக்கு ஒரு விகுதி சேர்த்து அபிமத்தம்னுவாங்க. ஆகக்கூடி மதங்கறது படைப்பு,

படைப்பாளி, மனிதர்கள், உலக வாழ்வுக்கு முன்,பின்னான வாழ்வு இத்யாதிபத்தி கருத்தை சொல்லனும். அதைவிட்டுட்டு கருத்து சொல்லவே ஆளில்லாத மாதிரி போட்டுத்தள்ள லைசென்ஸ் கொடுக்கிறதுதான் மதம்னா அந்த மதத்தை தடை பண்ணுங்கய்யா, அப்பத்தான் உண்மையான மதம் பிறக்கும்.

சமஸ்கிருத இலக்கியங்களை டாஸ்மாக் சரக்கை உறிஞ்சி குடிச்ச மாதிரி குடிச்சிட்டதா அலம்பல் பண்ற பார்ட்டிகள்,ஆகா ஓகோ என்று அலட்டிக்கொள்ளும் பார்ட்டிகள் அனேகர். ஆனால் நானறிந்த வரை கற்பனை வறட்சி நிறைந்த ஒரே இலக்கியம் சமஸ்கிருத இலக்கியம்தான். கண்ணை வர்ணிக்க ஒரே வார்த்தை அது பிள்ளையார் கண்ணா இருந்தாலும் அதே வார்த்தை , ஆஞ்சனேயர் கண்ணுக்கும் அதே ,லட்சுமிகண்ணுக்கும் அதுவே.

கீழே வர்ர உவமைய பாருங்க..

//கடலுக்கு நடுவே கிணறு எதற்கு?//

இது கண்ணதாசன் கோர்த்துவிட்டதா? இல்லே பகவானே (?) சொன்னதா கன்ஃபார்மா தெரியலை. டோண்டு மாதிரி ஆட்கள் க்ளேரிஃபை பண்ணலாம். கடல்ல இருக்கிறது உப்பு தண்ணி.குடிக்க தகுதியில்லாத தண்ணி . கடல் நடுவுல ஒரு கிணறு இருந்தா அது வரபிரசாதம் மாதிரிதானே . இந்த சின்ன லாஜிக் கூட தெரியலை. என்னத்த பகவான்?

அடுத்து வர்ர உவமைய பாருங்க

//" எங்கும் நீர் நிரம்பிய இடத்தில் ஒரு குட்டை எதற்கு?" //

அட டுபுக்குங்களே எங்கும் நீர் நிரம்பியிருக்கிறதா வாக்கியத்தின் முதல் பாதி

சொல்லுது. அடுத்த பாதிலயே குட்டையிருக்கிறதா தகவல். குட்டை எப்போ ஏற்படும்

ஆறு காஞ்சிப்போனாதான் குட்டை ஏற்படும். எங்கும் நீர் நிரம்பிய இடத்தில் குட்டை ஏற்படுமா? முதல் பாதில லாஜிக் இல்லாத உவமை, இரண்டாவது பாதில பாசிபிலிட்டியே இல்லாத ஒரு மேட்டரை உவமையாக்கி லொள்ளு பண்றாரு பகவான்.

இதெல்லாம் எதுக்கு உவமையா வருது தெரியுமா?

//அப்படியே அறிவுள்ள பிராமணனுக்கு வேதங்களும்//

இதை ஒரு கோணத்துல பார்த்தா ரொம்ப லிபரலா, ரெவல்யூஷ்னரியா தோணும். அவாளோட பார்வைல வேதம் ரெம்ப (ஸ்பெல்லிங் மிஸ்டேக் இல்லிங்கண்ணா) இம்பார்டெண்ட். அதை அப்யசிக்கிறதும், ஓதறதும்தான் அவாளுக்கு அவாள் அலாட் பண்ணிக்கிட்ட நோகாத வேலை. ஆனால் அதுல கூட ரிலாக்சேஷன் பாருங்க. அறிவுள்ள பிராமணனுக்கு வேதங்கள் தேவையில்லையாம். அப்போ அறிவில்லாத பிராமணர்கள் தான் வேதங்களை படிக்கிறாளா?

பிராமணன் என்ற வார்த்தைய ரெண்டு விதமா புரிஞ்சிக்கலாம். ஒன்னு பிராமண பெற்றோருக்கு பிறந்தவன். இரண்டு பிரம்மத்தை அறிந்தவன். பிரம்மத்தை அறிஞ்சவனுக்கு வேதம் தேவையில்லாத விஷயம்தான் இல்லேங்கலை.

வெறுமனே பிறப்பால பிராமணனா இருக்கிற பார்ட்டிக்கு கொஞ்சமா அறிவு இருந்தா வேதம் தேவையில்லையா?

இந்த வேதங்களை பத்தி சின்ன சேதி

ஆரம்பத்துல வேதத்தின் பொருள் தெரியுமாடா உங்களுக்குனு அலம்பல் பண்ணாய்ங்க. நம்மாளுங்க தாளி என்னதான் இருக்கு அதுலன்னு நோண்டி மொளாகாரிக்க ஆரம்பிச்சுட்டாய்ங்க. இதான் பொருள்னு போட்டு உடைக்க ஆரம்பிச்சுட்டாய்ங்க.

உடனே "உட் பொருள் தெரியுமா" னு பூச்சி காட்னாங்க. நம்மாளுங்க அதுலயும் பூந்து வெளிய வந்தாய்ங்க. உடனே வேதத்துல வார்த்தைக்கோ, அதன் பொருளுக்கோ உட் பொருளுக்கோ எந்த முக்கியத்துவமும் இல்லே. அதை சொல்ற ரிதம், மாடுலேஷன் தான் முக்கியம்னு சொல்ல ஆரம்பிச்சுட்டாய்ங்க.

இன்னைக்கு வேதம்ங்கற ப்ராடக்டை வச்சு பல ஆயிரம் லட்சம் கோடி பணம் அரசு நிதி உட்பட புரளுது. அது யார் பணமா இருந்தாலும் அந்த செலவு ப்ரொடக்டிவ்தானா? உபயோகமானதுதானான்னு தெரிஞ்சிக்கிறதுல தப்பே இல்லே.

தி.தி.தேவஸ்தானம் கூட வேதபாடசாலை நடத்துது. வாரிசில்லாம சாகிற பசையான பிராமணாள் சாகறப்ப வேதபாடசாலை நடத்தறதைதான் தங்கள் விருப்பமா வில் எழுதி வச்சு சாகிறாய்ங்க.

இத்தனைக்கும் இத்தனை செலவழிப்புக்குண்டான தகுதி,ஒர்த் வேதத்துக்கு இருக்கா இல்லியானு பரீட்சிக்க வேணாமா?

இன்னைக்கும் மகாமுனிவர்னு பிராமண மீடியா புகழ்ந்து தள்ற சந்திர சேகரானந்தாவுக்கு கூட காட் ராக்ட் ஆப்பரேஷன் பண்ண வேண்டி வந்தது, சோடா புட்டி கண்ணாடி அணிஞ்சிருந்தாரு.

சூரிய நமஸ்காரம் பண்ணாலே கண்பார்வைக்கு கியாரண்டி கொடுக்கிற மதத்துல

வாழ் நாள் எல்லாம் காயத்ரி ஜபிச்ச சந்திர சேகரானந்தாவுக்கு கண்ணு ஏன் டப்ஸாச்சு?

அவரோட அடுத்த வாரிசு ஜெயேந்திர சரஸ்வதி மருந்து அலமாரியோட வாழ்ந்துக்கிட்டிருந்த விஷயம் சங்கர் ராமன் கொலை வழக்குல அவரு அரெஸ்ட் ஆனபிறகுதான் தெரிய வந்தது.

அவாள் எல்லாம் வேதத்தை சரியா ஓதலியா? பொருளை/உட் பொருளை அறிஞ்சுக்கலியா? அதுக்குரிய ரிதத்துல மாடுலேஷன்ல உச்சரிக்கலியா அவிகளுக்கு ஏன் இந்த நிலை வந்தது?

ஜெயலலிதா பண்ணாத யாகமில்லே, ரஜினியும் யாகம் பண்றாரு, சரத்,விஜய்காந்த் ,திராவிட பராம்பரியத்தில் வாழும் கடைசி அத்யாயமான கலைஞர் குடும்பத்தாரும் யாகம் பண்றாய்ங்க. யாகம் வேத கோஷமில்லாமயே நடக்குதா? ஏன் புட்டுக்குது? யாகத்துல,வேதத்துல விஷயம் இருந்திருந்தா அவிக வாழ் நாள் முடியற வரை ஜெ தான் முதல்வரா இருந்திருக்கனும். அத்தனை யாகம் பண்ண ஜெவோட கட்சி பெண்ணகரத்துல ஏன் டெப்பாசிட் இழக்கனும்?

நான் சொல்றது ஒன்னேதான். மனித குல நலம், மேம்பாடு முக்கியம். அதுக்கு நீ யாகமாச்சும் பண்ணு, வேதமாச்சும் ஓது. ஆனால் அதுல ஒர்த் இருக்கா இல்லியானு நிரூபிச்சுட்டு பண்ணு. அதை விட்டுட்டு "ஃபிலிம்"காட்டி அரசு பணத்தை ,அப்பாவிங்க பணத்தை கரியாக்கற உரிமை உங்களுக்கில்லே.

சீக்ரெட்:

கிருஷ்ணர் இந்த வாக்கியத்தை சொல்லியிருப்பாருனு தான் தோணுது.ஏன்னா அறிவுள்ள பிராமணனுக்கு வேதம் தேவையில்லனு நெத்தியடியா

சொல்லியிருக்காரு.

உவமைகள் அய்யரோடதா இருந்தாலும் கான்செப்ட் கிருஷ்ணாவோடதாதான் இருந்திருக்கனும். ஆனால்பிராமணன் என்ற வார்த்தைக்கு பிரம்மத்தை (இயற்கையை) அறிந்தவன் என்ற பொருளை ஏத்துக்கிடறதா இருந்தா இந்த ஸ்டேட் மெண்டுக்கு ஓ போட நான் ரெடி

யுத்தம் செய்யமாட்டேன் என்று முரண்டு பிடிக்கும் அர்ச்சுனனை யுத்தம் செய்யும்படி மோட்டிவேட் செய்ய கிருஷ்ணர் கூறுவதாய் நூலாசிரியர் இவ்வாறு கூறுகிறார்.

//எந்த தேவர்களை மனதில் எண்ணி இந்த வேள்வியை செய்தோமோ அந்த தேவர்கள் உங்களுக்கு விரும்பிய சுகங்களை எல்லாம் தருவார்கள்//

தேவர்கள் என்றால் யார்? இந்த நிலவுலகில் வாழ்வாங்கு வாழ்ந்து முடித்த மனிதர்கள் குறித்த மிகைப்படுத்தப்பட்ட நினைவுகளின் உருவகம் என்று கொள்ளலாம். அவர்களின் எண்ண அலைகள் அதற்கேற்ற மூளைகளை உசுப்பேத்துகின்றன. (முன்னாள் கிரிக்கெட் வீரர் கோச்சாக மாறுவது போல)

//எந்த தேவர்களை மனதில் எண்ணி இந்த வேள்வியை செய்தோமோ அந்த தேவர்கள் உங்களுக்கு விரும்பிய சுகங்களை எல்லாம் தருவார்கள்//

ஒரு காரியம் நல்லபடியா முடிய எத்தனையோ சக்திகள் மனிதனுக்கு உதவுது. அதுல தேவர்களுக்கும் ( நான் சொன்ன டெஃபனிஷன் ரிப்பீட்டு) பங்கு இருக்கு. அப்பிடியா கொத்த பார்ட்டிங்க எவனோ பாடுபட்டு விளைவிச்ச பொருட்களை நெருப்புல போட்டு வீணாக்கினா சந்தோசப்படுவாய்ங்களா? அவிக (அண்டை வெளில மிதக்கற அவிகளோட நினைவுகள் அண்ணாச்சி) என்னத்த எதிர்பார்த்து நமக்கு உதவினாய்ங்க.

அட ஒரு ரிட்டையர் கிரிக்கெட் ப்ளேயர் புது பையனுக்கு கோச்சிங் தரார். பையன் பெரிய ப்ளேயர் ஆகிறானு வைங்க. அப்போ அந்த பையன் என்ன செய்தா கோச் குஜிலி ஆவாரு? பழைய இந்தி சினிமாவுல அமிதாப் மாதிரி மீடியா முன்னாடி லேசா குனிஞ்சு அவர் காலை தொட்டு கும்பிட்டாலே போதும். செமை குஜிலி ஆயிருவாரு. அட.. இதை கூட நீசனான கோச் தான் எக்ஸ்பெக்ட் பண்ணுவான். சரியான் கோச்சோட நிலை என்னவா இருக்கும்? அவர் ட்ரெயின் பண்ண பையன் நல்ல படி ஆடினாலே அவருக்கு செம குஷி ஆயிரும்.

ஆனால் இந்த தேவர்கள் மட்டும் வேள்விகள் ( தங்கம்,வெள்ளி, தானியங்களை நெருப்புல போட்டு நாசம் பண்றது) பண்ணாதான் சந்தோசப்படுவாய்ங்களாம். அடிஷ்னலா நாம விரும்பின சுகங்களையெல்லாம் தருவாய்ங்களாம்.

நெருப்பை பத்தி ஓஷோ சூப்பரா அனலைஸ் பண்ணியிருக்காரு. மனுஷனுக்கு ஆரம்ப காலத்துல பெரிய சவால் இரவின் இருட்டு. அகஸ்மாத்தா ஏற்பட்ட நெருப்பு வெளிச்சத்தை கொடுத்தது.அதுல போட்ட மாமிசத்தை ருசியாக்கி கொடுத்தது. குளிர்ல சூட்டை கொடுத்தது. கச்சா முச்சானு வேட்டை கிடைச்சப்ப ஒரு குஜிலில தன் கிட்டே இருக்கிற விலை உயர்ந்த பொருட்களை நெருப்புல போட்டான் கற்கால மனிதன்.இதுலயாவது ஒரு அர்த்தம் இருக்கு.

ஆனால் கால ஓட்டத்துல நெருப்புக்குரிய முக்கியத்துவம் குறைஞ்சிக்கிட்டே வந்துருச்சு. இந்த பத்தில வேள்வியை ஹைலைட் பண்ணாலும் பல இடங்கள்ள வேள்வி விஷயத்துல ஜகா வாங்கறாரு நூலாசிரியரு. காரணம் என்னன்னா..கீதை சொல்லப்படற காலத்துலயே நெருப்புங்கறது வீட்டு பொருளாயிருச்சு. ஆனாலும் சொம்மா ஒரு புள்ளி வைக்கிறாரு. நம்பறவன் நம்பட்டுமே " நம்மவா" பொழப்பு ஓடற வரைக்கும் ஓடட்டுமேனு பட்டும் படாம கேன்வாஸ் பண்றாரு.

கீதை சொல்லப்படற காலத்துலயே இதான் நிலைமை. ஆனால் அவாள்

இன்னைக்கும் திருந்தலிங்கண்ணா.

இன்னைக்கு இருட்டை விரட்ட தாமஸ் ஆல்வா எடிசன் கண்டுபிடிச்ச பல்பு இருக்கு, மின்சாரமிருக்கு, ஆற்காடு வீராசாமி புண்ணியத்துல பவர் கட்டே வந்தாலும் ஜெனரேட்டர் இருக்கு, மாமிசத்தை சமைக்க எலக் ட்ரிக் ஓவன் இருக்கு, குளிர் காலத்துல சூட்டை கொடுக்க ஹீட்டர் இருக்கு. தீ தான் தேவைன்னா ஒரு ரூபா நெருப்பு பெட்டி இருக்கு. என்னா மயித்துக்கு இன்னைக்கும் யாகம்,வேள்வி பண்றானுங்க?

மேலும் கண்ணன் சொல்றாராம்.

//அவர்களுக்கு( தேவர்களுக்கு) எதாவது கைமாறு செய்யாமல் அவர்கள் கொடுப்பதை உண்பவன் திருடன்.//

நியாயத்தை பாருங்க. கைமாறே எதிர்பார்க்காத பார்ட்டிங்கள வச்சி பூச்சி காட்டி இவிக எந்த வேலை வெட்டியும் பண்ணாம அடுத்தவன் உழைப்பை நெருப்புல போட்டு சாம்பலாக்க, தட்சிணைங்கற பேர்ல சகட்டு மேனிக்கு லவட்டிக்கிட்டு போகத்தான் கைமாறு, விளக்குமாறுனு ஃபிலிம் காட்டறாய்ங்க. இவிகளே உழைப்பு திருடர்களா இருந்துக்கிட்டு இவிகளுக்கு திருட்டு கொடுக்காம பகுத்தறிவோட வாழறவனை திருடங்கறாய்ங்க.

சுரண்டலுக்கு பட்டம் கட்டற இந்த பகவத்கீதைய தான் சகல வேத, உபனிஷத், புராண இதிகாசங்களுக்கு பிரமாணமா அங்கீகரிச்சுருக்காய்ங்க. இதை இன்னைக்கும் அனுமதிக்கலாமா?

//வேள்வி செய்து அதில் மிஞ்சுகிற உணவை உண்ணும் நல்லவர்கள் எல்லா பாவங்களில் இருந்தும் விடுதலை அடைகிறார்கள்.//

பாருங்கய்யா இந்த அ நியாயத்தை

வேள்வி செய்து - அதாவது காசை கரியாக்கி ,

அதில் மிஞ்சுகிற  உணவை - அதாவது இந்த பஞ்ச கச்சங்கள்ளாம் லவட்டற வரை லவட்டிக்கிட்டு மறந்தோ, இல்லே ரிஜெக்ட் பண்ணிட்டோ போனதை ,

உண்ணும் நல்லவர்கள் - இளிச்ச வாயர்கள்

எல்லா பாவங்களிலிருந்தும் விடுதலை பெறுகிறார்களாம். அடங்கொப்புராணெ .. உழைச்சவன் , விளைவிச்சவன் தன் உழைப்பின் பலனை, விளைச்சலை சும்மா இருக்கிற இந்த வெட்டி ஆ:பிசருங்களுக்கு கொட்டி கொடுத்துட்டு நெருப்புல கொட்டிட்டு மிச்சமாறதை சாப்பிடனும். அப்படி சாப்பிட்டா எல்லா பாவங்கள்ளருந்தும் விடுதலை கியாரண்டி.

ஆமா அரை அடி நிலத்தை கூட உழாம, ஒரு சொட்டு வேர்வை கூட சிந்தாம அல்லாத்தயும் லவட்டிக்கிட்டு போற இவிக பாவம் ஒழியனும்னா என்ன பண்ணனும்?  யாக குண்டத்துல குதிக்கனுமா?

// தனக்காக மட்டுமே உணவு சமைக்கும் பாவிகள் அந்த உணவை சாப்பிடுவதில்லை.பாவத்தையே சாப்பிடுகிறார்கள்.//

இது அந்த காலத்துலயெ பகுத்தறிவாளர்கள் இருந்திருக்காய்ங்கன்ற விஷயத்தை சொல்லாம சொல்லுது. அவிக (யாகம்,வேள்வி இத்யாதி பண்ணாதவுக பாவத்தை சாப்பிடறாய்ங்களாம்.

ஏன்யா உழைச்சு , நெருப்புல கொட்டி, உங்களுக்கு கொட்டிக்கொடுத்து மிச்சத்தை தின்னா அது புண்ணியம்.

இந்த உட்டாலக்கடி வேலையை எல்லாம் நம்பாம என் உழைப்பு நான் திங்கறேனு தின்னா அது பாவத்தை திங்கறதா ?

உழைக்காம திங்கற நீங்கதானய்யா பாவத்தை திங்கறவுக..

//உணவினால் உயிர்கள் வாழ்கின்றன . மழையினால் உணவு தோன்றுகிறது.

வேள்வி செய்வதால் மழை வருகிறது. வேள்வி என்பது செய்கையில் இருந்து பிறப்பது.//

முதல் வரியை விட்டுருங்க. இது அண்ணா கழகத்தை குடும்பமாக கருதினார். கலைஞர் தன் குடும்பத்தையே கழகமாக கருதுகிறார்ங்கற மாதிரி உலகறிஞ்ச உண்மை. இரண்டாவது வரிய பாருங்க:

//வேள்வி செய்வதால் மழை வருகிறது//

நாலாம் வகுப்பு படிக்கிற பையன கேளுங்க மழை எப்படிரா வருதுன்னு. அவன் சொல்வான். குளம்,குட்டைல இருக்கிற தண்ணியெல்லாம் ஆவியாகி மேகத்துல சேருது, குளிர்ந்த காற்று வீசும்போது மேகம் குளிர்ந்து மழையா பொழியுது. கர்னாடக அணையெல்லாம் ரொம்புது. ஆனா அவிக அணைய திறந்து தண்ணிவிடமாட்டாய்ங்க

இந்த எளிய உண்மை அண்ட சராசர பிரபஞ்சங்களையும் படைச்சு,காத்து ரட்சிக்கிறதா சொல்லப்படற கண்ணனுக்கு தெரியாதா? வேள்வி செய்வதால் மழை வருதாம். வேள்விங்கறாய்ங்கல்ல . வேள்வின்னா என்ன கண்டதையும் தூக்கி நெருப்புல போடறது. அப்படி போட்டா புகை வரும்.

ஒரு வேளை சுருள் சுருளா போற புகை மேகமா மாறும், மேகம் மழைய பொழியும்னு குருட்டு கணக்கோ? இதை ஊரை அடிச்சு உலைல போட்ட பணக்காரன்ல இருந்து , சர்வீஸ்ல இருக்கிறச்ச வெறுமனே நாற்காலிய தேச்ச அரசு ஊழியன்ல இருந்து படிக்கிறான். கேட்கிறான். இன்னமும் இந்த உதவாக்கரை நூலுக்கு விளக்க உரைகள் வந்துகிட்டே இருக்கு. மானம் கெட்ட,அறிவு கெட்ட சூத்திர கும்பல் வாங்கி படிக்குது, கேட்குது.( ஆமாங்கண்ணா நித்யானந்தா கூட ஒரு விரிவிரையாவது வெளியிட்டிருக்கனுமே.

அதான் கீதையே சொல்லுதே "அழிவில்லாத, பிறப்பில்லாத ஒன்னை உணர்ந்தவன் யாரை கொல்றான்"ன்னு ஒருவேளை இதை தன்னோட பல்லேலக்கா வேலைக்கு அப்ளை பண்ணிக்கிட்டுதான் அந்த கருமத்தையெல்லாம் அரங்கேத்தி மகிழ்ந்தாரோ?

இங்கு நவகிரக தோஷங்களுக்கு நவீனபரிகாரங்கள் தொடருக்கான முன்னுரையில் யாகம்/வேள்விகள் பற்றி எழுதியதை குறிப்பிடுவது மிக பொருத்தமாக இருக்கும்.

யாகம் என்றால் என்ன? (செவ்வாய் காரகத்வம் வகிக்கும்) நெருப்பை வளர்த்து பல விலையுயர்ந்த பொருட்களை அதில் போட்டு விடுவதே. இதனால் பெருமளவு செவ்வாய்க்குரிய தோஷங்கள் குறையும் (செவ்வாய் நெருப்புக்கு அதிபதி என்பதால்). யாகத்தில் சமர்ப்பிக்கப்படும் பொருட்கள் எந்தக் கிரகத்தின் அதிகாரத்துக்குட்பட்டவையோ, அந்தக் கிரகத்தின் தோஷங்களும் குறையும். (உம்) பட்டாடைகளுக்குச் சுக்ரன் அதிபதி.

யாகங்கள் சிறப்பான பலனை தரவேண்டுமானால் செவ்வாய் லக்னம் முதற்கொண்டு எத்தனையாவது வீட்டில் எந்த ராசியில் நின்றதால் தோஷம் ஏற்பட்டுள்ளது என்பதைக் கவனிக்க வேண்டும் (உம்) செவ் 5-ல் நின்றதால்

தோஷம் ஏற்பட்டுள்ளது என்றால் 5 என்பது புத்தி ஸ்தானம், செவ்வாய்க் குரிய கடவுள், சுப்ரமணியர், சுப்ரமணியரைப் புத்தியில் நிறுத்துவதால் (தியானிப்பதால்) தோஷம் குறையுமா? வெறுமனே யாகம் வளர்த்து பொருட்களை அக்னிக்குச் சமர்ப்பிப்பதால் தோஷம் குறையுமா? யோசித்துப்பாருங்கள்!

செவ்வாய் 2–டிலோ, 8-டிலோ, 12-டிலோ இருந்து தோஷத்தைத் தருவதானல் யாகம், தோஷத்தைக் குறைக்கும் என்று நம்பலாம், காரணம் 2-என்பது தனபாவம், செவ்வாய் நெருப்புக்கு அதிபதி, ஜாதகரின் தனம் நெருப்பில் நாசமாக வேண்டும் என்பது பலன், 8-என்பது ஆயுள்பாவம், பெருநஷ்டங்களைக் காட்டும் இடம், 12-என்பது விரய பாவம், நஷ்டங்களைக் காட்டும் இடம், இவ்விடங்களில் செவ்வாய் நின்றால் நெருப்பால், எதிரியால், ரத்தம்,எரிச்சல் தொடர்பான வியாதிகளால் நஷ்டங்கள் ஏற்பட வேண்டும் என்பது பலன்,

யாகம் செய்வதால் செவ்வாய் தன் அதிகாரத்துக்குட்பட்ட நெருப்பால் கண்டதையும் நாசம் செய்து விடுவதற்கு முன்பு நாமே முன்வந்து அக்னிக்குப் பொருட்களைச் சமர்ப்பிக்கிறோம்.

உபரியாக யாகங்களை நடத்தித்தரும் பிராமணர்களுக்குத் தட்சிணை தருவதால் குருக் கிரகத்தின் தோஷம் குறையும்.

ஆனால் செவ்வாய்க்குரிய தோஷத்தை குறைக்க யாகம்தான் செய்யவேண்டும் என்ற கட்டாயமில்லை. அங்கம் அறுபட்டவர்கள், தீ காயம் உடையவர்கள், பெரிய அறுவை சிகிச்சைக்குட்பட்டவர்கள் அக்னி முக தொழிலினர், போலீஸார், ராணுவத்தார், பட்டாசு தொழிலாளர்கள் ஆகியோருக்கு தங்கள் பிரச்சினைகளின் தீவிரத்திற்கேற்ப கஞ்சத்தனமில்லாமல் உதவி செய்தாலே உரிய பலனை பெறலாம். இன்னும் சூட்சுமமாக சொல்ல வேண்டுமானால் செவ்வாய் தொடர்பான பொருட்களையே தரலாம். உ.ம் பெட் ரோல்,டீசல்,மண்ணெண்னை, கேஸ், எலக்ட் ரிக் உபகரணங்கள்

இதைக்காட்டிலும் செவ்வாய் தோஷத்தால் ரத்த சேதம் உறுதி எனும் போது நாமாகவே ரத்ததானம் செய்துவிட்டால் விபத்து தடுக்கப்பட்டு விடுமல்லவா?

ஆனால் இதையெல்லாம் ஆராயாது குருட்டுத்தனமாக பொருட்களை நெருப்பிலிட்டு வீணாக்குவது சமூக பொறுப்பின்மையையே காட்டுகிறது.

பூபால் பீடி குடிக்கும், பர்க்லி சிகரட் புகைக்கும், கெட்ட வார்த்தை இல்லாது பேசவே முடியாது தவிக்கும், எனக்கு தோன்றிய மேற்படி யோசனை கூட தோன்றாதவன் கடவுளாக இருக்கமுடியுமா?

சமூக பொறுப்பற்ற காட்டு மிராண்டித்தனமான யாகம்/வேள்வி இத்யாதிக்கு கேன்வாஸ் செய்யும் பகவத் கீதை பரம் பொருளான கண்ணனால் சொல்லப்பட்டதல்ல, ஒரு பிராமணீய அகங்காரத்தின், சர்வைவல் இச்சையின் எச்சம் மட்டுமே என்பதற்கு இதைவிட ஆதாரம் என்ன தேவை?

போன அத்யாயத்துல யாகம், வேள்வி இத்யாதியோட குறுக்கு வெட்டு தோற்றத்தை படம் வரைஞ்சு பாகங்கள் குறிச்சோம். யாகம்/வேள்வி செய்வதால் மழை வராதுங்கற சங்கதி நாலாங்கிளாஸ் படிக்கிற கால் டிக்கட்டுக்கு கூட தெரிஞ்சிருக்கும்போது கண்ணன் எப்படி// வேள்வி செய்வதால் மழை வருகிறது.//என்று சொல்லியிருப்பார். ஆக இப்ப செலாவாணில இருக்கிறகீதைய சொன்னது கண்ணனில்லே ஆரோ ஒரு பஞ்ச கச்சம்னு புரிஞ்சிருக்கும்னும் நினைக்கிறேன்.

மேற்படி ஸ்டேட்மெண்ட்ல இந்த கடைசி பார்ட்டை பாருங்க

//வேள்வி என்பது செய்கையில் இருந்து பிறப்பது.// வேள்விக்கு நெருப்புல அள்ளிக்கொட்ட தானியம் வேணும், வெட்டிப்போட ஆடு மாடு வேணும். இதெல்லாம் சொம்மா திண்ணைல உட்கார்ந்து விசிறிகாம்பால முதுகை சொறிஞ்சிகிட்டிருந்தா கிடைக்குமா? கிடைக்காது. அதனால தான் //வேள்வி என்பது செய்கையில் இருந்து பிறப்பது.//ங்கறார் நூலாசிரியர். செய்கைன்னா நம்ம மொழில உழைப்பு, கீதை மொழில கர்மயோகம்.

இருக்கிற சூத்திரன் எல்லாம் உழுது, விதைச்சு, நீர் பாய்ச்சி, களையெடுத்து ,அறுத்து களத்து மேட்ல கொண்டு சேர்த்தாதானே இவிக நெருப்புல அள்ளிப்போட முடியும்.

இன்னைக்கு ஒரு மொபெட்டோட சைலன்சர்லருந்து வெளி வர்ர புகைக்கே லிமிட்டேஷன் வச்சிருக்காய்ங்க. ஆனால் இன்னைக்கும் இந்த பாதகங்க பண்ற யாகத்துக்கும், அதுலருந்து வெளியேர்ர புகைக்கும் கட்டுப்பாடில்லை. எங்கன போயி முட்டிக்கிறது.

அடுத்த பத்திய பாருங்க. இதுவும் லார்ட் கிருஷ்ணாவோட டயலாக் தான்.

//தொழில் பற்றிய இந்த கரும யோகத்தை நான் முதலில் சூரியனுக்கு சொன்னேன். சூரியன் மனுவுக்கு சொன்னான். மனு இஷ்வாகு மன்னருக்கு கூறினான்//

நான் இந்த தொடரோட ஆரம்பத்துல ஒரு மேட்டர் சொன்னேன். ஒரு காலகட்டத்துக்கு முந்திய எந்த நூலுமே இப்படித்தான் ஆரம்பமாகும்னு. போனியாகாத டிவி சேனல்ஸ் மறு ஒளிபரப்புலயே காலத்தை கழிக்கிற மாதிரி கிருஷ்ணன் இடம்,பொருள், ஏவல் எதையும் யோசிக்காம யுத்தரங்கத்துல ப்ரைம் டைம்ல போனியாகாத கிழவாடியோட பேட்டிய ஒளிபரப்பின மாதிரி இந்த பழைய பஞ்சாங்கத்தை விவரிக்க ஆரம்பிப்பாரா?

இவர் சூரியனுக்கு சொன்னதை கூட மன்னிக்கலாம் . மனுவுக்கு சொல்றாராம். மனு யாருனு தெரியுமில்லியா? நம்ம அரசியல் சட்டத்தை ட்ராஃப்ட் பண்ண பி.ஆர்.அம்பேத்கர் மாதிரி வர்ணாசிரம தர்மத்தை டாக்குமென்டைசேசன் பண்ண பார்ட்டி இவருதான். இது எங்கத்தி நியாயம்யா?

ஒரு வேளை இந்த தவறை திருத்திக்கத்தான் கண்ணன் கீதைய சொல்லி அர்ச்சுனனை கொம்பு சீவி விட்டு யுத்தத்தை நடக்க வச்சு குலதர்மத்தை கொன்னு போட்டாரோ என்னவோ?

அடுத்த பத்திய பாருங்க..

//அவரவர் இயற்கைக்கும் குணத்துக்கும் செயலுக்கும் தக்கபடி நான்கு வர்ணங்களையும் நான் தான் உண்டாக்கினேன்//

இவிக சொல்ற வர்ணம் எப்படி உருவாச்சுனு புராணங்கள்ள இருக்கிற தகவல் என்னன்னா பிரம்மனோட தலை தோள்கள், வயிறு, அ பாதத்திலிருந்து மனிதர்கள் பிறந்து வந்தார்களாம். தலைலருந்து வந்தவன் பிராமணன். தோள் -க்ஷத்திரிய குணம், வயிறு - வைசிய குணம் , பாதம் - சூத்திர குணம்.

பாப்பா எப்படி பிறக்குதுன்னு பாப்பாவுக்கு கூட தெரியற காலம் இது. ஆனால் கோகுலத்துல கண்ட பாப்பாக்களோட தாப்பா போட்ட கண்ணனுக்கு தெரியாதா பாப்பா எப்படி பிறக்குதுன்னு. பின்னே ஏன் வர்ணாசிரம தர்மத்தை தூக்கி பிடிக்கிறதோட நான் தான் உண்டாக்கினேன்னு ஏன் சொல்றாரு? பிரம்மனோட பல அவயங்கள்ளருந்துதான் நாலு வர்ணத்தார் உருவானாங்கனு புராணங்கள்ள சொல்லப்பட்டிருப்பது அவருக்கு தெரியாதா?

மனிதர்கள் உருவாவது ஒரே ஒரு அங்கத்துலருந்துதான்னு படு கிட்டனான கிட்ணபரமாத்மாவுக்கு தெரியாதா?

வர்ணத்தை உருவாக்கினது சனார்த்தனனில்லே. சனம். குறிப்பா சொன்னா பிராமண இனம். இந்த இனம் எப்படி உருவாச்சுன்னு கூட ஒரு பதிவுல சொல்லியிருக்கேன்.

மனிதன் அடர் காடுகளில், குகைகளில் குழுக்களா வாழ்ந்தப்போ ஒரு சில சூட்சும புத்தி படைச்ச நபர்கள் மழை,வெயில்,புயல்,வெள்ளம் மாதிரி இயற்கை உற்பாதங்களை முன் கூட்டி கணிச்சி தலைவனுக்கு சொல்லியிருக்கனும். ஆரம்பத்துல நாலு பேரை மாதிரி எல்லா வேலையும் பார்த்துக்கிட்டே இந்த வேலையும் செய்திருப்பாய்ங்க. போக போக ரொட்டீன்லருந்து குழுத்தலைவன் இவிகளுக்கு விதிவிலக்கு கொடுத்திருக்கலாம் அல்லது இவிக டிமாண்ட் பண்ணி விதிவிலக்கு பெற்றிருக்கலாம். ஒரு இந்தியாவுலயே இல்லை எந்த நாட்டு சரித்திரத்தை பார்த்தாலும் பிராமண இனத்தை போன்ற ஒரு இனம் நிச்சயமா இருக்கும். இந்த ஆலோசகர் பதவி தகுதியை பொருத்தல்லாது வாரிசுரிமையா மாறியிருக்கலாம்.

இவிக குழுத்தலைவனோட க்ளோசா இருந்துக்கிட்டு மத்த பயலெல்லா ஒத்துமையா இருந்தா நமக்கு கொடுக்கப்பட்டிருக்கிற விதிவிலக்குகளை கேள்வி கேட்க ஆரம்பிச்சுருவான்னு இப்படி ஒரு பிரிவினைய ஏற்படுத்தியிருக்கலாம். ஜீன் கலப்பு, இனக்கலப்பு ஏற்பட்டுராம இருக்க கலப்பு மணம் தடை செய்யப்பட்டிருக்கலாம். இதனால கார்பன் காப்பி மாதிரி, ஜிராக்ஸ் காப்பி மாதிரி இனப்பெருக்கம் நடந்திருக்கலாம்.

ஆக வர்ணங்களை (அதாவது மனிதர்களின் இயல்பை, குணத்தை ) உருவாக்குவது கண்ணனோ, கடலை பர்பியோ கிடையாது. விந்து ..விந்துவில் உள்ள ஜீன்கள். ஒரு செல் அங்கஜீவில இருந்து புதுபுது உயிர்கள் உருவாகிட்டே போனாலும்

ஒரே மனிதனின் ஜீனில் குரங்கு,பாம்பு, நாய், நரிகளோட குணங்கள், லட்சணங்கள் கூட இருக்க வாய்ப்பிருக்கு.

டார்வின் தன்னோட எவால்யூஷன் தியரில மனிதனோட மண்டைக்குள்ள ஒருவனுக்கு ஒருத்திங்கற கான்செப்ட் ஒரு வித பாம்புகளில் இருந்து வந்திருக்கலாங்கறாராம்.

(அந்த இனத்துல ஆண் பாம்பு உடலுறவுக்கு அப்புறம் பெண் பாம்போட உடலுறவு துளைய ஒருவித லிக்விடால சீல் பண்ணிருமாம். )

டார்வின் தன்னோட எவல்யூஷன் தியரியை என்னைக்கோ எழுதி முடிச்சுட்டாரு. அதை உறுதிப்படுத்தற மாதிரி இன்னைக்கு பேப்பர் நியூஸ் .

ஒரு தம்பதி. மனைவி பாவம் "ஆத்தா" வீட்டுக்கு போய் வரேன்னிருக்கா. அதுக்கு இந்த ஆம்பள நாய் என்ன பண்ணுச்சி தெரியுமா? கோணி ஊசில இரும்பு கம்பியை கோர்த்துக்கிட்டு அவளோட ....................ஐ தைச்சிருக்கு. இப்போ உயிருக்கு ஆபத்தான நிலைல அந்த பெண் ஹாஸ்பிட்டல்ல அட்மிட்.

அதே மாதிரி சதிங்கறது சிம்பன்சிலருந்து வந்திருக்கலாங்கறார். மேற்படி குரங்கு கும்பல் தலைவனை ஒழிச்சு கட்ட மத்த குரங்குகள் ஒன்னு சேர்ந்து அது தூங்கும்போது பெரிய கல்லா தூக்கி போட்டு கொன்னுருமாம்)

ஆக வர்ணங்கள் 4 அல்ல. மனித இனத்தின் குணங்கள் கீதைல சொல்ற மாதிரி 3 இல்லே. இதையெல்லாம் உருவாக்கினது கண்ணன் இல்லே. நான் கூட மனிதர்களை இரண்டு வகையா பிரிச்சு (சூரிய,சந்திர மனிதர்கள்) ஒரு பதிவு போட்டேன் இல்லேங்கலை. என் பதிவு ஒரு அவதானிப்பு மட்டுமே.

கீதைல சொல்ற வர்ணம், அவிகளுக்குண்டான குணங்கள் கூட ஒரு அவதானிப்பா இருக்கலாம். ஆனால் வர்ணத்தையோ,குணத்தையோ ஒரு கண்ணனால உருவாக்கிரமுடியாது. இந்த பிரிவினை (ஸ்தூல பிரிவினையில்லிங்கோ.. குண நலன் கள்) பல லட்சக்கணக்கான வருஷங்களில் லாங் ரன்னில்,லாங் ப்ராசஸில் ஏற்பட்டிருக்கலாம்.

இந்த குண வேறுபாடுகள் உண்மையாகவே இருந்தாலும் இந்த வர்ணம்,குணம் இத்யாதியெல்லாம் வெறுமனே பிறப்பின் மூலம் ஏற்பட வாய்ப்பே கிடையாது.

ஒரே தகப்பனுக்கு பிராமண, க்ஷத்திரிய,வைசிய, சூத்திர குணங்கள் கொண்ட 4 பிள்ளைகள் பிறக்கலாம். இதை நிறைய குடும்பங்களில் பார்த்திருப்பீர்கள். ஆனால் கண்ணன் வர்ணத்தை நான் தான் உருவாக்கினேன்னு சொல்றாராம். அப்படின்னு ஐயரு சொல்றாரு.

கீதாசிரியர் கீதைல கண்ணனை பல கோணங்கள்ளருந்து காட்டறதால தான் இந்த நக்கலுக்கு வழி ஏற்பட்டது.

கீதைய சொல்ற கண்ணன் சில சந்தர்ப்பத்துல ஒரு இன்டிவியூஜுவலா , துவாரகையோட மன்னனா, அர்ச்சுனனோட ஃப்ரெண்டா ஃபோக்கஸ் ஆவறார்

சில சமயம் இயற்கையா ஃபோக்கஸ் ஆவறார்.

ஒரு கண்ணன் மட்டுமில்லே ஒவ்வொரு மனிதனும் இந்த இயற்கையின் மீனியேச்சர்தான். ஜாதக சக்கரத்தை நேரா நிமிர்த்தி நிக்க வச்சா அதுதான் மனிதனோட உடல். ராசிச்சக்கரத்துல முத ராசியான மேஷம் தலையையும்,

கடைசி ராசியான மீனம் பாதத்தையும் காட்டுது. இடையில் உள்ள 10 ராசிகள் உடலின் இதர பாகங்களை வரிசை கிரமத்துல காட்டுது. பால் வீதி, நட்சத்திர மண்டலம், கிரக சஞ்சாரம்லாம் நம்ம பாடிலயும் நடக்குது.

ஒரே ஒரு வித்யாசம் என்னடான்னா இயற்கை அடையாறு ஆலமரம். மனிதன் ஃபோன்சாய்க் ஆலமரம். தட்ஸால்.

இதுவரை கண்ணனை தனி மனிதனா காட்டிக்கிட்டு வந்த கீதாசிரியர் படக்குனு இயற்கையின் பிரதி ரூபமா காட்டறார்.. இதை அடுத்து வர்ர வரில இருந்து இதை தெரிஞ்சுக்கலாம்.

//செயலற்றவனும், அறிவற்றவனுமாகிய நான் தான் நான்கு வர்ணங்களுக்கும் கர்த்தா என்பதை அறிந்துகொள்.//

இங்கே செயலற்றது, அறிவற்றதுன்னு கீதாசிரியர் சொல்றது இயற்கையைத்தான். நான்கு வர்ணங்களுக்கும் கர்த்தா இயற்கை தான். (ஜெனட்டிங்க் இஞ்சினீரிங்க்)

இதை இன்னும் கொஞ்சம் விளக்கமா சொல்றேன். அப்புறம் இருக்குது ஆப்பு..

//செயலற்றவனும், அறிவற்றவனுமாகிய நான் தான் நான்கு வர்ணங்களுக்கும் கர்த்தா என்பதை அறிந்துகொள்.//

இந்த வாக்கியத்துல வர்ர வார்த்தைகளுக்கு நேரடி அர்த்தம் எடுத்தா ரொம்ப அசிங்கமா இருக்கும். நேரடி அர்த்தத்தை சொல்லனும்னா

செயலற்றவனும் - வேலை வெட்டியில்லாதவனும்

அறிவற்றவனுமாகிய - முட்டாளுமான

ன்னு தான் சொல்லனும். ஆனால் இங்கே தான் நிறுத்தி நிதானமா ரோசிக்க வேண்டியிருக்கு.

கண்ணன் இங்கே படக்குனு தன்னை காலபுருஷனா, அதாவது ஒட்டு மொத்த இயற்கைக்கு மனித உருவா ஃபோக்கஸ் பண்றாரு.

இயற்கைக்கு செயல் இருக்காது. செயல்னா என்ன ? Action ! ஒரு காரியம். ஒரு செயல்பாடு. இதுல ரெண்டு வகை இருக்கு. ஒன்னு Action அடுத்தது ரியாக்சன். Action என்பது நோக்கத்துடன் கூடியது. இயற்கைக்கு நோக்கம் கிடையாது. ஸோ செயலும் இருக்காது. இயற்கை வந்து எப்பவுமே ரியாக்ட் தான் பண்ணும். நோக்கம் ஏற்படனும்னா அறிவு இருக்கனும்.அறிவுங்கறது என்ன ? தன்னை தான் இந்த இயற்கைல இருந்து வேறா உணர்ரது. இயற்கையோட பின்னி பிணைஞ்சிருக்கிற எந்த ஜீவராசிக்குமே அறிவுங்கறது கிடையாது. ஸோ நோக்கத்துடனான செயலும் இருக்காது. எல்லாமே ரிஃப்ளெக்ஸ் தான்.

ஜேம்ஸ் வாட் ஸ்டீம் இஞ்சின் கண்டுபிடிச்சாரு. அதை இயக்க நிலக்கரியை கச்சாமுச்சானு எரிக்க ஆரம்பிச்சோம். காட்டை அழிச்சோம். வயக்காடா மாத்தினோம். வயக்காட்டை ஸ்பெஷல் எக்கானமி ஜோனா மாத்தினோம். இப்போ குண்டி கழுவ தண்ணி இல்லே. இது இயற்கையோட செயலா ? இல்லே ..

அடுத்து ஒரு பத்துவருசம் மரமே வெட்டாம , மரம் நடறதே தொழிலா இருந்தோம்னு வைங்க. மழை கொட்டோ கொட்டுனு கொட்டும். இது இயற்கையோட செயலா ? இல்லே.

இயற்கைக்கு அறிவு கிடையாது. ஸோ நோக்கமும் கிடையாது. ஸோ செயலும் கிடையாது. ஜஸ்ட் எதிர்வினைதான். ஆக இவ்ளோ நேரம் தனிமனிதனா ஃபோக்கஸ் செய்யப்பட்ட கண்ணன் படக்குனு இயற்கைக்கு பிரதி ரூபமா ஃபோக்கஸ் ஆகிறார். இதுக்கு பின்னாடி பிராமண இனத்தோட பெரிய சதியே இருக்கு.

வடிவேலு பாணில கேட்கவேண்டியிருக்கு. ஏன்? ஏன் ? ஏன் ?

கீதாசிரியரே!

எதையோ சொல்ல வந்திங்க. நீங்க சொல்ல வந்த விஷயத்துல உங்களுக்கு சின்சியாரிட்டி இருந்தா உள் நோக்கம் எதுவுமில்லேன்னா நேரடியா நெத்தியடியா சொல்லிட்டு போக வேண்டியதுதானே.

ஒரு கட்டத்துல கிருஷ்ணனை ஒரு இண்டிவ்யூஜுவலா காட்டறிங்க. அடுத்த பத்திலயே இயற்கைக்கு பிரதி ரூபமா காட்டறிங்க. இந்த முரண்பாடுகளால தான் உங்க இனத்தை, உங்க நோக்கத்தை கெஸ் பண்ணி சிங்கப்பூர் பாணில பிரம்படி கொடுக்க முடியுது.

வர்ணத்த ஏற்படுத்தினது இயற்கைன்னா நானும் ஏத்துக்க தயார். ஏன்னா இயற்கை

ஃப்ளெக்ஸிபிள். பச்சை களி மண்ணு அதை எப்படி வேணம்னா மோல்ட் பண்ணிக்க முடியும்.

தாளி பத்து வருஷத்துக்கு கலப்பு திருமணத்தை கட்டாயமாக்கிட்டா உயர் தர கலப்பின மனிதர் கூட்டம் ஏற்பட்டுரும்.

இயற்கைக்கு ஒரு உருவம் கொடுத்து அதுக்கு சக்திமான் கணக்கா ஏக பில்டப் கொடுத்து இதான் ஃபைனல் இதை மீற முடியாது, மாத்த முடியாது, மாத்தினா

ஜேஜி கண்ணை குத்திருங்கற இடத்துலதான் உங்க இன புத்தி, அதோட நோக்கம்லாம் நீலப்படத்து பெண்ணோட அந்தரங்கம் மாதிரி வெட்ட வெளிச்சமாயிருது.

ஆரம்பத்துல வேள்வி/யாகம் பத்தி பெரிசா (வாயை) கிழிச்சிக்கிட்ட கீதாசாரியர் போக போக அடக்கி வாசிக்கிறார் பாருங்க . (காரணம் கீதை சொல்லப்படற காலத்துல நெருப்பு தன் முக்கியத்துவத்தை இழந்துருச்சு. வீட்டு பொருளாயிருச்சு. அதுக்கு எதையும் அர்ப்பணிக்கனுங்கற ஒரு கொண்டாட்ட உணர்வு போயிருச்சு. இருந்தாலும் கீதாசிரியர் நூல் விட்டு பார்க்கிறார்.சனம் ஏமார்ர வரை ஏமாறட்டுமேன்னு)

//பலவகையான விரதங்களை முறையாக கடைபிடிக்கும் முனிவர்களில் சிலர் பொருள்களை கொண்டு வேள்வி செய்கிறார்கள்.//

சொந்தமா சம்பாதிச்ச பணத்துல வாங்கி செய்யறதாயிருந்தா.பொருட்களை கொண்டு வேள்வி செய்யட்டும். வேணாங்கலை. (பொல்யூஷன் தான் இருந்தாலும் என்ன செய்ய தலைவருங்க செத்தா டயரை கொளுத்தி விட்டுர்ரானுங்க .. எதுனா கேட்க முடியுதா? மாசு கட்டுப்பாட்டு வாரியம் தான் தடை செய்யனும். நாம ஏதாச்சும் சொன்னா மத நம்பிக்கைன்னு அலம்பல் பண்ணுவாய்ங்க)

வேலை வெட்டி இல்லாத திண்ணைல கிடக்கிற இந்த பிரகிருதிங்க மேற்படி பொருட்களை இதர வர்ணத்தார்கிட்டேருந்து ஃபிலிம் காட்டி, பீலா உடான்ஸ் ,குண்டு, டுமீல் விட்டு ,ரைட் பண்றதைதான் நான் எதிர்க்கிறேன்.

ராஜயோகத்துல அஷ்டாங்க யோகம்னுவாங்க. அதுல யமம், நியமம்ங்கறதுக்கப்புறம் வர்ரது "பிரத்யாஹாரம்" இதுக்கு பிறருடைய பொருளை கவராதிருத்தல்னு அர்த்தம்.

கவருதல்னா லவட்டறது மட்டும்தான்னு  நினைச்சுராதிங்க. எதிராளி சொம்மா கொடுத்தா கூட வாங்க கூடாது. (இரும்பை வாங்கினா அவன் சனி உன்னை அடிக்கும், செம்பு வாங்கினா செவ்வாய், பித்தளை வாங்கினா சூரியன் இப்படி ஒவ்வொரு பொருளுக்கு ஒவ்வொரு கிரகம் அதிபதி. கொடுத்தவனுக்கு ரிலீ∴ப். வாங்கிக்கிட்டவனுக்கு ரிவிட். இது பொது விதி. இவிங்க அந்த காலத்துல இந்த மாதிரி சகட்டுமேனிக்கு லவுட்னதால இந்த காலத்துல நம்மாளு எம்.எல்.ஏ எம்பியா இருந்தா இவிக செக்ரட்ரி, ஐ ஏ எஸ்னு இருந்துக்கிட்டு குனிஞ்சு குனிஞ்சு வணக்கம் போட வேண்டியிருக்கு.

மாதா செய்தது மக்களுக்கு.

பிரத்யாஹாரங்கற இந்த விஷயம்  யோகசாதனைல வெற்றிய விரும்பறவங்க கடைபிடிக்க வேண்டிய நிபந்தனைமட்டுமில்லை ஊர் சனி நம்மை அடிச்சுராம இருக்க ∴பாலோ பண்ண வேண்டிய முக்கியமான டிப்.

இந்த இடத்துல என் அனுபவத்தை மட்டும் கொஞ்சமா சொல்லனும்.  நாம என்னதான் கடுமையா உழைச்சாலும் அதுக்கான கூலியை கொடுக்கிறான் பாருங்க அந்த கூலியோடவே அவனோட  கர்மமும் (வினை) ஒட்டிக்கிட்டு வந்துருது.

உங்க முதலாளி குடிகாரனா இருந்தா நீங்களும் குடிகாரனா மாற வாய்ப்பிருக்கு. உங்க முதலாளி ஊதாரியா இருந்தா நீங்களும் ஊதாரியா மாற வாய்ப்பிருக்கு . மேலும் அந்த பணம் உங்க முதலாளி கிட்டே இருந்தா எந்த வகைல செலவழியுமோ அதேவழில செலவாகவும் வாய்ப்பிருக்கு .டேக் கேர். இது தர்ம நியாயமா கிடைச்ச கூலிக்கான விதி. இன்னம் லவட்டிக்கிட்டு வந்தா அதனோட விளைவு எப்படியிருக்குமோ அனுபவிச்சவுக சொல்லனும்.

ஜோதிட ஆலோசனை கட்டணமா வர்ர தொகைகள் மேல கூட  அந்தந்த ஜாதகர்களோட ஜாதகங்களின் இம்பாக்ட் இருக்குங்கண்ணா.  இது நிலைமை,

இந்த இழவுல இவிக (லவட்டி, ஏமாத்தி,மிரட்டி, இரந்து சேகரிச்ச  பொருட்களை, எவனோட உழைப்புலயோ விளைஞ்ச ,உருவான, பொருட்களை  கொண்டு வேள்வி செய்வாய்ங்களாம். வேள்விகள்ள இருக்கிற பல வகைகள்ள இதுவும் ஒன்னாம் .  அப்படின்னு கண்ணன் சொன்னதா கீதை  சொல்லுது. இதை எப்படிங்கண்ணா நம்பறது?

வேள்விகளின் வகைகள் தொடர்கின்றன...

//சிலர் தவத்தால் வேள்வி செய்கிறார்கள்.//

தவம்னா என்ன? பத்மாசனம் ? மூக்கு  நுனியில் பார்வையை  நிறுத்தல் ? சுவாசத்தை கட்டுப்படுத்தல்?  பிராணயாமம் ?  எண்ணங்களை கவனித்தல்? எண்ணங்களின் இடையிலான இடைவெளியை கவனித்தல்?

சரி எந்த அர்த்தத்துல சொல்றாரோ கீதாசிரியர் மொட்டையா  தவம்னிட்டாரு. அதனால் விட்டுருவம். இன்னொரு இடத்துல இதே மேட்டர் வருது .அப்ப மாட்டுவம்லே.

(அரசியல்வாதிங்க ஊழலை கூட தவமா செய்றாய்ங்க..அவிகளும் கீதைய படிச்சிருப்பாங்களோ?)

சிலர் யோகத்தால் வேள்வி செய்கிறார்கள். யோகம்னா ? ராஜயோகம்?

சரிங்கண்ணா தவம்,யோகம் ரெண்டையும் விட்டுருவம். ஏன்னா இதனால எல்லாம் சமூக வாழ்வு பாதிக்கப்படறதில்லை. இதை காரணம் காட்டி சலுகைகள் கேட்காத வரை, விதிவிலக்குகள் கேட்காதவரை, இதை வச்சு நித்யானந்தா மாதிரி சுரண்டாதவரை நோ அப்ஜெக்சன். ஓஞ்சு போவட்டும்.

சில சாமியாருங்க கிட்ட உபதேசம் வாங்கனும்னா தங்க குச்சி கொண்டு போகனும். அந்த குச்சியால சாமியார் உங்க நாக்குல குறிப்பிட்ட பீஜாக்ஷரத்தை எழுதுவாரு. குச்சியை பல் குத்த வச்சிக்குவார். அடங்கொக்கமக்கா !

யாரு என்ன பீஜத்தை உச்சரிச்சா உடனடி லாட்டரி கணக்கா ஒர்க் அவுட்டாகும்னு ஒரு சமாசாரம் இருக்குங்கண்ணா கிருஷ்ணர் மாடுவிடாம பிழைச்சு கிடந்தா தனிப்பதிவே போட்ருவமில்லே..

எங்க ஊர்ல ஒரு யோகா சென்டர் இருக்கு. சென்டரோட ஹெட் தன் சொந்த அண்ணனோட சொத்து பிரச்சினைக்காக ரோட்ல கட்டிபுரண்டு சண்டை போட்டாரு.

பிரமிட் யோகா பத்தி தெரியும்ல. அதுக்கு ஃபவுண்டர் தாடி பத்திரியா .. இல்லே இல்லே சுபாஷ் பத்திரின்னு நினைக்கிறேன். ஒரு நாள் இவரு ஏதோ வென்யூல யோகா க்ளாஸ் கண்டக்ட் பண்ணிக்கிட்டிருக்காரு. ஒரு அம்மா பாவம் லேட்டா வந்த பதட்டத்துலயோ என்னமோ ரெண்டு நாற்காலிய நகர்த்தி கிகர்த்தி சத்தம் பண்ணிருச்சு உடனே சுபாஸு என்ன பண்ணாரு தெரியுமா? கச்சா முச்சானு திட்டி தீர்த்ததோட அந்தம்மாவ அறைஞ்சும் விட்டாராம். தெலுங்கு பேப்பர்லெல்லாம் நாறிப்போச்சு. இந்த மாதிரி தவம், யோகம்னா செவிட்லயே அறைங்க. தப்பே கிடையாது.

இவிக யோகா கத்துதர்ர பாஸு.. சபாஸு..

அடுத்த வரியை பாருங்க

//சிலர் கல்வியால் வேள்வி செய்கிறார்கள்.//

கல்வின்னா என்னங்கண்ணா?

(இந்த காலத்து கல்வியை போட்டு குழப்பிக்காதிங்க. இது ஆன்மீக முன்னேற்றத்துக்கு மட்டுமல்ல வாழ்க்கை பற்றிய புரிதலுக்கு கூட பத்து பைசாவுக்கு பிரயோஜனப்படாத கல்வி)

அந்த காலத்து கல்வி தெரியும்லியா? இந்த காலத்து சம்மர் கோர்ஸு மாதிரி இலக்கணம்,இலக்கியம் (பக்திதான் அதிகம்),வாழ்க்கைக்கு தேவையான திக்கு,திசை, கணக்கு போன்ற அம்சங்கள் அடங்கிய கல்வி. எல்லாமே பாட்டு வடிவத்துல இருக்கும். எல்லாத்தயுமே மனப்பாடம் பண்றது தான் மாணவர்களோட வேலை.

(இதே இழவை இந்த கூகுல் யுகத்துல கூட கல்வி நிறுவனங்கள் பின்பற்றுவதை என்ன சொல்ல?) வயித்துப்பாட்டுக்கான கல்வியாலயே வேள்வி செய்துர்ராங்களாம்.

இதுல இருந்து கீதை காலத்து நான் ப்ராமின் லிட்டரசி பர்சண்டேஜை கெஸ் பண்ண முடியுது. கீதாசிரியரான பிராமணோத்தமர் கல்வி கற்கறதை கூட அதாவது லோகாயத கல்வி , அதாவது வயித்துப்பாட்டுக்கான கல்வியை கூட வேள்வி கணக்குல சேர்க்கிறார்னா அந்த காலத்துல பிராமணரல்லாதோர் படிக்கவே போகலன்னு தான் கெஸ் பண்ண வேண்டியிருக்கு ,

இப்போ மாதிரி கண்ட சூத்திரப்பயலுவல்லாம் படிப்புல இறங்கியிருந்தா கீதை வேற மாதிரி சொல்லியிருக்கும்.

50 வருஷத்துக்கு முந்தி வெளியான பிராமணாள் எழுதின கதைகளை ஃபாலோ பண்ணியிருந்தா உங்களுக்கு அவிக எண்ண ஓட்டம் தெரிஞ்சிருக்கும்.

அவிங்களை பொருத்த வரை பிராமண குடும்பத்து பிராமண சிறுவர்கள் வேதம் கத்துக்கனும் . அதான் ஸ்ரேஷ்டம். ஏன்னா அதுதான் வித்தை. பிரிட்டீஷ்காரன் புண்ணியத்துல எல்லா சாதிக்காரனும் படிக்க போனதால மத்த கல்வியெல்லாம் அவித்தை, மிலேச்ச வித்தை, நீச வித்தை .ஆனால் விதியில்லாம "வயித்துப்பாட்டுக்காக " நீச வித்தை கத்த்க்க வேண்டியிருக்கேனு பாத்திரங்கள் புலம்பும்.

என்னடா கதைகளை ஆதாரமா காட்டறார் முருகேசனு நொந்துக்காதிங்க. கதைன்னா என்ன? வானத்துல இருந்தா குதிக்குது. எல்லாம் சமூகத்தோட , முக்கியமா சொன்னா மீடியாவை பிடிக்குள்ள வச்சிருக்கிற அவாள் வாழ்க்கையோட பிரதிபலிப்பு தான் இலக்கியங்கள்.

தி.ஜா.ராவோட அம்மா வந்தாள் படிச்சவுங்க ஜானகிராமனோட எழுத்து நடைல அப்படியே கரைஞ்சு போயிருப்பாய்ங்க. ஆனால் இப்போ உணர்ச்சிக்கு இடம் கொடுக்காம மேண்டேஜ் ஷாட்ல அந்த கதைய ஓட்டிப்பாருங்க. அம்மாக்காரி லோலாயி. யாரோ ஒரு பண்ணையார்க்கு முந்தி விரிச்சவ. அவளை அந்த கில்ட்டி உறுத்திக்கிட்டே இருக்கு. அதனால என்ன பண்றா ஒரு பையனை வேதம் கத்துக்க அனுப்பறா. இதையும் வெறுமனே கதைன்னிராதிங்க. இதெல்லாம் அவாள் வாழ்க்கையோட பிரதிபலிப்புத்தான்.

ஆக கல்வி பிராமண இனத்துக்கு மட்டும் அவெய்லபிளா இருந்ததால கல்வி கூட வேள்விதான்னு கீதை சொல்லுது. அடுத்த வரியை பாருங்க!

சிலர் ஞானத்தால் வேள்வி செய்கிறார்கள்.

அடங்கொப்புரானே ஏற்கெனவே நீங்க விட்டிருக்கிற பீலாக்களின் படி பார்த்தால் வேள்வி செய்தா ஞானம் வந்துரனும்லியா. அதென்ன அது ஞானத்தால வேள்வி செய்யறது?

எவனாச்சும்  ஒரே பை ப்ராடக்ட்லருந்து ப்ராடக்டை தயாரிச்சு அந்த ப்ராடக்டை வச்சு மறுபடி அதே பை ப்ராடக்ட தயாரிப்பானா?

தயிரை கடைஞ்சு வெண்ணை எடுத்தவன், மறுபடி  வெண்ணையை கடைஞ்சு தயிர் எடுப்பானா? என்னங்கடா  லாஜிக்கு ?

அடுத்தவரியை பாருங்க

// பொருளைக்கொண்டு செய்யப்படும் வேள்வியை காட்டிலும் ஞான வேள்வியே சிறந்தது.//

பாவம் அய்யருக்கே கில்ட்டி வந்துருச்சா இல்லே என்னடா இது நெருப்பு வீட்டுப்பொருளாயிருச்சு இப்ப போயி வேள்வி வேள்வினு தவளை மாதிரி கூச்சல் போட்டுட்டமே .. சனம் நம்மை அண்டர் எஸ்டிமேட் பண்ணிருமோ, அவுட் டேட்டட் ஃபெலோன்னிருமோ, நம்ம ஹிடன் அஜெண்டா புரிஞ்சுருமோன்னு சந்தேகம் வந்துட்டாப்ல இருக்கு.

// பொருளைக்கொண்டு செய்யப்படும் வேள்வியை காட்டிலும் ஞான வேள்வியே சிறந்தது.//னு சொல்ட்டாரு.

ஞான வேள்வின்னா என்ன? குருகுலம் நடத்தறதா? இல்லே உபன்யாசம் கொடுக்கிறதா? இல்லே ஆசிரமம் வச்சி சிஷ்யகோடிகளை மோல்ட் பண்றதா? இல்லே திருவிளையாடல்ல கே.பி.சுந்தராம்பாள் மாதிரி "என்ன? என்ன? என்ன?"ன்னோ அ சுஜாதா மாதிரி ஏன்? எதற்கு? எப்படி?ன்னு தொடர் எழுதறதா? எந்த இழவா இருந்தாலும் ஞான வேள்விங்கற வார்த்தையே பம்மாத்தா தான் இருக்கு.

நான் ஞான வேள்வி செய்யறேன். எனவே நான் உழ மாட்டேன். விதைக்க மாட்டேன். கிராம மக்கள் எனக்கு படியளந்துரனும்னு சொல்ல இது ஒரு சதியோன்னும்  சந்தேகம் வருது.

ஏற்கெனவே ஒரு பதிவுல சொல்லியிருக்கேன்.

மூளை : இதுக்கு எத்தனை ஹார்ட் ஒர்க் தர்ரோமோ அந்த அளவுக்கு (குறிப்பிட்ட காலம் ) ஸ்ட் ராங்க் ஆயிட்டே வரும். ஒரு ஸ்டேஜுக்கப்புறம் ரெஸ்ட் லெஸ் நெஸ் அதிகரிக்கும். மூளைக்கு ஓய்விருக்காது. சைலன்சர் இல்லாத இஞ்சின் மாதிரி ஓட ஆரம்பிக்கும். பாடி காட்பாடி ஆயிரும்.

உடல்: இதுக்கு எத்தனை ஹார்ட் ஒர்க் தரோமோ அந்த அளவுக்கு இது ஸ்ட் ராங் ஆகும்.  அதே நேரத்துல மூளைக்கு சூப்பர் ஓய்வு கிடைக்கும். எண்ணங்கள் கொஞ்சமாச்சும் நிதானமா கேட் வாக் பண்றதா  இருந்தா அதுகளை கவனிக்க முடியும். கொஞ்சமா முக்கினா எண்ணங்களுக்கு இடையிலான இடைவெளியையும் கவனிக்க முடியும். அதான் யோகம். இதனாலதான் நிறைய உண்மையான ஞானிகள் ஏதோ ஒரு கை  வேலைய இடை  விடாம

செய்துக்கிட்டிருப்பாய்ங்க.

இவிக இப்படியே பல டெக்கேட்ஸா  நோகாம நோன்பு கும்பிட்டுக்கிட்டிருந்தாங்க போல.  இதனால என்னாச்சு மைண்ட் ரெஸ்ட் காலி. பாடி காட்பாடி. பலவீனமே எல்லா பாவங்களுக்கும் பிறப்பிடம்ங்கறதால வித்தைய ஒளிக்கிறது, ஒன்னுமில்லாததை வச்சு பூச்சி காட்டறது, சதி,ஆட்காட்டி வேலைகனு இறங்கிட்டாய்ங்க.

தீட்டிவச்ச க(பு) த்தி (இன)எதிரியையும் குத்தும். சகோதரனையும் குத்தும். இவிக அறிவு சாஸ்தியாகி இவிகளே மேஜரா  ரெண்டு க்ரூப்பாகி, மைனரா பல க்ரூப்பாகி தங்கள் கல்யாண குணங்கள் காரணமா வெட்டி மடிஞ்சு ரோட்டுக்கு வந்துட்டாய்ங்க.

// பொருளைக்கொண்டு செய்யப்படும் வேள்வியை காட்டிலும் ஞான வேள்வியே சிறந்தது.//னு பதிவிரதைதனமா சொல்லிட்ட கீதாசிரியர் நாக்கை கடிச்சுக்கிட்டு உடனே இட்டு நிரப்பறார் பாருங்க

// எந்த கருமமும் ஞானத்தில் தான் முடிவடைகிறது.//  கருமம்னா செயல் தானே. சங்கர்ராமனை போட்டுத்தள்ள ஏற்பாடு பண்ணதும் கருமம் தான். அதுவும் ஞானத்துல தான் முடிஞ்சதுன்னுவாங்களோ?

கீதையோட சாரத்துக்கு வந்திருக்கம். கீழே உள்ள வரியை பாருங்க:

//செயலை துறப்பது - செயலை செய்வது இந்த இரண்டுமே சுவர்கத்திற்கு நம்மை இட்டுச்செல்லும். //

செயலை துறப்பதுன்னா சன்னியாச யோகம், செயலை செய்வதுன்னா கர்ம யோகம்.

இந்த இரண்டுமே மனிதனை ஸ்வர்கத்துக்கு இட்டு செல்லுமாம்.

பிராமணனா இருந்தா உடலுழைப்பு கிடையாது, அரிசி பருப்பு எல்லாமே ஓசி. இதுல புரோகிதம், உபன்யாசம்னு போனா காசு,பணம்,பசு, ராசா கிட்டே செல்வாக்கு, அதிகார வர்கத்தோட நெருக்கம். அரசவைல கொக்கோகம், வாத்சாயணர்னு பேசிட்டு வீட்டுக்கு வந்து மூக்கு பிடிக்க தின்னுட்டு ( பாரதியார் தான் சொல்வாரு உழைப்பே இல்லாம வெறுமனே தின்னு தின்னு புடைச்ச வயிறு செரிக்க சிரமப்படறதுன்னு தொந்திக்கு சந்தனலங்காரம் பண்ணுவாளாம்.) "ஏண்டி பாகீரதி ! நான் செத்த கண்ணசர்ரேன்"னுட்டு மதிய தூக்கம் ,இவனுக்கு ஓசில கிடைச்ச பசுக்கூட்டத்தை ஓசில மேய்க்க ஆளிருக்கும் இதை விட ஸ்வர்கம் வேற எங்கே இருக்கும்ங்கறிங்க?

இந்த லை ஃபை விட்டுட்டு என்ன இழவுக்கு கர்ம சன்னியாசம், கர்ம யோகம்னு அவாள் மண்டைய உடைச்சுக்கனும் சொல்லுங்கோ ?

இதே சத்திரியனா இருந்தா உயிரை பணயம் வைக்கிற போர்கள், போருக்கு போறச்ச முன்னணில நிக்கனும், வெற்றி ஊர்வலம்னு வந்துட்டா பின்னணிக்கு போயிரனும் அவாள்ளாம் ராசா யுத்தத்துல செயிக்க யாகம் பண்ணுவா, மந்திர ஜலம் தெளிச்சு வழியனுப்புவா. தட்ஸால். ராசா ஜெயிச்சு திரும்பிட்டா அவனை வரவேற்க இவாள் தான் போகனும். தப்பித்தவறி நம்ம ராசா "ஊத்தையாகி" எதிரி ராசா ஊருக்குள்ள வண்டான்னா அவனையும் இந்த பன்னாடைங்க போய் வரவேத்து மந்திர ஜலம் தெளிக்கும்.

இதே சூத்திரனா இருந்தா , கடும் உடலுழைப்பு,அடிமை வாழ்க்கை, சுரண்டலுக்கு

இலக்கு, அவிக மயிரும் இவன் உயிரும் ஒன்னுங்கற நிலைமை

இதே வைசியனா இருந்தா யுத்தகாலம்னா படை திரட்ட பணம் தரனும், சாந்தி காலம்னா கோவில் கட்ட பணம் தரனும், கொள்ளைக்காரனையும் சமாளிக்கனும்,படை வீரனையும் சமாளிக்கனும். கரணம் தப்பினா மரணம் மாதிரி கடற்பயணம்,சாலைவழிப்பயணம்.

இவிக வாழ்க்கைக்கு மிஞ்சின நரகம் எங்கன இருக்கு ?

இந்த வர்ண பேதம் ஏதோ இயற்கையில ஏற்பட்டுருச்சு இதை முதல் வர்ணத்தான் தன் சுய நலத்துக்காக ராசாங்க துணையோட நிரந்தரமாக்கிட்டான். . நீ யுத்தம் பண்ணு . ஆம்பளை எல்லாம் சாவான். பொம்பளையெல்லாம் தாலியறுப்பா. ஆண் துணை தேடறப்ப வர்ணம்,சாதி பேதம்லா பார்க்க முடியாது . ஸோ இந்த வர்ண பேதம் எல்லாம் காணாம போயிரும் .கலப்பினம் ஏற்படும். ஒரு வர்ணத்துக்கு சொர்கமாவும், மத்த மூனு வர்கத்துக்கு நரகமாவும் மாறிட்ட இந்த உலகத்தை (கு,பட்சம் பாரத நாட்டை) உழைக்க தயாரா இருக்கிற சகல வர்ணத்தாருக்கும் சொர்கமாக்குன்னு கண்ணன் சொன்னதா சொல்லியிருந்தா ஓகே. ஏன்னா ....

கண்ணன் இதையெல்லாம் வாயா வார்த்தையா சொல்லலியே தவிர (As per the Geetha prevailing at present) காரியத்தை கன கச்சிதமா முடிச்சுட்டாரு. (As per Maha bharatha)

அதை விட்டுட்டு கர்ம யோகம், கர்ம சன்னியாசம் ரெண்டுமே சொர்கத்துக்கு கூட்டிப்போகும்னு சொல்ல ஒரு கண்ணன் தேவையில்லே. ஒரு வேளை சொல்ல வேண்டி வந்திருந்தாலும் தன்னோட இயல்பான மொழில, தன் அனுபவங்களில் கிடைச்ச பாடங்களை, தன் வாழ்க்கை தந்த உவமைகளோட சொல்லியிருப்பான்.

லல்லு பிரசாத் யாதவை கேம்பிரிட்ஜ்ல எம்.பி.ஏ ஸ்டூடென்ட்ஸுக்கு பாடம் நடத்த சொன்னாய்ங்க. அப்போ லாலு என்னா சொன்னாரு தெரியுமா?

எனக்கு பிஸினஸ் மேனேஜ்மென்டும் தெரியாது . ஒரு மயிரும் தெரியாது. நான் மாட்டுக்காரன். பால் கொடுக்கிற மாட்டுக்கு நிறைய புண்ணாக்கு போட்டேன். நிறைய புண்ணாக்கு சாப்பிட்ட மாட்டை செமர்த்தியா கறந்தேன். தட்ஸால்னாரு

கண்ணனோட வாழ்க்கைல இரண்டற கலந்த விஷயங்கள் எத்தனை எத்தனையோ?

யசோதை, பால்,தயிர்,வெண்ணை,பசு,புல்லாங்குழல்,துளசி,கோபிகைகள், ராதா,ருக்மினி, பிருந்தாவனம், துவாரகை இப்டி மஸ்தா கீதுனா. கீதைல இதெல்லாம் எத்தனை தடவை வந்திருக்குன்னு வோர்ட் கவுண்ட் எதுனா கீதா?

இப்போ செலாவணில இருக்கிற கீதை கண்ணன் சொன்ன உண்மையான கீதையில்லேங்கறதுக்கு இதைவிட ஆதாரம் என்ன வேணும்.

பகவத்கீதைஒரு உட்டாலக்கடி தொடர்பதிவுல உச்ச கட்டத்துல இருக்கோம். செயல் நல்லதா? அல்லது /செயலின்மை நல்லதா?

அதாவது கர்ம யோகமா ? சன்னியாச யோகமா?ன்னு கண்ண பரமாத்மா (?) சொல்ற கட்டத்துக்கு வந்திருக்கோம்.

கிருஷ்ணர் ரெண்டையும் ஒன்னா சேர்த்து சொல்றார். இதனால உனக்கு குழப்பமான்னு அர்ச்சுனனை கேட்கிறதோட (மேற்சொன்ன) // இரண்டிலும் செயலை துறப்பதை காட்டிலும் செயலை செய்வதே சிறந்தது//ன்னு கன்க்ளூட்

பண்றார்.

இது எந்த ஊரு தர்க்கமோ புரியலை. ரெண்டுமே நல்லதுன்னு சமமானதுன்னு சொல்லிட்டு வந்த பார்ட்டி (கீதாசிரியர்) ) படக்குனு ஒரு அந்தர் பல்ட்டி அடிச்சு . செயலை துறப்பதை காட்டிலும் செயலை செய்வதே சிறந்ததுங்கறாரே. ஏன்னு சிண்டை பிச்சுக்காதிங்க.

இப்போ செலாவணில கீதைய சொன்னது கண்ணன் கிடையாதுங்கறதால இந்த ஸ்டேட்மெண்டை சீரியஸா எடுத்துக்காதிங்க தலைவா!

ஆனா இந்த ஸ்டேட்மெண்டுக்கு பின்னாடி இருக்கிற பார்ப்பன சதியை ஸ்மெல் பண்ணி உணரப்பாருங்க. ( ரொம்பவே நாறும்)

செயல்னு வரும்போது அவா என்னத்த செயல்களை செய்து வெட்டி முறிக்கிறாய்ங்க காயத்ரி, சந்தியா வந்தனம், அக்னி ஹோத்ரம், வேத அத்யயனம் யாகம் இந்த மண்ணாங்கட்டியெல்லாம் நின்னுப்போனா உலகத்துக்கு வர்ர நஷ்டமேதுமில்லே.

ஆனால் மத்த வர்ணத்தார் எல்லாம் செயலின்மைய அடாப்ட் பண்ணிட்டா என்னாகும்? எதிரி நாட்டு அரசர்களிடமிருந்து காப்பாத்த சைனியம் இருக்காது, யதேஷ்டமா கிடைக்கிற இடத்துல இருந்து லேசில் கிடைக்காத இடத்துக்கு பொருட்களை பெயர்த்து கொண்டு வந்து விக்க ஆள் இருக்காது. காடு திருத்தி,கழனியாக்கி உழுது பயிரிட ஆள் இருக்காது. அதனால தான் நூலாசிரியர் செயலின்மைய மட்டம் தட்டி செயலுக்கு ஓட்டுப்போடறாரு.

தர்க்கப்படி யோசனை பண்ணா செயல்ல இறங்கி , அதனுடன் ஒட்டாம, பலனை எதிர்பார்க்காம கர்ம யோகம் செய்யறதெல்லாம் கொக்கு தலைல வெண்ணைய

வச்சு பிடிக்கிற மாதிரி.

பாக்யராஜ் ஸ்டைல்ல சொல்லனும்னா வயிறு முட்ட லாலா, மசாலா, செண்ட் எல்லாம் போட்டுக்கிட்டு பலான வீட்டுக்கு போய் பலான பார்ட்டியை குப்பைய கிளர்ர கோழி மாதிரி கிளறிக்கிட்டே

இந்த செயலுக்கு நான் பொறுப்பில்லை. நான் பகவான் கையில வெறும் கருவி மாதிரி, இந்த செயலுக்குண்டான பலனையும் பகவானுக்கே ஒப்படைச்சுர்ரேன்னு சங்கல்ப்பம் பண்ணிக்கிற மாதிரி.

தாளி கேண்டோம் யூஸ் பண்ணினா பொழச்சோம். இல்லெ எய்ட்ஸுன்னு வந்தா பகவானுக்கா வரும். ஊஹூம் உங்களுக்குத்தான் வரும்.

ரெய்டுன்னு வந்தா போலீஸ் பகவானையா அரெஸ்ட் பண்ணும் ஊஹூம் உங்களைத்தான் அரெஸ்ட் பண்ணும்.

இந்த நிலைல கர்ம சன்னியாசம்ங்கறது இரவு ஏழு மணிக்கே சாப்பிட்டுட்டு , பட்டை கிட்டை போட்டுக்கிட்டு பகவனை தியானம் பண்ணிட்டு வீட்டு ஹால்ல அப்பா அம்மா நடுவுல படுத்துக்கற மாதிரி. எது சே..ப் ? மிஞ்சிப்போனா விடியல்ல ஏதேனும் கெட்ட கனா வந்து ஜட்டில மேப் விழும் அவ்ளோதான். அதை ட்ரை க்ளீனர்ஸுக்கு போடாம கிருஷ்ணருக்கு அர்ப்பணம் பண்ணிராதிங்கப்பு. அதையும் நீங்க தான் துவைச்சாகனும். இல்லேன்னா ட்ரை க்ளீனர்ஸுக்கு போட்டாகனும்.

ஆக சாய்ஸுன்னு வரும்போது விஷப்பரீட்சையா இருக்கிற கர்ம யோகத்தை விட சன்னியாசம் தான் ஈஸியரா ,பெட்டரா இருக்கும்.

நூலாசிரியரோட உண்மையான நோக்கம் அனைவருக்கும் முக்தி என்பதானால் அவர் செயலின்மையைத்தான் தூக்கிப்பிடித்திருக்கவேண்டும்

ஆனால் அவரின் உண்மை நோக்கம் அவாளின் பிழைப்புக்கு வழி செய்றதாவே இருக்கு. பிராமணரல்லாதோர் செயலின்மையை பின்பற்ற துவங்கி விட்டால் அவர்கள் உழைப்பிலேயே வாழ்ந்து , உழைத்தே அறியாத அந்த இனம் பிழைப்பதே துர்லபமாகிவிடும் என்பதால் செயலுக்கு ( கரும யோகத்துக்கு )வக்காலத்து வாங்குகிறார் கீதாசிரியர்.

//சாங்கியம் என்னும் புலனை அடக்கிய ஆத்ம ஞான யோகத்தை மேற்கொண்டவர்கள் எந்த உன்னத நிலையை அடைகிறார்களோ அந்த நிலையை செய்கையையே யோகமாக கொண்டவர்களும் அடையலாம்.//

மேற்படி வரிகளை பாருங்க பலனை எதிர்பாராது செயல்படுவதையே கரும யோகம் என்று கூறும் கீதாசிரியர் அடுத்த வரியிலேயே பலனை பற்றி பேசுகிறார். ரெகுலர் ஸ்டடீஸுக்கும் தொலை தூர கல்விக்கும் வித்யாசமே கிடையாதுன்னு யூனிவர்சிட்டிங்க அடிச்சி விடறதை போல செயல் மற்றும் செயலின்மைக்கு பலன் ஒன்றேதான்னு டிக்ளேர் பண்றாரு.

//சாங்கியம் என்னும் புலனை அடக்கிய ஆத்ம ஞான யோகத்தை மேற்கொண்டவர்கள் எந்த உன்னத நிலையை அடைகிறார்களோ // அதே நிலையை கர்மயோகத்தை பின்பற்றுபவனும் அடையலாமாம்.

"புலனை அடக்கிய"ங்கற வார்த்தைய பாருங்க. கீதை தலைசிறந்த மனோதத்துவ நூல்னு சவுண்டு விடறவங்க கூட இருக்காய்ங்க. புலனை அடக்குதல்ங்கறது மனோதத்துவ அடிப்படைக்கே விரோதம். மனிதனுக்கு வர்ர

மனக்கோளாறுகளுக்கு முதல் காரணம் அவன் தன் மனதை அடக்கறதுதான். (அதுக்காக மனம் போன போக்குல மனிதன் போகனும்னு நான் சொல்லலே.)

எதை மாத்த முடியாதோ அதை ஏத்துக்கற மனப்பக்குவத்தை கொடுன்னு ஒரு மேதை கேட்டாராம் . புலன் களின் கிளர்ச்சியை அடக்க முடியாதுங்கறப்போ அதுக்கு சட்டம், சமூகத்துக்கு இணக்கமான வழில ஒரு வடிகாலை தேடிக்கிறதுதான் மனிதனின் மன நலத்துக்கு உத்தமமான மார்கம்.

ரோட்ல ஒரு சூப்பர் ஜுஜிலிப்பா குட்டி போகுதுனு வைங்க அவளை ஃபாலோபண்ண நினைச்சிருப்பிங்க.ஆனால் வேற ஏதோ அவசர வேலை காரணமா ஃபாலோபண்ணாம விட்டிருப்பிங்க.மனித மூளைக்கு முடிவில்லாத கதைகள் பிடிக்கிறதில்லை. அதனால தானா ஒரு ஒன் லைனை ரெடி பண்ணிக்கிட்டு கதைய முடிச்சுருது (கனவு மூலமா)

படிக்கிற பிள்ளைகள்ள யாரு தாங்கள் கத்துக்கிட்ட விஷயத்தை பத்தி கனவு காணறாங்களோ அவிக அந்த விஷயத்தை லேசில மறக்கறதில்லையாம்.

இதுலருந்து என்ன தெரியுது? புலனடக்கம் புண்ணாக்குனு கண்டதையும் அடக்கினா அந்த சமாசாரம் மேம்போக்கான கான்ஷியஸ் மைண்ட்லருந்து ஆழமான சப்கான்ஷியஸ் மைண்டுக்கு ட்ரான்ஸ்ஃபர் ஆயிருது. மைனாரிட்டி அரசுக்கு மெஜாரிட்டி கிடைச்ச கணக்கா ஸ்திரமாயிருது. கனவுல கூட உங்களை துரத்துது.

மனோதத்துவ சாஸ்திரத்தின் அடிப்படைக்கே விரோதமான புலனடக்கத்தை பத்தி பேசற பகவத்கீதை தலை சிறந்த மனோதத்துவ நூலாம். அப்படி சொன்னவர்களின் வீட்டு மனையை எவனேனும் குட்டித்தலைவன் ஆக்கிரமிக்கட்டும்.

புலனடக்கம்ங்கற வார்த்தையை மேம்போக்கா பார்க்கும் போது ரொம்ப பாசிட்டிவானதா / அறிவுப்பூர்வமானதா தோணும். உடனே எப்படியாவது அடக்கிரனுங்கற நப்பாசை பிறக்கும்.

கைக்குழந்தை தாய் பாலுக்கு அழுவது, தாய் ஏதோ வேலையா இருக்கா. குழந்தைக்கு காக்கா,குருவி,பொம்மை, தாத்தாவோட பொக்கைவாய் இப்படி என்னென்னத்தையோ காட்டி டைவர்ட் பண்றாள். சில நிமிடங்களுக்கு குழந்தை டைவர்ட் ஆகுது

( மண்டுகள் கூட பத்து பதினைஞ்சு நிமிசம்தான் ) .ஆனா பசி ஞா வந்தது முன்னைய விட அதிக டெசிபல்ஸ்ல கூவ ஆரம்பிக்குது. பிரச்சினைக்கு என்ன சொல்யூஷன்? பாலை கொடுத்து முதுகுல தட்டி படுக்க வைக்கிறதுதான். இந்த நிமிஷம் இல்லைன்னாலும் அடுத்த பதினைஞ்சாவது நிமிஷமாவது இந்த வேலைய செய்துதான் ஆகனும்.

ஒரு வேளை கேஸ்ல வாணலில எண்ணைய ஊத்தி கடுகு போட்டிருக்கலாம். இல்லே குக்கரோட மூணாவது விசிலுக்கு காத்திருக்கலாம். அந்த மாதிரி சமயத்துல சில முயற்சிகள் பண்றது மன்னிக்க கூடியதுதான்.

இப்போ பையங்களுக்கு 12 அ13 வயசுக்கே புலன் புரட்சி பண்ண ஆரம்பிச்சுருது. அதுக்காக சைல்ட் மேரேஜை கொண்டுவரமுடியாது. மேற்படி புலனோட புரட்சியின் தீவிரத்தை பொருத்து முடிவெடுக்கனும். அது ரொம்ப காட்டமா இருந்தா டென்த் முடிச்சதுமே ஏதோ ஒரு ப்ரொ..ஃபெஷனல் கோர்ஸுல சேர்ந்து சொந்தக்கால்ல நிக்க முயற்சிபண்ணி சட்டம், சமூகம் ஏத்துக்க கூடிய ஒரு தீர்வை தேடலாம்.

புலனை டைவர்ட் பண்ணமுடியும் கொஞ்ச நாழிக்கு, மிஞ்சிப்போனா கொஞ்ச நாளைக்கு . ஆனா அடக்கவே முடியாது. இன்னொரு சமாசாரம் ஜன்ய பாகங்களை

ரொம்ப நாளைக்கு உபயோகத்தில் இல்லை போர்டு மாட்டி பராமரிக்க முடியாது. அப்புறம் அதும்பாட்டுக்கு சுருங்க ஆரம்பிச்சுரும். விரைப்பு,புடைப்பு எல்லாம் காணாம போயிரும்.

புலனடக்கம்னா பலான விஷயம் மட்டுமில்லேன்னு புரியுது. மெய்,வாய்,கண்,மூக்கு செவிங்கற ஐந்து புலன் களை பத்தியும் தான் கீதாசிரியர் சொல்றார். புரியுது. இந்த ஐந்து புலன்களுக்கும் மனதுக்கும்  லின்க் இருக்கு. மனசுக்கு மேல புத்தி இருக்கு. ஆனால் பல்வேறு காரணங்களால் பலவீனமாக இருக்கும் மனதையும், புத்தியையும் பல்வேறு சக்திகள் பரோட்டாவுக்கு மிலிட்டரி ஓட்டல் சரக்கு மாஸ்டர்  மாவு பிசைந்த கணக்காய் பிசைகின்றன. இதில் இயற்கைக்கு முதலிடம்.

கிருஷ்ண பரமாத்மாவை இயற்கையின் மறு உருவா,உருவகமா, பிரதி நிதியா காட்டற கீதாசாரியர் புலன் களை அடக்குவது இயற்கைக்கு விரோதமானது அதாவது கிருஷ்ணருக்கே விரோதமானதுங்கற சங்கதியை வசதியா மறந்துர்ரார்.

//புலனை அடக்கிய ஆத்ம ஞான யோகத்தை மேற்கொண்டவர்கள் எந்த உன்னத நிலையை அடைகிறார்களோ // அதே நிலையை கர்மயோகத்தை பின்பற்றுபவனும் அடையலாமாம்.//

இந்த வரியை ஆழமா பாருங்க.// புலனை அடக்கிய// (அடக்கவே முடியாதுங்கண்ணா. கொஞ்ச நாழி,காலம் டைவர்ட் பண்ணலாம். தவமிருந்த முனிவர்கள் ரம்பா ,ஊர்வசி,மேனகாவை பார்த்ததும் ஒழுக விட்ட கதையாகிவிடும். ( நான் சொல்வது ஜொள்ளை).

//ஆத்ம ஞான யோகத்தை //

ஆத்ம ஞான யோகத்தைங்கற வார்த்தைல மூணு வார்த்தை இருக்கு. ஆத்மாங்கற கான்செப்ட் வேற . ஞானம்ங்கற கான்செப்ட் வேற யோகம்ங்கற கான்செப்ட் வேற இது மூணையும் போட்டு சாலட் பண்ணிட்டாய்ங்க பாருங்க.

ஆத்மாங்கறது தனக்கு சப்ஸ்டிட்யூட்டா மனித மனதில் வளர்ந்துவிட்ட ஈகோவால் மறைக்கப்பட்டுள்ள ப்ரக்ஞை. இதுக்கும் பரமாத்மாவுக்கும் (ஜெஜிக்குங்கண்ணா எந்த வித்யாசமும் கிடையாது. ஆத்மா தான் பரமாத்மா. பரமத்மாதான் ஆத்ம ரூபத்துல மனுஷன்ல வேலை செய்யுது)

ஞானங்கறது மேற்படி ஈகோ,மனதையெல்லாம் கடந்து இதெல்லாம் நானல்ல. ஆத்மன் தான் நானுன்னு அனுபவ பூர்வமா தெரிஞ்சிக்கிடறதுதான்.

இதுக்கான முயற்சிதான் யோகம்.

இதை கொஞ்சம் தமாசா சொல்லனும்னா ஆத்மாங்கறது தொகுதியை முழுக்க மறந்து தில்லிலயே முடங்கி கிடக்கிற எம்.பி.

மனசு,புத்தி,ஈகோ எல்லாம் மேற்படி எம்.பியோட மச்சான் மாரு. அவிக தாங்கதான் எம்.பி போல அனல் காட்டிக்கிட்டிருக்காய்ங்க.

எம்பி.யை தொகுதிக்கு வரவச்சுட்டா மச்சான் மாரு கொட்டம் அடங்கிரும்.

இது ப்ராஸஸ். ஆத்ம ஞான யோகம்ங்கற வார்த்தைல இருக்கிற (வார்த்தையா இது வாக்கியம் போல இருக்கு) பகு பதங்கள் எல்லாமே தனி தனியாகவே முழு பொருளை தரக்கூடிய பதங்கள் ஏனோ கீதாசிரியர் மூன்றையும் ஒட்டுப்போட்டு குழப்புகிறார்.

சரி ஓஞ்சு போவட்டும் ஆத்ம ஞானத்தை பெற செய்யப்படும் யோகம் (பயிற்சி/முயற்சினு) வச்சிக்கிட்டு பார்ப்போம்.

கருமயோகம் / ஆத்ம ஞான யோகம் ரெண்டும் ஒரே பலனை தரும்னு ஆசிரியர் சொல்றார். இதுக்கு பின்னாடி இருக்கிற பிராமண சதியை , பிராமணரல்லாதோர் மீதான அவிக அண்டர் எஸ்டிமேட்டை பத்தியெல்லாம் அடுத்த பதிவுல பார்க்கலாம்ணா !

உடு ஜூட்

இந்த தொடர்பதிவில் கடந்த பதிவை முடிக்கும்போது "கருமயோகம் / ஆத்ம ஞான யோகம் ரெண்டும் ஒரே பலனை தரும்னு ஆசிரியர் சொல்றார். இதுக்கு பின்னாடி இருக்கிற பிராமண சதியை , பிராமணரல்லாதோர் மீதான அவிக அண்டர் எஸ்டிமேட்டை பத்தியெல்லாம் அடுத்த பதிவுல பார்க்கலாம்ணா !" என்று முடித்திருந்தேன்.

மேலுக்கு பார்க்கும் போது பிராமணரல்லாதோருக்கு என்ன தோணும்னா

" ஆகா என்ன லிபரலா சொல்லியிருக்காய்ங்க. கர்ம சன்னியாசம்னா நம்மால ஆவாத வேலை. நாம சன்னியாசியா வாழபார்த்தாலும் நாம திங்கற/அல்லது இதுவரைக்கும் தின்ன உப்பு,புளி,காரம் இதெல்லாம் சும்மா விடாது.

கரும யோகம்னா என்ன ஜுஜுபி. நம்ம வேலைய நாம செய்துக்கிட்டிருந்தா போதும் என்ன அப்பப்போ கிருஷ்ணார்ப்பணம்னு சொல்லிக்கிட்டிருக்கனும் அவ்ளதானேனு தோணும்.

**இங்கே கர்ம சன்னியாசத்துக்கும், கர்மயோகத்துக்கும் ஒரே ஹோதா கொடுத்ததே ஒரு சதிதான்.**

மனுஷன் முக்தியடைய பிரம்மச்சரியம், கிருஹதாஸ்ரமம், வான பிரஸ்தம்,

சன்னியாசம்னு நாலு ஸ்டேஜ் இருக்கு. அந்தந்த பருவத்துல அந்தந்த வேலைய பார்த்துட்டு கடைசில சன்னியாசம்னு வந்தா /போனா தான் ஸ்மூத் கோயிங்கா இருக்கும். அதை விட்டுட்டு பால சன்னியாசி, இளையவர், மூத்தவருன்னு வெறுமனே காவிய கட்டிக்கிட்டு கதை விட்டா ம(க)ட்டைய தூக்கிக்கிட்டு நிக்க வேண்டியதுதான்.அப்புறம் பெண் எழுத்தாளர்கள் எல்லாம் கட்டுரை வரைவாய்ங்க. பேட்டி கொடுப்பாய்ங்க. (அன்னாரின் ஆத்மா சாந்தியடையட்டும்)

ரெண்டே வேட்டி,ரெண்டே துண்டை சோப்பு உபயோகிக்காம துவைச்சி துவைச்சி கட்டிக்கிட்டிருந்தா அதுவே காவியா மாறிரும்.அதுதான் காவி நெம்பர் 1. இதற்கடுத்த சாய்ஸ் இயற்கைல கிடைக்கிற சில மூலிகைகளை உபயோகிச்சு சாயமேற்றின காவி வந்த் காவி நெம்பர் 2.

இன்னைக்கு சாமியாருங்க கட்டற காவியெல்லாம் உங்களோட கல்யாண சூட்டை விட காஸ்ட்லி. ஒன்லி இம்போர்ட்டட்.

கீதாசிரியர் எந்த வயசுல கர்ம சன்னியாசம், எந்த வயசுல கர்ம்யோகம்னு ஸ்பெசி்ஃபை பண்ணாததை கவனிங்க.

இந்த ரெண்டு வார்த்தைக்கும் (கர்ம யோகம், கர்ம சன்னியாசம்) என்னென்னமோ அர்த்தம்லாம் தேடி கண்டு பிடிச்சு பெரியவுக சொல்லி வச்சிருக்கிற அர்த்தத்தையெல்லாம் போட்டு குழப்பிக்கிராதிங்க. அதெல்லாம் இட்டுக்கட்டினது. அவிகவிக தங்களோட கொள்கைகளையெல்லாம் கீதை மேல ஏத்தி சொன்ன விளக்கங்கள்.

சரித்திரத்தை புரட்டி பார்த்து, அந்த இனத்தோட நோக்கத்தை வியூகத்தை புரிஞ்சிக்கிட்டு ரோசிச்சா கர்மயோகம்னா பலனை எதிர்பார்க்காம உழைச்சிக்கிட்டே இருக்கிறது. தங்கள் உழைப்பின் பலனை பஞ்ச கச்சங்கள் நேரடியா அடிச்சிக்கிட்டு போச்சா, இல்லே தாங்கள் ராஜாவுக்கு வரியா கட்டின காசுலருந்து தானமா லவட்டிக்கிட்டு போச்சுங்களானுல்லாம் யோசிக்காம உழைச்சிக்கிட்டே இருக்கிறதுதான் கர்மயோகம்.இது பிராமணரல்லாத மத்த 3 வர்ணத்துக்குரியது.

வேலை வெட்டி எதுவுமில்லாம மத்த வர்ணத்தார் உழைச்சி கொட்ட அதுல கொம்மாளம் போடறதுதான் கர்ம சன்னியாசம் . இது பிராமணர்களுக்கே உரியது.

மத்த வர்ணத்தான் எல்லாம் உழைச்சி உழைச்சி என்னத்தை கண்டோம்னு யோசிச்சுர கூடாதில்லையா அதனாலதான் கருமயோகம்னு ஒரு பில்டப். அதுக்கு கர்ம சன்னியாசத்துக்கு சமமான ஹோதா.

ஒரு சில பக்தி இலக்கியங்கள் ஒரு மைல் நீளத்துக்கு இருக்கும். அதை மனப்பாடம் பண்றதோ , ப்ரவச்சனம் பண்றதோ எல்லாராலயும் முடியாத காரியம். அதுக்காக என்ன பண்ணுவாய்ங்க குறிப்பிட்ட ஒரே ஒரு அத்யாயத்தை படிச்சாலே மொத்த இலக்கியத்தையும் படிச்ச பலன் கிடைக்கும்னுவாய்ங்க. அந்த ஒரு அத்யாயத்தை கூட படிக்க முடியாத தற்குறிகளோ, சோம்பேறிகளோ இருப்பாய்ங்க.

அதுக்காக ஒரு ஸ்லோகத்துக்கு ஸ்டார் மார்க் கொடுத்து அந்த ஒரு ஸ்லோகத்தை சொன்னாலே போதும் 100% ரிசல்ட்டுன்னு பீலா விடுவாய்ங்க. அதுவும் முடியாதவுக கடவுளோட 1000 நாமங்களை (சஹஸ்ர நாமம்) சொன்னா போதும்னுவாக. இது கூட முடியாத சோம்பேறிக்கு சோறு கொண்டு போகும் பார்ட்டிங்க இருப்பாய்ங்க அவிக மேற்படி சஹஸ்ர நாமங்கள்ள குறிப்பிட்ட பேரை சொன்னா போதும் சஹஸ்ர நாமம் சொன்ன புண்ணியம்/பலன் கிடைச்சுரும்னுவாக.

இதெல்லாம் ஜஸ்ட் சைக்கலாஜிக்கல் சேடிஸ்ஃபேக்சனுக்காக சொல்றதுதான். ஒரு உபசாரத்துக்கு சொல்லிக்கிரதுதான். உதாரணத்துக்கு ஶ்ரீராமனோட இந்த மூலமந்திரத்தை பாருங்க.

**ஶ்ரீராம ராம ராமேட்டி ரமே ராமே மனோரமே**

**சஹஸ்ர நாம தத்துல்யம் ஶ்ரீராம நாம வரானனே**

இது வந்து ஶ்ரீராமனோட சஹஸ்ர நாமத்துக்கு சமமானதாம். இந்த ரெண்டு வரிய சொன்னாலே சஹஸ்ர நாமம் எல்லாத்தையும் சொன்ன புண்ணியம், பலன் கிடைச்சுருமாம்.

இதே ஸ்டைல்ல தான் கருமயோகமும், கரும சன்னியாசமும் ஒன்னுதான் .பலனும் ஒன்னுதான்னு சொல்றாரு கீதாசிரியர்.

இந்த பெரும்போக்குக்கு இன்னொரு உதாரணமா கீதையையே எடுத்துக்கங்க.

//நம்பிக்கையுடன் நாட்டம் மிகுந்து இந்த கீதையை எவன் கேட்பானோ அவனது பாவமும் அழிவது உறுதி அமர நிலைதான் அவனது இறுதி//

கீதைய கேட்டாலே பாவம் அழிஞ்சு போயிருமாம். இதெல்லாம் ஜஸ்ட் ஒரு சம்பிரதாயம். பாகவதம் படிக்கனும், மகாபாரதத்தை படிக்கனும்,கிருஷ்ணனை சுத்தி சனம் கட்டிவிட்டிருக்கிற கதைகளை அடையாளம் கண்டு வடிகட்டி உண்மையான கிருஷ்ணனை உள் வாங்கனும். அப்புறமா கீதையை கேட்கனும். கண்ணனோட கேரக்டருக்கும் கீதைக்கும் பொருத்தமில்லாத அம்சங்கள் எத்தனை இருக்குனு பார்த்து அதையெல்லாம் அரிசில கல்லை பொறுக்கின மாதிரி பொறுக்கி போட்டுட்டு கீதாசாரத்தை ( உண்மையான ) வாழ்க்கைல கடை பிடிக்கனும். இந்த ப்ராசஸ் எல்லாம் நடக்காம வெறுமனே கீடைய கேட்டுட்டா பாவம் அழிஞ்சுருமா? அமர நிலை கிடைச்சுருமா? ஒரு ...............ரும் கிடைக்காது.

இவிகளுக்கென்ன எல்லாம் ஒன்னுதான்னு அசால்ட்டா சொல்ட்டாங்க. எவ்வளவு பெரிய நேர் கோடா இருந்தாலும் அது ஒரு வட்டத்தின் பகுதிதான். இல்லேங்கலை. அந்த நேர்கோடு என்னைக்கோ ஒரு நாள், எங்கனயோ ஒரு இடத்துல தன் ஆரம்ப புள்ளியை சந்திச்சு வட்டமாயிரும். இது தியரி. இது ப்ராக்டிக்கலைஸ் ஆகனும்னா அந்த நேர்கோட்டை தொடர்ந்து வரையனும். இந்த ப்ராஜக்டை ஒலிம்பிக் தீபம் மாதிரி தலைமுறை தலைமுறையா தொடர்ந்து கொண்டு செல்லனும்.அப்போ எங்கனயோ ஓரிடத்துல சந்திக்கும்.

ஆனால் கீதை சொல்றது அப்படியில்லை. ரெண்டும் ரெண்டும் நாலு மாதிரி ச்சோ சிம்பிளா சொல்லுது. ரெண்டும் ஒன்னுதான்.

கீதைல சொன்னது ஒர்க் அவுட் ஆகனும்னா அதுக்கு பெரிய ப்ராசஸ் இருக்கு.

கர்மயோகம்னா என்ன ? பலனை எதிர்பார்க்காம கடமையை செய்யறது. உயிர்களை படைச்சது இயற்கை. இயற்கையின் பால் உயிர்களின் கடமை என்ன?முதல் கடமை உயிர் வாழறது. இரண்டாவது கடமை இனப்பெருக்கம்

செய்யறது. மூணாவது கடமை தங்களுக்கு உயிரையும்,வாழ்வையும் கடமையையும் தந்த இயற்கைய நாசமாக்காம இருக்கிறது.

இந்த கடமைகளை இயற்கைக்கு நிபந்தனைகள் விதிக்காம பலனை எதிர்பார்க்காம செய்ய முனைஞ்சா , செய்ய முடிஞ்சா சொர்கம்லாம் ஒத்தைக்கு இரட்டையா இங்கனயே இறங்கி வந்துரும்.

நான் சொன்ன மூணு கடமைகளை மன்சங்க செய்துக்கிட்டுதான் இருக்காய்ங்க. இல்லேங்கலை. ஆனால் கடமையா நினைச்சு செய்யறதில்லை. பலனை எதிர்பார்க்காம செய்யறதில்லை. அதான் மனுஷ வாழ்க்கைய சிக்கலாக்கிருச்சு.

கிருஷ்ணர் கண்ட குட்டியை போட்டுட்டு நான் நைஷ்டிக பிரம்மச்சாரிங்கறது உண்மைன்னா ஹே யமுனா நதியே நீ இந்த மோர்காரிக்கு வழி விடுன்னாராம். உடனே யமுனை வழி விட்டுட்டுதாம். இது கிருஷ்ணருக்கு செல்லுபடி ஆகியிருக்கலாம். நமக்கு உயிரையும், வாழ்வையும் தந்த இயற்கை நமக்கு கொட்த்திருக்கிற எளிமையான கடமைகளை நிறைவேற்றவே நிபந்தனைகள் நமக்கு கர்ம யோகம் ஒர்க் அவுட் ஆகுமா?

கம்ப்யூட்டர்லயே நாம செய்யற வேலை விவரமெல்லாம் ரீசன்ட் ஃபைல்ஸ்லயும் , டெம்ப்லயும் சேவ் ஆகுது. ஃபைல் ரிக்கவரி சாஃப்ட் வேர் போட்டா டெலிட் ஆன ஃபைல்ஸ் எல்லாம் ரிக்கவரி ஆகி பல்லை இளிக்குது. தேவ நாத குருக்களோட ஜாலிலோ ஜிம்கானா வேலைகள் வெளிச்சத்துக்கு வந்தது இப்படித்தான்.

மனித மூளைய பத்தி சொல்லவே தேவையில்லை. பல கேஸ்கள்ள ஒரு வயசு ரெண்டு வயசு நினைவுகளை கூட ஹிப்னடைஸ் பண்ணி, ட்ரான்ஸ்ல வச்சு தோண்டி எடுத்திருக்காய்ங்க.

கிருஷ்ணர் தான் போட்ட குட்டிகளோட நினைவுகளையெல்லாம் தன் மூளைல சப்ஜாடா தூக்கிட்டாரு .விளக்கெண்ணையை பூசிக்கிட்டு பலாப்பழத்தை பிரிச்ச மாதிரி விளையாடியிருப்பாரு. பிசின் ஒட்டாம வெளிய வந்துட்டாரு. நம்ம கதை?

டாக்டர்களுக்கான ஒரு வழிக்காட்டி சூத்திரம் இருக்கு." நோய்க்கு சிகிச்சை செய்யாதே நோயாளிக்கு சிகிச்சை செய்" இங்கே குருட்டாம்போக்குல கீதாசாரியர் நோய்க்கு சிகிச்சை தரார்.

சரி கீதைய கொஞ்ச நாழி ஓரமா வச்சுருவம். கர்ம யோகம் சாமானியனுக்கு எப்பத்தான் ஒர்க் அவுட் ஆகும்னு யோசிப்போம்.

ஏற்கெனவே சொன்ன மாதிரி பிரம்மச்சரியம், கிருகதாஸ்ரமம், வான ப்ரஸ்தம், சன்னியாசம்னு எல்லா ஆசிரமத்தையும் கம்ப்ளீட் பண்ணிட்டு ஒரு பார்ட்டி மறுபடி சமுதாயத்துல வாழ முனைஞ்சா

இந்த உலகம் நாடக மேடையாகும் . அந்த பார்ட்டி ஒரு நடிகராயிருவாரு.

இந்த உலகத்துல அவர் இருப்பார். ஆனால் அவருக்குள்ள உலகம் இருக்காது

ஓடம் தண்ணி மேல போகும். ஆனால் ஓடத்துக்குள்ள தண்ணி வராது

நீங்க அஞ்சு வயசுல ஒன்னாங்கிளாஸ் படிக்க போன பள்ளிக்கும், பள்ளியோட பழைய மாணவர்கள் சங்க விழா ஏற்பாட்டுக்குனு போற பள்ளிக்கும் வித்யாசம் இருக்கும்.

மேலே சொன்ன நாலு ஆசிரமத்துக்கும் ( பிரம்மசரியம், கிருகதாஸ்ரமம், வான ப்ரஸ்தம், சன்னியாசம்) அந்த காலத்துல தலா எத்தனை வருஷம் ஒதுக்கியிருந்தாய்ங்களோ தெரியாது.

ஜோதிஷத்துல ஒன்பதுகிரகங்களுக்கான தசைகளோட கூட்டுத்தொகை 120 வருஷம். ஆனால் இன்னைக்கு 120 வருஷம் வாழ்ந்தா கின்னஸ் ரிக்கார்டுதான். உயிரியல் நிபுணர்கள், சைக்கிரியாட்ரிஸ்டுகள் இப்படி பலதரப்பட்ட நிபுணர்கள் விஸ்தாரமா சர்வே பண்ணி,ஆராய்ச்சி பண்ணி எந்த ஆசிரமத்துக்கு எத்தனை வருசம்னு முடிவு பண்ணி, அதுக்குண்டான ஏற்பாட்டை அரசாங்கம் ஏற்படுத்தனும்.

இந்த பொதுவிதி எல்லாருக்கும் பொருந்துமாங்கறது சந்தேகம்தான். (விதிவிலக்குகள் இருக்கலாம்)

பிரம்மச்சரியம்னா ஈர கோவணத்தை இழுத்து கட்டி செக்ஸ் தேவைகளை

சப்ரெஸ் பண்ணிக்கிட்டு அது வன்முறையா மாற வழிபண்றது கிடையாது. செக்ஸ் பற்றிய புரிதலை வளர்த்துக்கிட்டு ஸ்வப்ன ஸ்கலிதம் இத்யாதிக்கு டெப்ரஸ் ஆயிராம "இது இயற்கையான ஒன்னு"னு புரிஞ்சிக்கிட்டு சுய இன்பம்,ஒட்டல், உரசல்,காதல் , ஹோமோ,லெஸ்பியன், கள்ள உறவு, விலைமாதர்/கால் பாய்ஸ்னு போகாம வாழறது

எதிர்காலத்து தாம்பத்யத்துக்கு உடல்,மனசு,புத்தி அளவுல பிரிப்பேர் ஆறது.

பிரம்மச்சரியத்தை ஒழுங்கா கடைபிடிச்சாதான் கிருகதாஸ்ரமம் /இல்லறம் இனிக்கும். இல்லன்னா எழுச்சி இன்மை, குறி சிறுத்தல், துரித ஸ்கலிதம்னு லாட்ஜு வைத்தியர்களோட விளம்பரங்களை துரத்திக்கிட்டு , தாழ்வு மனப்பான்மைய மறைக்க மேல் ஷேவனிசம், பெண்டாட்டிய கொடுமை படுத்தறது, நம்மால "அதை"தான் கொடுக்க முடியலைன்னு 54 இஞ்ச் கலர் டிவி வாங்கித்தர்ரது. அவள் நம்ம அப்பா,அம்மாவை முதியோர் ஆசிரமத்துக்கு விரட்டினா பார்த்துக்கிட்டிருக்கிறதுல்லாம் நடக்கும்.

இல்லறத்தை ஒழுங்கா அனுபவிக்காதவன் 60 வயசுல 6 வயது சிறுமியை கற்பழிக்க முயற்சி பண்ணி தந்தில செய்தியா வந்துருவான். தனக்குள்ள, தங்களுக்குள்ள (தம்பதி) ஏற்பட்டு போன எம்ப்டி நெஸ்ஸை நிரப்ப ஊரை அடிச்சு உலைல போட்டு வாழ் நாள் எல்லாம் கண்ட குப்பைகளை வாங்கி நிரப்பிக்கிட்டே இருப்பான். அவன் எங்கே வான பிரஸ்தத்துக்கு போறது ? ஞா இருக்கில்ல ? என்.டி. திவாரி

வான பிரஸ்தம்னா காட்டுக்கு போய் மான் வேட்டையாடறதில்லை. முடிஞ்ச வரை ஊருக்கு/ சன நெருக்கடிக்கு/பொல்யூஷனுக்கு தூரமா அமைதியான, என்விரான்மென்ட்ல குறைஞ்ச பட்ச வசதிகளோட வாழலாம். தம்பதிகள்ள யாரோ ஒருத்தர் டிக்கெட் வாங்கிட்ட பிறவோ , இல்லே சோடியாவேவோ சன்னியாசம் வாங்கிக்கிடலாம்.( ப்ரேமானந்தா, ஜெயேந்திர சரஸ்வதி, நித்யானந்தா மாதிரி பார்ட்டிகளோட ஆசிரமம் ,மடம்னு போய்தான் வாங்கனும்னுல்ல. ஜஸ்ட் ஒரு கமிட்மென்ட். தட்ஸால்.

இத்தனை கட்டத்தை வெற்றிகரமா தாண்டிவந்த பிறகு மறுபடி எம்.ஜி.ஆர் கேரளாவுல தான் படிச்ச ஸ்கூலுக்கு போய் ரெஜிஸ்டரை பார்வையிட்டாரே அது

மாதிரி ஒரு பங்க் கடை வைக்கலாம். ஒரு பீடா கடை வைக்கலாம். அப்போ கரும யோகம்னா என்னனு புரியும். சனத்துக்கும் புரியவைக்கலாம்.

அதைவிட்டுட்டு வீரப்பனுக்கும் மீசை இருக்கு, தேவாரத்துக்கும் மீசை இருக்கு ரெண்டும் ஒன்னுதான்னிட்டா எப்படி? சரி மீண்டும் கீதைக்கே வருவோம்.

நாம இத்தனை நாழி டிஸ்கஸ் பண்ணோமே அதே வரியை வேற வார்த்தைல சொல்றார் கண்ணன் ( அதாங்க கீதாசிரியர்). அதையும் பாருங்க.

//எவனொருவன் ஆன்மிகமும் செய்கை செய்வதும் ஒன்றே என்று தெளிவு பெறுகிறானோ அவனே விவரம் தெரிந்தவன்.//

இந்த ஸ்டேட்மெண்ட் ரொம்ப மொட்டையா இருக்கு. திராட்சையும், பெண்ணோட கண்ணும் ஒன்னுதான். எதுவரை ? நிறத்துல, பளபளப்புல மட்டும்தான். திராட்சை பார்க்க முடியுமா? இல்லே கண்ணைதான் சாப்பிடமுடியுமா?

ஆன்மீகமும், செய்கை செய்வதும் ஒன்றே என்று தெளிவு பெற்றவர் நித்யானந்தாதான் போலும்.

மேற்படி ஸ்டேட்மெண்டுக்கு சின்ன வார்த்தைய சேர்த்தாதான் அது முழுமை பெறும்.

பலனை எதிர்பாராத செயலும் ஆன்மீகம்தான். பலனை எதிர்ப்பார்த்து செய்யப்படற ஆன்மீகமும் வெறும் செயல்தான்.

இப்படி சுத்தி வளைக்கிறதை விட ஸ்ட்ரெயிட்டா சொல்றேன் பாருங்க ,

" சுய நலமற்ற செயலும் ஆன்மீகம்தான். சுய நலம் கலந்த ஆன்மீகமும் செயல்தான்.

விளக்கம் எப்படி? இன்னைக்கு இது போதும் மீதியை நாளைக்கு பார்ப்போம்

ஓரிடத்துல கருமயோகமும், கரும சன்னியாசமும் (ஆன்மீகம்) ஒன்னுதான்னு சொன்ன கீதாசிரியர் இன்னொரு இடத்துல கரும சன்னியாசத்தை விட கரும யோகமே பெட்டர்னாரு. மறுபடி பார்த்தா

//எவனொருவன் ஆன்மிகமும் செய்கை செய்வதும் ஒன்றே என்று தெளிவு

பெறுகிறானோ அவனே விவரம் தெரிந்தவன்.//ங்கறாரு.

ஆன்மீகமும், செய்கையும் (கர்ம யோகமும்) ஒன்னுதானு தெளிவடைஞ்சவன் தான் விவரம் தெரிஞ்சவன்னு கீதை சொல்லுது.

இது 100% உண்மை. ஏற்கத்தக்கது. பின்பற்ற தக்கதுன்னா அப்புறம் எதுக்கய்யா இத்தனை கோவில், இத்தனை மடம், இத்தனை வேத பாடசாலை இழுத்து மூடுங்கய்யா எல்லாத்தயும். வாங்கய்யா கங்கைக்கு காவிரிக்கும் மத்தில கால்வாய் வெட்டுவம்.

இந்து மத சாரம்னு சொல்றிங்களே அந்த கீதையே சொல்லுதே ஆன்மீகமும், செய்கையும் ஒன்னுதான்னு. இதைவிட வேற ஆத்தன்சிட்டி என்ன வேணம்? இருக்கிற கோவில் இத்யாதியெல்லாம் மூடிருவிங்களா? செத்தாலும் மூட மாட்டிங்க. ஏன்னா அதுல தான் உங்க பிழைப்பு ஓடுது.

இங்கே நான் குறிப்பிடுவது பிரபலமாயில்லாத கோவில்கள்ள வெறுமனே பூசை,புனஸ்காரங்களுக்கு, தங்களை அழைக்கிற வீடுகள்ள வைதிக கர்மங்களுக்கு பரிமிதமான அர்ச்சகர்களை அல்ல . இவிக நிலை (பந்தாவை விட்டுட்டு பார்த்தா) செருப்பு தைக்கிறவக, துணி வெளுக்கறவக, பார்பர்ஸை விட மோசம்.

அதனாலதான் இவிகளுக்கு மதவாத சக்திகள் கிறிஸ்தவர்னு சேறுவாரி இறைச்ச டாக்டர் .ஒய்.எஸ்.ஆர் மாதசம்பளத்துக்கு ஏற்பாடுபண்ணார். சிரம தசைல இருக்கிற கோவில்களுக்கு தீப,தூப,நைவேத்தியங்களுக்கு ஒரு அமவுண்ட், இவிக வயித்துப்பாட்டுக்கு ஒரு அமவுண்ட் மாசாமாசம் செக் வடிவத்துல வர்ர மாதிரி வழி பண்ணாரு. ( சாமிக்கு ரூ 1000 ஆசாமிக்கு ரூ.1,500) இதை நான் விமர்சிக்கலை. ஏன்னா கோவிலுங்கற பின்னணி, பஞ்ச கச்சம், பூணூல், சாதி

அகங்காரம் இதையெல்லாம் மீறி அவிக ஏழைங்க.

என்.டி.ஆர் " சமுதாயமே என் கோவில். ஏழை மக்களே என் தெய்வங்கள்"னு சொன்னாரு. நானும் அதை ஏத்துக்கறேன். லாங் ரன்ல இவிகளுக்கெல்லாம் ஆல்ட்டர் நேட்டிவ் சோர்ஸ் ஆ:ப் இன்கம்கு ஏற்பாடு பண்ணி அவனவன் போய் சாமி கும்பிட்டுட்டு வர்ர மாதிரி பண்ணிரனும். இதான் நம்ம ஸ்டாண்ட்.

திருச்செந்தூர், திருத்தணி, பழனி, திருமலை,காளஹஸ்தி மாதிரி பிரபல கோவில்கள்ள இந்த பிராமணோத்தமர்கள் பண்ற அலப்பறைக்கு அளவே கிடையாது. வர்ர வி ஐ பிங்களுக்கு எல்லாத்தயும் திறந்து காட்டி மஸ்கா அடிச்சு, லாபியிங், பவர் ப்ரோக்கரிங், பத்து வட்டினு ஒரு மா:பியாவே மெயிண்டெயின் பண்றாய்ங்க. திருமலைல டாலர் சேஷாத்ரினு ஒரு அய்யரு. பக்தர்களுக்கு விற்பனை செய்யனு தயாரிச்ச பெருமாள் உருவம் பொறிச்ச தங்க டாலர்களை கடை தேங்காயை எடுத்து வழிப்பிள்ளையாருக்கு உடைச்ச கணக்கா வி.வி.ஐ.பிக்களுக்கு அள்ளிவிட்டு நிழல் நிர்வாகம் நடத்திக்கிட்டு வந்த பார்ட்டி. சுப்ரீம் கோர்ட்லயே இந்த அபிஷ்டுவை கோவில்ல சேர்க்காதிங்கனு தீர்ப்பு கொடுத்தாய்ங்கன்னா பார்த்துக்கங்க.

என் பாய்ண்ட் ஒன்னுதான் கீதை உண்மை. அதை சொன்னது கண்ணன். அது இந்து மதத்து வேதங்கள்,உபனிஷதங்கள், பதினென் புராணங்களோட சாரமிது , அதெல்லாத்துக்கும் பிரமாணம் இதுனு நீங்க ஒத்துக்கிடறிங்களா? இழுத்து மூடுங்கய்யா எல்லா கோவிலையும். இருக்கிற வேதம்,உபனிஷத் எல்லாத்தையும் பொருளோட (அதுல சரக்கு இல்லைனு தயங்கறிங்களா நீங்க பூச்சி காட்டற உட்பொருளை டிஜிட்டலைஸ் பண்ணி 24 மணி நேரம் ஒலி பரப்பிக்கோங்க வேணாங்கலை.

இருக்கிற கோவில் ஐயருக்கெல்லாம் (பிரபலம் & நான் பிரபலம்) சித்த வைத்தியம், யோகாசனம், நோய் தடுப்பு, முதலுதவின்னு ட்ரெயினிங் கொடுங்க.

இருக்கிற கோயிலெல்லாம் கலைக்கூடமாகட்டும், இயற்கை வைத்தியத்தை தர்ர மருத்துவ மனைகளாகட்டும், மூலிகை பண்ணைகளாகட்டும்.

ஆன்மீகமும், செயலும் ஒன்றேன்னு தெரிஞ்சவன் தான் புரிஞ்சவன் தான் விவரம் தெரிஞ்சவன்னு கீதையே சொல்லுதே . சொல்லி இத்தனை ஆயிரம் வருஷமாச்சு. இன்னமும் விவரங்கெட்டவுகளா இருந்தா அசிங்கமில்லியா?

இதையெல்லாம் செய்து விவரம் தெரிஞ்சவங்களா தங்களை தாங்கள் எஸ்டாப்ளிஷ் பண்ணிக்குவாங்கனு நீங்க எதிர்பார்த்தா ஏ............மாந்து போயிருவிங்க. காரணம் என்னடான்னா....

இவிகளுக்கு கண்ணன் மேலயோ, கண்ணனோட வாக்கான கீதை மேலயோ ஒரு நயா பைசா மதிப்பு கூட கிடையாது. இவிகளுக்கு தேவை இவிக பிழைப்பு ஓடனும்.அதுவும் அடுத்தவன் உழைப்புல ஓடனும்.

ஆன்மீகம்/ கரும சன்னியாசம் இப்படி எந்த பேரை சொன்னாலும் இதெல்லாமே சமூகத்தில் சிறப்பு சலுகைகளை எதிர்பார்த்து, உழைப்பிலிருந்து தப்பிக்க உதவுற மார்கங்கள் தான். அதுக்கான வியூகங்கள் தான்.

செக்ஸ் எஜுகேஷன் பத்தி ஒரு படம் வந்து சக்கை போடு போட்டது ஞா இருக்கலாம். பேரு ஞா இருக்கா "குப்த் ஞான்" .குப்த என்றால் ரகசியம்னு அர்த்தம். உண்மையான் ஆன்மீக வாதி தன்னை வெளிச்சம் போட்டுக்கவே மாட்டான் . அவனுக்கு குப்த யோகின்னு பேரு.

தெலுங்குல ஒரு பழமொழி உண்டு. " கன்சு ம்ரோகினட்டு கனகம்பு ம்ரோகுனா" பித்தளை ஒலிக்கிற மாதிரி தங்கம் ஒலிக்குமாங்கறது இதனோட அர்த்தம்.

நான் மறுபடி மறுபடி சொல்றேன் மதம்,ஆன்மீகம்லாம் காலைக்கடன் கழிக்கிற மாதிரி அதை ரகசியமா வச்சுக்கனும். அதைக்காட்டி உழைப்புல இருந்தோ,சமூக கடமைகள்ள இருந்தோ விதிவிலக்கு கேட்கிறது, சிறப்பு சலுகை கேட்கிறதெல்லாம் அசிங்கம்.

ஓஷோ சொல்வாரு " சரியான ஆளு தப்பான வழில போனாலும் சரியான இடத்தை போய் சேர்ந்துருவான். தப்பான ஆளு சரியான வழில போனாலும் வழி தவறிடுவான்"

இவிக தப்பான ஆளுங்க. அதனால தான் கீதையே சரியான வழிய காட்டியும் தப்பான வழில போறது மட்டுமில்லாம சனத்தையும் மிஸ் கைட் பண்ணிக்கிட்டு பிழைப்பை நடத்தறாய்ங்க.

சக மனுஷனை எந்த விஷயத்துல வேணம்னா ஏமாத்திரலாம் ஆனால் அவன் கெட்டு நொந்து நூடுல்ஸாகி சரண் புகும் இடம் ஆன்மீகம். அதுல கூட அவனை ஏமாத்தினா/ஃப்ராட் பண்ணா, பண்ணினவன் மனுஷனே கிடையாது. மிருகம்.

கர்ம சன்னியாசம், கர்மயோகம் பத்தி ஓஷோ நச்சுனு ரெண்டு வரி சொல்லியிருக்காரு.

கர்ம சன்னியாசம்: செயலின்மையில் செயல்படுதல்

கர்மயோகம்: செயலில் செயலற்று இருத்தல்.

இந்த ரெண்டு பாயிண்டை புரிஞ்சிக்கிடனும்னா நீங்க இயற்கையோட இணக்கமா இருக்கனும். அப்பத்தான் மேற்படி கர்ம சன்னியாசம், கர்ம யோகம் ரெண்டுமே ஒன்னுங்கற சத்தியம் புரியும் . கீதை இயற்கைக்கு எதிரா போராடச்சொல்லுதே. புலனடக்கத்தை உபதேசிக்குது. நீங்க உங்க புலன் களோட போராட ஆரம்பிச்சுட்டா உங்களுக்குள்ள இரட்டை தன்மை ஏற்பட்டுரும். நீங்க உங்களோடவே போராடி சாகவேண்டியதுதானே தவிர..ஒரு வெண்ணையும் சாதிக்க முடியாது. உங்க உள் மனப்போராட்டம் காரணமா கர்ம சன்னியாசமும் ஃபணால். கர்ம யோகமும்

ஃபணால்.

கர்ம சன்னியாசம்னா  செயலின்மையில் செயல்படுதல்:

கர்மயோகம்னா செயலில் செயலற்று இருத்தல்:

இந்த மாதிரி ஒரு விளக்கத்தை யாராச்சும் ஒரு பஞ்ச கச்சம்  ஏற்கெனவே சொல்லியிருந்தா சொல்லுங்கய்யா. அவிக தப்பான ஆளுங்க அதனாலதான் சரியான விஷயங்களை கூட தப்பா ஆக்கிட்டாய்ங்க. கண்ணன் சொன்ன கீதை சரியானதாதான்  இருந்திருக்கனும். ஏன்னா கண்ணனோட கேரக்டர் அப்படி..அவர் வாழ்ந்த வாழ்க்கை அப்படி. வாழ்க்கை பற்றிய அவரோட அவுட் லுக் அப்படி.

ஆனால் அதை பகவத்கீதைங்கற பேர்ல  தொகுத்த பார்ட்டி, அந்தாளோட இனம், நோக்கம் எல்லாம் சேர்ந்து கீதைய  சொதப்பிருச்சு.

கர்ம சன்னியாசம்னா  செயலின்மையில் செயல்படுதல்:

கர்மயோகம்னா செயலில் செயலற்று இருத்தல்:

இதை ஓஷோ சொன்னாருன்னு கோட் பண்ணேன். இது சொம்மா எடுத்தாள்ற விஷயமில்லே. எடுத்து காட்டற விஷயம் இல்லே. என் வாழ்க்கைல நான் ஃபேஸ் பண்ண விஷயம்.

கர்மயோகம்னா செயலில் செயலற்று (பற்றற்று/பலனில் நினைவற்று) இருத்தல்:

திருப்பதி மலை மேல கி.பி.1900ல  நிலவிய என்விரான்மென்டை, நாவல்ட்டிய மறுபடி கொண்டுவரனுங்கற நோக்கத்தோட திருமலா விஷன் 1900 னு ஒரு ப்ராஜக்ட் ப்ரிப்பேர் பண்ணேன். அப்போ இருந்த  தி.தி.தே நிர்வாக அலுவலர் ,

சேர்மன், மந்திரி,முதல் மந்திரி எல்லாருக்கும் அனுப்பினேன். நெம்பர் ஆ∴ப் டைம்ஸ் ரிமைண்ட் பண்ணேன். ஆக்சுவலா நான் விக்கிரகாராதனைக்கு எதிரானவன். (குறிப்பிட்ட காலம் வரை குழந்தைங்களோட நடைவண்டி மாதிரி உபயோகிக்கலாம்ங்கறது நம்ம ஸ்டாண்ட்.) இருந்தாலும் திருமலா விஷன் 1900

அமலுக்காக சின்சியரா ட்ரை பண்ணேன். ஜஸ்ட் கொரியர் தபால், தந்தி, மெயில் தான். ∴பைலை தூக்கிக்கிட்டு ஆ∴பீஸ் சுத்தி பிரதட்சணம் பண்றது . லாபியிங் பண்றது, ரெகமெண்டேஷன் தேடறது இதையெல்லாம் செய்யலே. ( செய்ய முடியும்ங்கற நிலை இருந்தாலும்) இதான் கர்ம யோகம். செயலில் செயலற்று (பற்றற்று/பலனில் நினைவற்று) இருத்தல்.

இந்த விஷன் அமலானா எனக்கென்ன தரப்போறானுக. ஒன்னு மண்ணும் கிடையாது. சப்போஸ் தேவஸ்தானம் என் விஷனை அண்டர் டேக் பண்ணி அப்படியே அமல் படுத்தினாலும் எல்லா பிரபல புண்ணிய க்ஷேத்திரங்களுக்கும் அப்ளை பண்ணனும்னு கேட்க ஒரு கிரவுண்ட் ஏற்பட்டிருக்கும் தட்ஸால்

சரி சில காலம் கழிச்சு இந்த கொரியர் தபால்/ ஆர்.பி க்கெல்லாம் தடா போட்டுட்டு பொழப்பை பார்த்துக்கிட்டிருந்தேனா அப்போ என்னாச்சுன்னா..

கர்ம சன்னியாசம்னா செயலின்மையில் செயல்படுதல்:

திருமலா விஷன் 1900 ஐ திராட்டில விட்டாச்சு. 2008 நவம்பர் தெலுங்குல ஒரு ப்ளாக் ஆரம்பிச்சேன். http://www.blaagu.com/swamy7867 . 2009 மே வரை நம்ம ப்ளாக் புலின்னா புலி தான். ஜஸ்ட் ஆறுமாசத்துல 25,000 ஹிட்ஸ் .பயங்கர காண்ட்ரா வர்சி. சித்தூர் பாலிட்டிக்ஸ்ல நான் சி.கே பாபுவோட ஆதரவாளன்னு உங்களுக்கு தெரிஞ்சிருக்கும். ஆதி கேசவுலுக்கும், சி.கே வுக்கும் இடையில வெட்டுப்பழி கொலைப்பழி. எம்.பியோ ஆட்க்ள் சி.கே.வை ரெண்டு த்டவை கொல்லப்பார்த்தாய்ங்க. முத தடவை துப்பாக்கில சுட்டப்ப நோ இஞ்சுரி.ரெண்டாம் தடவை கண்ணி வெடி வெடிச்சப்ப மட்டும் லேசான காயம். நம்ம லோக்கல் பேப்பரான இண்டியன் பொலிட்டிக்கல் க்ளோசப் இதழ்ல எம்.பி

யை கிழி கிழினு கிழிச்சு எழுதியிருக்கன். இந்த பின்னணில என்னோட திருமலா விஷன் 1900 ப்ராஜக்ட்ல இருக்கிற முக்கிய அம்சங்களை எல்லாம் இப்போ தி.தி.தே சேர்மன் ஆதிகேசவுலு ஒவ்வொன்னா அமல்படுத்திக்கிட்டிருக்காரு. உ.ம் பெருமாள் நகைகளையெல்லாம் எஸ்.பி.ஐல கோல்ட் இன்வெஸ்ட்மென்ட் ஸ்கீம்ல வச்சது. ஹௌ இட் ஹேப்பண்ட்ஸ்? இதான் கர்ம சன்னியாசம். செயலின்மையில் செயல்படுதல்.

நாரத பக்தி சூத்திரத்துல இருந்து ஒரு விஷயம் " இந்த உலகத்துல எத்தனை மனிதர்கள் இருக்கிறார்களோ அத்தனை விதமான பக்தி மார்கங்கள் உண்டு"

ஆனா கீதை கர்ம யோகம், கர்ம சன்னியாசம்னு ரெண்டு கான்செப்டை மட்டும் ப்ரப்போஸ் பண்ணி ரெண்டுமே ஒன்னுதான்னு "நான் - ப்ராமின்ஸ்"க்கு காதுல பூ சுத்துது. அல்வா கொடுக்குது.

இவிக ( நான் ப்ராமின்ஸ்) கர்ம சன்னியாசத்தை பின் பற்றவே முடியாது. இவன் எப்படியும் கர்ம யோகத்தை தான் ஆப்ட் பண்ணுவான். நாம கர்ம சன்னியாசத்தை ஆப்ட் பண்ணி நோகாம நோன்பு கும்பிடலாம். கர்ம யோகத்துல இருக்கிறவன் தான் பலனையே எதிர்பார்க்க கூடாதே. அந்த பலனையும் தாங்களே சேர்த்து அனுபவிக்கலாம்ங்கறதுதான் இவிக சதி.

இந்த படைப்புல/அதுலயும் ஆன்மீகத்துல எந்த ரெண்டு அம்சமும் சமமானது அல்ல. அல்ல.அல்ல. அப்படி ஏதாவது ரெண்டு அம்சம் சமம்னு எவனாச்சும் சொன்னா அவன் தன் ஆன்மீக பயணத்தை முடிச்சிட்டான்.இலக்கை அடைஞ்சிட்டானு அர்த்தம் அல்லது பயணத்தை துவக்கவே இல்லைனு அர்த்தம்.

இந்த கீதையில வர்ர குழப்படிய பார்த்தா கீதாசாரியர் பயணத்தை முடிச்சவரா தோணலை ஆரம்பிக்கவே இல்லைனு தான் தோணுது

கீதையிலான பிராமணீய கலப்படங்கள் குறித்த கிழிப்பு தொடருது. கிருஷ்ணர் சொல்றதா கீதைல வர்ர கீழே உள்ள வரிகளை பாருங்க

//வேள்விகளையும் தவங்களையும் அனுபவிப்பவன் நானே//

தவத்தை அனுபவிக்கிறவன் நானேங்கற பார்ட்டை நானும் ஏத்துக்கறேன். அதாவது கண்ணன் ஒருத்தனே இல்லை நமக்கெல்லாருக்குமே இந்த கெப்பாசிட்டி இருக்கு. எங்கனயோ ஒரு பார்ட்டி அன்ன தானம் பண்ணா நமக்குள்ளயும் ஒரு வித குளிர்ச்சி பரவும். எங்கனயோ ஒரு ராஜ பக்சே நம்மாளுங்களை கொன்னு குவிச்சா நமக்குள்ளயும் ஏதோ செத்துப்போகுது. ( அங்கே படுகொலைகள் நடந்த நேரங்கள்ள இங்கே நடந்த கொலை,தற்கொலை,கொலை முயற்சி இத்யாதியோட நெம்பருக்கும், இதர நேரங்கள்ள நடந்த சம்பவங்களோட நெம்பருக்கும் பெரிய அளவுல வித்யாசம் இருந்தே தீரும்) இதை உணர கொஞ்சமே கொஞ்சம் சூட்சும புத்தி இருந்தா போதும்.

இந்த தியரியை டோட்டல் உலகத்துக்கு அப்ளை பண்ணா புரிபடறது கஷ்டம். ஸோ ஒரு சின்ன காலனி அ அப்பார்ட்மெண்டை எடுத்துக்குவம். அங்கன ஒரு தற்கொலை நடக்கப்போவுதுன்னு வைங்க. அது நடக்கறதுக்கு 6 மாசம் முந்தியே அங்கே ஒரு வித அமானுஷம் / ரெஸ்ட் லெஸ் நெஸ்/ பேட் வேவ்ஸ் பரவ ஆரம்பிச்சுரும். அட்மாஸ்ஃபியர் மாதிரி நூஸ்ஃபியர்னு ஒரு வார்த்தை உண்டு. அதுக்கு எண்ணங்களால் உருவாகும் சூழல்னு அர்த்தம். இந்த நூஸ்ஃபியர் ஸ்பாய்லாயிரும். அந்த காலனி /அப்பார்ட்மெண்ட்ல அதுவரை சண்டையே போட்டறியாத தம்பதி சண்டை போட்டுப்பாங்க. நோயே கண்டறியாத பார்ட்டிக்கு கடுமையான ஜுரம் வரும் . இப்படி அனேகம் நடக்கும்.

இந்த அடிப்படையில //தவங்களை(யும்) அனுபவிப்பவன் நானே//ங்கற கருத்தை ஏத்துக்கிடலாம்.

ஸ்வாமி விவேகானந்தா கூட உன் பிரார்த்தனைக்கு பலன் எங்கேயிருந்தோ வரலே கண்ணா.. உனக்குள்ளருந்தே வருதுங்கறார். தவத்தை அனுபவிக்கிறது மட்டுமில்லே அந்த தவத்துக்கு வரம் கொடுக்கிறது கூட உங்களுக்குள்ள இருக்கிற "சக்தி" தான்.

ஆனால் இதே வாக்கியத்துல முத பார்ட்டை பாருங்க //வேள்விகளையும் தவங்களையும் அனுபவிப்பவன் நானே//

வேள்வியை என்னத்த அனுபவிக்கிறது ? சொர்கம்னு ஒன்னிருந்தா இந்த பயலுவ பண்ற யாகம்/வேள்விலருந்து கிளம்பற புகை மண்டலம் தேவர்கள் கூட்டத்தை மூச்சுத்திணறல், கா்ஃப், ப்ராங்கடைஸ், டி.பினு வர வச்சு அவிகளை ஒரு வழியாக்கியிருக்கும்.

**சரி யாகம் பவர் ஃபுல். ஜென்யூன். பக்கானு சொல்ற பார்ட்டிங்களுக்கு ஒரு சவால்**

ஆந்திர அரசு செயற்கை மழை பொழியவைக்கிறதுக்காக பல நூறு கோடி பணம் செலவழிச்சிக்கிட்டு இருக்குது. விரயமா விமானத்துல போய் மேகங்கள்ள சில்வர் நைட்ரேட் விதைச்சுட்டு வராய்ங்க.

கீதை தான் சொல்லுதுல்ல யாகத்தால மழை வரும்னு பேசாம ஆந்திரா கவர்ன்மெண்டுக்கிட்ட பேசி "செயற்கை மழையெல்லாம் எதுக்கு தெண்டம். நாங்க யாகம் பண்றோம் . மழை வந்தே உடும்"னு ஒத்துக்க வச்சி காண்ட்ராக்ட் எடுத்துக்க வேண்டியதுதானே. வேணம்னா இந்து மடங்கள், இந்து ஆசிரமங்களோட ( நித்யானந்தா ஆசிரமம் உட்பட) சொத்துக்களை பிணையா கூட வைக்கலாம்.

என்னய்யா கதை விடறிங்க. யாகத்தை எவனாச்சும் அனுபவிக்க முடியுமா? சகிச்சுக்கலாம். தட்ஸால். தலைவன் செத்தா லாரி டயரை கொளுத்தற தொண்டனுக்கும், மழை வரும்னு யாகம் பண்ற தெண்டனுக்கும் என்னய்யா வித்யாசம்?

லாரி டயரை மாதிரி இதையும் சகிச்சுக்கிடத்தான் முடியும். அனுபவிக்க முடியுமா ?

யாகம்/வேள்வி எல்லாம் உண்மையா இருந்தா எல்லா தேர்தல்லயும் எல்லா பன்னாடையும் ஜெயிச்சுத்தான் ஆகனும். ஏன்னா எல்லா நாதாரியும் யாகம் பண்ற கேஸுதானே. தோற்க ஆளே இருக்காதுல்ல.

யாகம் வெற்றிய தரும்னா அப்போ ஏன்யா தவலை, மூக்குத்தி, கவர்ல காசு, பாட்டில் எல்லாம் குடுக்குறாய்ங்க? ஆறும்,அருவியும்,ஏரியும், பச்சை

புல்வெளியும் பசு கூட்டமுமா இயற்கைக்கு நெருக்கமா வாழ்ந்த கண்ணன் இயற்கையின் கொடையான காட்டுச்செல்வத்தை கரியாக்கிற யாகத்தை அனுபவிக்கிறேன்னு சொல்லியிருப்பாரா? ரோசிச்சுப்பாருங்க.

அடுத்து கிட்ன பரமாத்மா ஒரு பஞ்ச் டயலாக் உடறாரு.

" ஏழுலகிற்கும் இறைவன் நானே." சுபாஷ் சந்திரபோஸ் கீராரா பூட்டாராங்கற விஷயத்துல நடக்கிற மாதிரியே இந்த உலகங்கள் பற்றிய எண்ணிக்கை பத்தி கூட ஓயாத சர்ச்சை நடக்குது.

ஜரிதா போட்டவனுக்கு புதுசா ஒரு உலகம் விரியுமாம், ஃபுல் அடிச்சவனுக்கு ஒரு உலகம், கஞ்சா அடிச்சவனுக்கு ஒரு உலகம், சப்பை ஃபிகர் மடில படுத்தவனுக்கு ஒரு உலகம்னு கச்சா முச்சானு விரியறதா கேள்வி. அந்த காலத்து நாவல்ல ஹீரோயின் கண்ணை மூடினதுமே விரியற கனவுலகம் வேற..

திருக்குறள் அவ்வுலகு/இவ்வுலகுனு ரெண்டு உலகத்தை காட்டுது, மூவுலகுனு கேள்விபட்டிருக்கோம், இங்கே கிட்னர் ஏழு உலகம்ங்கறார். சில மாயா ஜால கதைகள்ள ஈரேழு பதினான்கு உலகம்னு வரும். சைன்ஸ்ல நம்ம சூரியன், சூரியனை சுத்தி கிரக கூட்டம் இருக்குதுல்ல. இதை சூரிய குடும்பம்ங்கறாய்ங்க . இந்த மாதிரி பல்லாயிரம் சூரிய குடும்பங்கள் இருக்கிறதா சைன்ஸ் சொல்லுது. இதில்லாம இந்த விசுவம் விரிவடைஞ்சுக்கிட்டே போவுதாம்.மகாவெடிப்புல ஆரம்பமான படைப்புதானே அந்த சூட்ல தான் இப்படி விரிவடையுதாம்.

(ஒரு பக்கம் சூடு ஆறிட்டே வருதாம் அதனால இந்த படைப்பு ஒரு பக்கம் சுருங்கிக்கிட்டும் வருதாம்)

அப்போ மொத்தம் எத்தனை உலகம் இருக்கும் ? குத்து மதிப்பா ஒரு கணக்கு போடுங்க. ஆனால் கிருஷ்ணர் என்னடான்னா ஏழு உலகத்தோட நின்னுர்ரார். அப்போ மத்த உலகத்துக்கு வேற ஒரு கிருஷ்ணர் உண்டா? டோட்டல் படைப்புக்கும் பேட்டன்ட் ரைட் என்னுதுங்கற பார்ட்டிக்கு மொத்தம் எத்தனை உலகம்னு தெரியாதா? இந்த ஒரு விஷயத்தை வச்சே சொல்லிரலாம். இந்த கீதைய சொன்னது கிருஷ்ணர் இல்லேன்னு. நாலாங்கிளாஸ் ஜியாக்ரஃபி பாடம் கூட தெரியாத பார்ட்டின்னு.

அடுத்து யோகம் - யோகி பற்றி கீதை என்ன சொல்லுதுனு பார்ப்போம்:

//யோகி யோகி என் கிறாயே எவன் அந்த யோகி என்று கேட்கிறாயா? குந்தியின் மகனே என்னையே நம்பி என்னையே நெருங்கி என்னையே சார்ந்து என்னை தொழுகின்றவனே எல்லா யோகிகளிலும் சிறந்த யோகி இது என்னுடைய முடிவு//

இங்கே கிருஷ்ணர் நம்ம ஜெயலலிதா, கலைஞர் ரேஞ்சுக்கு போயிட்டாரு. யாரெல்லாம் நிறைய கோவில்ல அபிஷேகம் அர்ச்சனை பண்ணி பிரசாதம் கொண்டுவராய்ங்களோ அவிகதான் ஜெ வுக்கு ஸ்ரேஷ்டம். யாரெல்லாம் தொகுதி பிரச்சினை, மானில பிரச்சினை, கழக பிரச்சினையை கண்டுக்காம தன்னை சுத்தி சுத்தி வர்ரவுகதான் கலைஞருக்கு ஸ்ரேஷ்டம்.

//என்னையே நம்பி என்னையே நெருங்கி என்னையே சார்ந்து என்னை தொழுகின்றவனே // யோகின்னா. அவன் பத்மாசனத்துல உட்கார வேணாமா? மூக்கு நுனில நினைவை நிறுத்தி மூச்சை, எண்ணங்களை, எண்ணங்களுக்கிடையிலான இடைவெளிய கவனிக்க வேணாமா? அவன் பத்து வட்டி வாங்கினா பரவாயில்லையா? தன் அப்பா அம்மாவை முதியோர் இல்லத்துல சேர்த்தாலும் பரவாயில்லையா? என்னங்கய்யா இது ?

இந்த கீதைய கண்ணனே சொல்லியிருந்தா " தபாருப்பா. .. நான் என்ன அரசியல் தலைவனா தொகுதிய /மக்களை /கட்சிய/ கவனிக்காம என்னை சுத்தி சுத்தி வந்தா பதவியை தூக்கி கொடுத்துர.. ஏன் விரயமா என்னை வெளிய தேடறே? நான் உனக்குள்ள இருக்கேன்பா. நீ இந்த இயற்கையோட கையடக்க பதிப்புகண்ணா.. உன்னைபாரு...இந்த இயற்கைய பாரு. இதுல இருக்கிற ஒழுங்கற்ற ஒழுங்கை பாரு. நான் தான் இயற்கையின் வடிவா என்னை நான் வெளிப்படுத்திக்கிட்டிருக்கேன் . இயற்கையும் நானும் வேறில்லை. இயற்கை உனக்கு கொடுத்திருக்கிற கடமைகளை நிறைவேற்று. உன்னை நீயே ஒரு சாட்சியா இருந்து கவனி. இதான் தியானம். ஒழுங்கா தியானம் பண்ணு. வெறுமனே எனக்கு ஜால்ரா போட்டு எனக்கு ஆகிறது ஒன்னுமில்லைன்னு சொல்லியிருப்பாரு.

ஆனால் மேற்படி ஸ்டேட்மென்ட்டுக்கு ஓனர் ஒரு ஐயர். அதனாலதான்

//என்னையே நம்பி என்னையே நெருங்கி என்னையே சார்ந்து என்னை

தொழுகின்றவனே யோகி/ன்னு கிருஷ்ணர் சொல்றதா பீலா விடறார். ஏன் ? எதுக்கு?

எவனாலயும் இப்படி வாழமுடியாது. அப்படி வாழாத பட்சத்துல அவனுக்குள்ள குற்ற மனப்பான்மை வரும். வந்தா அவன் அவாளை அப்ரோச் பண்ணுவான். அப்போ அவனை சரண்டர் பண்ணிக்கிறது ஈஸி. இதான் நூலாசிரியரோட வியூகம்.

என்னைப் பொருத்தவரை இயற்கைதான் இறைவன். இயற்கையிலிருந்து வந்த மனிதர்கள் தான் இறைவனின் வாரிசுகள். இயற்கையை புரிஞ்சிக்கிட்டு இயற்கையை பணிஞ்சு, பாதுகாத்து, இணக்கமா வாழற வரைக்கும் இந்த உலகமே ஸ்வர்கம். இதுதான் கிருஷ்ணனுக்காக நாம செய்ற தவம், வேள்வி எல்லாமே.

இப்படியொரு வாழ்க்கைய வாழ்ந்தா தியானம்,யோகம்லாம் மனிதர்கள் கிட்டே ஆட்டோகிரா:ப் கேட்டு முண்டியடிக்கும்.

அடுத்த பத்திய பாருங்க

//அர்ச்சுனா ! யார் மூன்று வேதங்களையும் படித்து கிடைப்பதற்கு அரிதானதும் ஒரு கொடியில் இருந்து கிடைப்பதுமான சோமபானத்தை அருந்தி தங்கள் பாவங்களுக்கு விடை கொடுத்து அடிக்கடி வேள்விகளால் என்ன பூஜித்து சொர்கத்தை அடைய விரும்புகிறார்களோ அவர்கள் தேவருலகத்தில் திகட்டாத சுகம் முழுவதும் அல்லும்,பகலும் அனுபவித்து வாழ்கிறார்கள்.//

//அர்ச்சுனா ! யார் மூன்று வேதங்களையும் படித்து//

நான்குனு வந்திருக்கனும். அச்சுப்பிழை போலிருக்கு. விட்டுருவம். வேதங்களை பத்தி ஏற்கெனவே சொல்லியிருக்கேன். முதல்ல பொருளை பாருன்னாங்க, நான் ப்ராமின் வர்கங்கள்ள ஏற்பட்ட கல்வி வளர்ச்சி காரணமா அது புஸ்வானம்னு தெரிஞ்சு போன பிறகு பொருளை பார்க்காதே உட்பொருளை பாருன்னு டுமீல் விட்டாய்ங்க. அதுவும் ஒரு மண்ணுமில்லைன்னு நம்மாளுங்க ப்ரூவ் பண்ண பிறகு ரிதம், டெசிபல், ஸ்ருதின்னு ரீல் விட்டாய்ங்க. ஏ.ஆர் ரஹ்மானோட ஸ்ருதிதான் வையத்தை ஆளுதே தவிர வேதம்லாம் வெறுமனே அவாளுக்கும், திருந்தாத சில சூத்திர ஜென்மங்களுக்கும் மட்டும் பரிமிதமாயிருச்சு.

//ஒரு கொடியில் இருந்து கிடைப்பதுமான சோமபானத்தை அருந்தி//

இது வெறுமனே டாஸ்மாக்ல கிடைக்கிற சரக்கு இல்லிங்கண்ணா அதை விட காட்டம். சட்டத்தால தடை செய்யப்பட்ட பானம். இதை அருந்தி என்ன செய்யனும்னு அடுத்த வரில பார்ப்போம்.

//(சோம பானத்தை அருந்தி ) தங்கள் பாவங்களுக்கு விடை கொடுத்து//

சோம பானங்கறது டாஸ்மாக் சரக்கை விட காட்டமானது இன்றைய மானங்கெட்ட அரசுகளால் கூட தடைசெய்யப்பட்ட போதை வஸ்துன்னு சொல்லியிருக்கேன். இதை அடிச்சா பாவங்கள் குட் பை சொல்லிருமா ? நோ.. மிஞ்சி போனா பாவங்கள் பற்றிய நினைவு கொஞ்ச நாழிக்கு குட் பை சொல்லலாம். அதே சமயம் " நான் மனிதன். மிருகம் போல நடக்க கூடாது"ங்கற எண்ணம் கூட குட் பை சொல்லிரும் அண்ணாத்தை.

பார்த்திங்களா பாவங்களுக்கு விடை கொடுக்க இன்னா மாதிரி வழி சொல்லுது கீதை? ராமதாஸு, அன்புமணில்லாம் 3 மணி நேர சினிமால ஜஸ்ட் ஒரு நிமிசம், ரெண்டு நிமிசம் வர்ர பீடி,சிகரட் சீனுக்கே அவ்ளோ சீன் போட்டாங்களே பல்லாயிரம் கோடி காப்பீஸ் புத்தகமா, சி.டி.யா, டிவிடியா வித்திருக்கிற கீதைல, இவ்ளோ பகிரங்கமா போதைக்கு விளம்பரம் தர்ராய்ங்க, போதைய ஜஸ்டி்ஃபை பண்றாய்ங்க,கீதைய பத்தி பேச ராமதாஸ் அண்ட் கோ தயாரா?

பாரதியார் ஒரு தரம் வீட்டை விட்டு வெளிய வர்ரச்ச எதிர்த்தாப்ல ஒத்தை அய்யரு வந்தாராம்.அப்போ பாரதியாரோட நண்பர் ஒருத்தர். "சகுனம் சரியில்லையே"ன்னு சொல்ல பாரதியார், " யோவ் கள்ளுபானை எதிர்க்க வந்தா நல்லது தானே"ன்னு கேட்டாராம். நண்பர் " நீங்க கேட்கிற கேள்விக்கும் இந்த சிச்சுவேஷனுக்கும் என்ன

சம்பந்தம்னு கேட்க பாரதியார் சொன்னாராம் " எதிர்த்தாப்ல வர்ர அய்யரு மொடா குடியன். அவனோடது வயிறுல்ல கள்ளுப்பானை"ன்னாராம். பாரதியார் காலத்துலயே இதான் நிலைமை.

இப்போ லிக்கர், கோழிக்கறி,ஆட்டுக்கறி,முட்டையெல்லாம் விலையேற டிமாண்ட் எகிற காரணமே "அவாள்" கூட சாப்பிட ஆரம்பிச்சுட்டதுதான். பிராமணன் என்றால் பிரம்மத்தை (இயற்கையை) அறிந்தவன்னு அர்த்தம்.

கிறிஸ்தவ பேர்கள்ள ஒளிஞ்சிக்கிட்டு "அவாள்" போடற கமெண்டை பார்த்தா சரோஜா தேவி நாவல் எல்லாம் இவாள் கிட்டே பிச்சை எடுக்கனும். அப்புறம் ஏனய்யா உங்களுக்கு இந்த கேவலமான புத்தினு கேட்டா " நானெல்லாம் காயத்ரி சொல்றவன் தெரியும்ல"ன்னு ப்ளாக் மெயிலிங் வேறே.

அடுத்த பத்திய பாருங்க:

//ஒருவன் ஒழுக்கம் கெட்டவனாக இருந்தாலும் அவன் வேறு தெய்வத்தை வணங்காமல் என்னையே வணங்கினால்//

தமிழ் நாட்ல இருக்கிற ரவுடிப்பய எல்லாம் எதிர்கட்சில இருந்தா என் கவுண்டர், ஆளுங்கட்சில இருந்தா ரவுடி ஷீட் இருக்கும், கேஸு இருக்கும்,வாரண்ட் இருக்கும், போலீஸ் ரெக்கார்ட்ல தலைமறைவுன்னு இருக்கும். ஆனால் மேற்படி மாண்புமிகு ரவுடி பப்ளிக் ஃபங்க்ஷன்ல முதல்வர்,துணைமுதல்வர், மந்திரிங்க பின்னாடியே நின்னுட்டிருப்பான். ஏன்னா இவிக கீதையின் பாதைல நடை போடறாய்ங்க. அதான் கிருஷ்ணரே சொல்ட்டாரே.

//ஒழுக்கம் கெட்டவனாக இருந்தாலும் அவன் வேறு தெய்வத்தை வணங்காமல் என்னையே வணங்கினால் அவன் உன்னத உத்தமமானவன் என்றுதான் கருதவேண்டும்//

தூத்தேறிக்க...கிருஷ்ணனை கலைஞர்,ஜெ, ரேஞ்சுக்கு கொண்டுவந்துட்டாய்ங்களே. உண்மைலயே இந்த கீதைய கண்ணன் சொல்லியிருந்தா "த பாருப்பா என்னை வணங்கறது, பேனர் கட்டறது இதெல்லாம் தேவையில்லாத விஷயம், நான் தான் என்னை இயற்கையோட வடிவத்துல வெளிப்படுத்திகிட்டிருக்கேன். நீ எந்த தெய்வத்தை வேணா வணங்கு. வணங்காம போ. ஆனால் இயற்கைக்கு இணங்கு. தலை வணங்கு. இல்லே லைலா, ஷகீலானு வரிசை புயல்களோட வடிவத்துல சக்கரம்தான் மாப்ளே"ன்னிருப்பாரு. அதனால தான் சொல்றேன் இந்த கீதை கண்ணன் சொன்னதுல்ல.

இப்போ செலாவணில இருக்கிற கீதைலயே அய்யர் கண்ல படாம ஒளிஞ்சுக்கிட்டு தப்பிச்ச இந்த பத்திய பாருங்க

"எவன் எந்த வடிவத்துல வணங்கினாலும் அவன் என்னையே வணங்கறானு

அர்த்தம். எவன் எந்த வடிவத்துல வணங்கினாலும் அவனுக்கு அந்த வடிவத்திலயே அருள்புரியறேன்"

**இந்த தொடர்பதிவு மூலமா நான் சொல்ல நினைச்ச சில விஷயங்கள்:**

1.கண்ணன் உண்டு. கண்ணனின் குரல் அலைகள் அண்டை வெளியில் இன்னமும் மிதக்கிறது. தன்னில் தன்னை தள்ளி வைத்தவர்களின் காதில் இன்னமும் ஒலிக்கிறது. ஒரு தாய் வயிற்று மக்களாய் வந்த மக்களில் ஒரு பகுதியினரை தள்ளி வைத்தவர்களின் காதில் அல்ல.

(இன்றைய கீதையில் தொகுப்பாசிரியரின் இனவாதம், சாதி அகங்காரம் , சுய நலம் ,மடமைகள் சேர்ந்து அதை நாறடித்த மாதிரியே என் விளக்கங்களிலும் சில அல்லவை கலந்திருக்கலாம். ( ஆனால் இதை சொன்ன நான் வெறும் முருகேசன்ங்கறதால நல்லா விஜாரிச்சு விவாதிச்சு ஒரு முடிவெடுக்கலாம். ஆனால் கீதைய சொன்ன பார்ட்டி இது கிட்னன் சொன்னதுன்னு வல்லடி அடிச்சுருச்சே)

2.மதத்தோட மையத்துல நீ என்ற உச்சரிப்பு சேரனும். அது ம 'னி'தமா மாறனும். அப்பத்தான் அது மதம். இல்லேன்னா ஆனைக்கு பிடிக்கிற மதம். மனிதனுக்காகத்தான் மதமே தவிர மதத்துக்காக மனிதனில்லே. மனிதங்கறவன் ஒரு மிருகம். ஜஸ்ட் மனிதனா ஆக்டு கொடுக்கிறான். நடிப்பையே நிஜம்னு நம்பி அசால்ட்டா இருந்தா படக்குனு மனிதனுக்குள்ள இருக்கிற மிருகம் வெளிய வந்துரும். அதை அப்பப்போ உலவ விடனும். கழிவறைல, படுக்கையறைல, தனிமைல . அப்பத்தான் அது மறு நாள் வரை சமூக, நாகரீக சங்கிலிக்கு அடங்கி இருக்கும். அதை விட்டு நான் அடக்கி காட்டறேன், முடக்கி காட்றேன்னு இறங்கினா இவிக வேதம்,உபனிஷதம்,புராணம்,சமூகம் இத்யாதி போட்ட சங்கிலியெல்லாம் பராசக்தில கண்ணாம்பா வசனத்துக்கப்புறம் தெறிச்சு விழறாப்ல ஃபணாலாயிரும்.

உள்ளுக்குள்ள மிருகமா இருக்கிற மனிதனை அதை உணரச்செய்து , அந்த மிருகத்தனத்தை படிப்படியா இழக்கச்செய்து (லீகல் & மோரல் மெத்தட்ஸ்) மனிதனா மாத்தி மனிதனா தொடரச்செய்யனும், விட்டா தெய்வமா முன்னேற

வைக்கனும் அதான் மதம். இந்த ஃப்ரேமுக்குள்ள அடங்காத எதையும் நான் மதமா ஏத்துக்க தயாராயில்லே.

ஓஷோ தான் சொல்வாரு ஒரு மனிதன் ஞானமடைந்த பிறகு தானா வந்து சேரக்கூடிய நற்குணங்கள் ஏற்கெனவே தமக்குள்ள இருக்கிறாப்ல வெறுமனே நடிக்கறது ஆபத்தானது. அதை தான் மதம் செய்யுது. இது ஏமாற்று வேலை, ஹிப்பாக்ரசி, கேணைத்தனம். முட்டாள்தனம்.

புதுசா ஆரம்பிங்கப்பா. உண்மை நிலையை ஏத்துக்கிட்டாத்தான் ப்ளானிங் பக்காவா இருக்கும். அடுத்த கட்ட நடவடிக்கையும் யூஸ்ஃபுல்லா இருக்கும்.

அரிது அரிது மானிடராய் பிறத்தலரிதுன்னு அவ்வை சொன்னது கரெக்டுதான். ஏன்னா மனிதனுக்குள்ள ஒரு மிருகமிருக்கு அதை காலை,மாலை உலவ விட்டு (லீகல் & மோரல் லிமிட்) மறுபடி கட்டி வச்சா லேசா உறுமிக்கிட்டு கிடக்கும். ஆனால் மிருகங்கள் 24 ஹவர்ஸ் மிருகங்கள் தான். மனிதன் பார்ட் டைம் மிருகம். ( அது கூட அவனோட உயிருக்கு ஆபத்து வரச்ச, பசி,பட்டினி பாதிக்கிறச்ச, அவனோட ஆதாரமான செக்ஸ் தேவை மறுக்கப்படறச்சத்தான்)

சரிங்கண்ணா இந்த தொடர்பதிவோட கடைசீ ...பத்திகளை படிச்சுருங்க. தொடர் வெறுமனே "முற்றும்" இல்லே. தற்காலிகமா முற்றும்.

இதுவரை நான் எடுத்துவச்ச வாதங்களை தப்புன்னு நிரூபிச்சு , கீதையில இருக்கிறதெல்லாம் கிட்னர் சொன்னது, அய்யர் சொல்லலை, அந்த அய்யருக்கு ஹிடன் அஜெண்டா ஏதுமில்லேன்னு, கீதையில இருக்கிறதெல்லாம் அறிவுப்பூர்வமானது, லாஜிக்கல், லீகல்னு ருசுப்படுத்திட்டாங்கன்னா கு.ப. வலுவான வாதங்களை எடுத்து வச்சாங்கன்னா அப்போ இந்த தொடர்பதிவை ரீ ஸ்டார்ட் பண்றேன். அதுவரைக்கும் அம்பேல்.

தொடர் பதிவின் கடைசி பத்திகள்:

//ஒழுக்கம் கெட்டவனாக இருந்தாலும் அவன் வேறு தெய்வத்தை வணங்காமல் என்னையே வணங்கினால் அவன் உன்னத உத்தமமானவன் என்றுதான் கருதவேண்டும்//னு கிருஷ்ணர் சொன்னதை (?) கடந்த பதிவுல பார்த்திங்க. அடுத்து ஒரு பாரா வருது.

//அப்படி வணங்கறவன் சூத்திரனா இருந்தாலும் அட பெண்ணாவே இருந்தாலும் நோ பிராப்ளம்//னு கிட்னர் என்.ஓ.சி கொடுக்கிறாரு.

நாய் கறிய சமைச்சு சாப்பிடறவன் , சத் பிராமணன் இரண்டு பேருக்கிடையிலயும் எந்த வித வேறுபாட்டையும் பாராத ஒருவனே எனக்கு ப்ரீதியானவன்னு வேற ஒரு சீக்வென்ஸ்ல சொல்லப்போற கிட்னர் சூத்திரனா இருந்தாலும் அட பெண்ணாவே இருந்தாலும்னு சொல்றாருன்னா என்ன அர்த்தம் அவருக்கு பேதபாவம் தான் இருக்கு. அபேதபாவம் இல்லேன்னு ருசுவாகுதுல்ல. இந்த ரெண்டு ஸ்டேட்மெண்டுக்கு மத்தியில இன்னா மாதிரி காண்ட் ராடிக்ஷன் இருக்கு பார்த்திங்கல்ல.

ஏதோ காலணா டைரக்டர் எடுத்த நாலணா சினிமாவுலயே இப்படி ஒரு முரண்பாடு வந்தாலே விகடன்ல போட்டு குடைஞ்சுருவாங்க. ஆனால் ஜகன்னாடக சூத்திரதாரியான கிட்னரோட ஸ்டேட்மெண்ட்ல இப்படி ஒரு முரண்பாடு வருமா? வராது. ஆனால் கீதைல வந்திருக்கே.

"இதனால் யாவருக்கும் தெரிவிப்பது என்னவென்றால் தற்போது கீதை என்ற பெயரில் செலவாணியில் இருக்கும் கீதைக்கும் , கண்ணனுக்கும் எந்த சம்பந்தமும் இல்லிங்கோ"

# எதிர்வினைகள்

தம்பி ஸ்மார்ட்டு..

நான் நாஸ்திகன்னு டிக்ளேர் பண்ணியிருக்கே . அதுக்கு என் வாழ்த்துக்கள். ஆஸ்திகனா இருக்கிறது ஆத்தோட போற மாதிரி நீஞ்ச தெரியனுங்கற அவசியமே கிடையாது. நீ நாஸ்திகன்னு டிக்ளேர் பண்ணியிருக்கே . நீஞ்ச தெரிஞ்சுக்க கண்ணா! நிறைய எழுத்துப்பிழை இருக்கு. (அர்த்தமே மாறிப்போற அளவுக்கு).

ப்ளாக்ல எதையாவது விமர்சிக்கனும்னு  முடிவு பண்ணிட்டா லவ் லெட்டரை படிச்ச மாதிரி ஆயிரம் தடவை படிக்கனும்.  நீ பாவம் ஆடு மாதிரி நுனிப்புல் மேஞ்சுட்ட  போலிருக்கு.

//கீதையின் எந்த இடத்தில் இரண்டும் ( கர்ம யோகம் , கர்ம சன்னியாசம் ) சமம்//னு சொல்லியிருக்குனு கேட்கறே. இது புள்ளிமானோட உடம்புல எங்கே புள்ளியிருக்குனு கேட்கிறாப்ல இருக்கு.

கீதாசாரியர் ஒரு இடத்துல சமம்ங்கறாரு. இன்னொரு இடத்துல கர்ம யோகமே பெட்டர் சாய்ஸுங்கறாரு. மறுபடி ஒரு இடத்துல ரெண்டும் ஒன்னுதானு தெரிஞ்சிக்கிட்டவன் தான் விவரம் புரிஞ்சவன்னு சொல்றாரு. இன்னொரு தடவ கடந்த இரண்டு பதிவுகளை புரட்டிரு கண்ணா..கு.பட்சம் கண்ட்ரோல் ஃபைண்ட் கீ உபயத்துல "சமம்"ங்கற வார்த்தையை தேடிப்பாரு.

//பலனை வாங்காதே என்று கூறியதாக கற்பனை செய்து//

ஸ்மார்ட்டு ! என்னை என்ன வேத பாடசாலைல படிச்ச கிளிப்பிள்ளனு நினைச்சியா வாழ்க்கைய படிச்சவன் நைனா.. நான் பலனை வாங்கறது விக்கறத பத்தி ரெய்ஸ் பண்ணவே இல்லே. எதிர்பார்க்கிறதை பத்திதான் பேசியிருக்கேன்.

//ஒரு செயல் சிறப்பாக இருக்க வேண்டுமென்றால் முழு ஈடுபாடு வேண்டும் எதையும் எதிர்பாக்காமல் இயற்கையாக செய்யும் செயல், ஏதோவொன்றை எதிர்பார்த்து அதற்காக செயற்கையாக செய்யும் செயலைவிட சிறந்ததுதானே.//

இயற்கைல பலனை எதிர்பார்க்காம செயல்படற அளவுக்கு மன்சனுக்கு இயற்கையோட போதிய நெருக்கம் இல்லடா செல்லம்!

//ரெகுலர்ல படிச்சவனெல்லாம் புத்திஜீவிபோலவும் தொலை தூரக் கல்வியில் படிச்சவன் எல்லாம் முட்டாள் போலவும் இடத்தை வைத்து மட்டும் கல்வியை கணிக்கமுடியாதே. அவனிடத்திலுள்ள ஆர்வம் தானே முக்கியம்//

ஆர்வம் ஆட்டுக்குட்டிங்கறத பத்தி நான் ரெய்ஸ் பண்ணலை தலை. நீ தொலை தூர கல்வில ஸ்டேட் ஃபர்ஸ்ட் வந்தாலும் சர்ட்டிஃபிகேட்ல ஸ்டேட்

ஃபர்ஸ்டுன்னுதானே இருக்கும். உயர உயர பறந்தாலும் ஊர் குருவி பருந்தாயிராதுங்கண்ணா..

என் கான்செப்ட் என்னடான்னா  கர்ம யோகம், கர்ம சன்னியாசம்ங்கற ரெண்டுமே மெகன்னாஸ் கோல்ட் சினிமால வர்ர புதையல் மேப் மாதிரி .  மேப்பை வச்சிக்கிட்டா புதையல் கிடைச்சுராது தலை. ( இன்னைக்கு பதிவை படிங்க கோனார் கைட் மாதிரி விளக்கியிருக்கேன்.இந்த ரெண்டுமெ அல்ஜீப்ரா மாதிரி குழப்படி சமாச்சாரம். கரணம் தப்பினா மரணம் மாதிரி தப்பா புரிஞ்சிக்கப்பட அதிக வாய்ப்புள்ள விஷயங்கள் .

இந்த ரெண்டையும் தனித்தனியா சொன்னதே குழப்பம். இதுல ரெண்டும் ஒன்னுதான்னு ஒரு சமயம், கர்ம யோகம்தான் பெட்டர் சாய்ஸுன்னு வேற  ஒரு சமயத்துல சொன்னது பயங்கர குழப்படி. தமிழ் சினிமால பஞ்ச் டயால்குக்கெல்லாம் இன்ஸ்பிரேஷன் கீதைதான். நான் புலி,சிங்கம்னு பயாக்ரஃபி சேனல் மாதிரி கரடி விட்ட  நேரத்துல இது ரெண்டையும் இன்னம் கொஞ்சம் டீட்டெய்ல்டா பீசியிருக்கலாம்.

நான் கர்ம யோகத்தையோ, கர்ம சன்னியாசந்த்தையோ நக்கலடிக்கலை. அதுக்கு பின்னாடி உள்ள பிராமண இனத்தோட சதியைத்தான் விளக்கினேன். ரெண்டையும் சமம்னு புரிஞ்சிக்க நிறைய ஒர்க் அவுட் தேவை. அதை என்னமோ தமிழ் வார இதழ் அறிவு போட்டிக்கான விடை மாதிரி கொடுத்து ச்சூ காட்டிட்டு போறது ஒரு பொறுப்பான ஆசாமிக்கு தகாதுன்னுதான் சொன்னேன்.ரெண்டும் சமம்னு ஒரு பத்தில சொல்லிட்டு  கர்ம யோகம் பெட்டருங்கறது முரண்பாடில்லையா? இதுக்கு பின்னாடி ஹிடன் அஜெண்டா இல்லையான்னு கேள்வி எழுப்பியிருந்தேன்

என் கருத்து:

//மனிதனுக்கு வர்ர மனக்கோளாறுகளுக்கு முதல் காரணம் அவன் தன் மனதை அடக்கறதுதான். (அதுக்காக மனம் போன போக்குல மனிதன் போகனும்னு நான்

சொல்லலே.)//

உங்க கேள்வி:

என்னங்க கடைசியில் மனம் போன போக்குல போகாதேன்னு அந்தர் பல்டி அடிக்கிறீங்க.

என் விளக்கம்:

ஸ்மார்ட் அண்ணாச்சி ! நான் எழுத வந்தது கீதைய பத்தி அதனால மனித மனதை பத்தி பெரிசா விளக்கலை.(உங்க குழப்பத்துல லாஜிக் இருக்கு. இதுக்கு என்னொட தவளைப்பாய்ச்சல் நடையும் ஒரு காரணமாயிருச்சு) இப்ப விளக்கறேன். (பல்லை இல்லிங்கண்ணா) மனித மனம் ஈகோங்கற பாலிடால் கலந்துட்ட பால் குடம். சில சமயம் பால் அடில தங்கி பாலிடால் மேல வந்துருது. அந்த நேரம் பார்த்து மன்சங்க "மனம் இயற்கையின் அந்தர்பாகம். நான் மனம் வழி போறேன்"னா எய்ட்ஸும் வரலாம். தந்தில செய்தியாவும் வரலாம். சில அரிய சந்தர்ப்பங்கள்ள (உ.ம்: மனிதனுடைய ஈகோவானது மரண அடி வாங்கின சமயத்துல) பாலிடால் எல்லாம் அடில தங்கிருது. பால் மேலே வருது. அப்போ மனம் சொல்வதை கேட்டால் நீங்க இயற்கைக்கு நெருக்கமா போறிங்க)

/(மனம்) /உங்க ஜாதகம் சொன்ன பாதையில் போகணும்னு சொல்லவரீங்களா?//

உங்க மனம் உங்க ஜாதகம் சொன்ன பாதைல போகனும்னு கூட நான் சொல்லமாட்டேன். சர்வ ஸ்வதந்த்ரி ஆன இயற்கை அன்னையின் செல்லப்பிள்ளைகள் நவகிரகங்களின் கால்களின் கீழே ஃபுட் பால்களாக இருப்பதை மாத்தத்தான் முதல்ல நவீன பரிகாரங்களை ரிலீஸ் பண்ணேன்.அப்புறம் நவகிரகங்களிலிருந்து விடுதலை தொடர் பதிவையும் போட்டேன்.ஆனால் ஒன்னு தலீவா.. சனங்க மனம் மட்டும் என் ஜாதகம் சொல்ற பாதைல போனா அஞ்சுவருசத்துல ஆப்பரேஷன் இந்தியா 2000 அமலாயிரும். இந்தியாவே சொர்கமாயிரும்ல.

//ஒருவனால் அடக்கமுடியதவிஷயம் எல்லாராலும் அடக்கமுடியாது என்று கேள்வி ஞானத்தை அடைத்துவிட்டீங்களா? //

இல்லாததை அடக்க வேண்டிய அவசியமே இல்ல அண்ணாச்சி. நான் சொல்றது

( ஸ்வப்ன ஸ்கலிதம், சுய இன்பம் இத்யாதி வழிகள்ள சக்தி இழந்த நண்பர்களை) இருக்கிறதை அடக்கவே முடியாதுங்கண்ணா. அது பிரம்மனாவே இருந்தாலும். ஒரு தரம் சொர்கத்து கேபரே கேர்ள் ஆடறப்ப அவருக்கு ......... நழுவிருச்சாம்ல .

என் கருத்து:

//புலனடக்கம் புண்ணாக்குனு கண்டதையும் அடக்கினா அந்த சமாசாரம் மேம்போக்கான கான்ஷியஸ் மைண்ட்லருந்து ஆழமான சப்கான்ஷியஸ் மைண்டுக்கு ட்ரான்ஸ்ஃபர் ஆயிருது. //

தங்கள் விமர்சனம்:

முயற்சி செய்யாமலே முடிவு கட்டியாச்சு. அப்போ அடக்கி வச்சவங்களோட சப்கான்ஷியஸ் மைண்டுல அதுயிருக்கும் என்கிறீங்க. இங்க தான் நிக்கிறது கீதை. எதையோ எதிர்பார்த்து நீங்க அடக்கமுயன்றால் (செயற்கையாக) அது அப்படித்தான் போகும், பலனை எதிர்பார்க்காமல் அடக்கினால் சப்கான்ஷியஸ் மைண்டுலையும் நிக்காது.

என் கேள்வி:

முயற்சி செய்யாம முடிவு கட்டறதெல்லாம் நம்ம சரித்திரத்துல கிடையாதுஅண்ணாத்தை ! நாலாம் கிளாஸ் படிச்ச காலத்துலயே பருவம் படிச்சவன். அந்த நாள் முதல் இந்த நாள் வரை சனத்துக்கு நாம தான் கன்சல்டன்ட் தெரியும்ல.

பித்துக்குளி முருகதாஸ் தெரியுமா? வாழ் நாள் எல்லாம் முருகன் புகழ் பாடுவேன்னாரு. ஆனா எல்லாம் நின்னு போற காலத்துல கண்ணால கட்டிக்கிட்டாரு.

விஸ்வாமித்திரர் கதை தெரியும்ல. அவரை விட புலிங்க நாட்ல இருக்காங்களா தலீவா.. இயற்கைலயே இல்லைன்னா ( செக்ஸ் பவர்) அதை அடக்கவே தேவையில்லை. இருந்ததுன்னா அதை அடக்கவே முடியாது.இது சைன்ஸு கண்ணா தெரியும்ல...

//மனோதத்துவ சாஸ்திரத்தின் அடிப்படைக்கே விரோதமான புலனடக்கத்தை பத்தி பேசற பகவத்கீதை தலை சிறந்த மனோதத்துவ நூலாம். //

மனம் சொல்வதையெல்லாம் செய்தால் மனிதனுக்கு மூளை தேவையில்லையே! மனதை சரியான பாதைக்கு அனுப்பினால்தானே (அனுப்பத்தான்?) மனோதத்துவமே தேவை

மனம் சொல்றதை கேட்கிறது மனோதத்துவம். நீ செக்ஸு, வன்முறை, சேடிசம், மசாக்கிசம் ,பணம்,பதவி ,புகழாசைன்னு தனித்தனியா பார்க்கிறே. உன் வாய் இதையெல்லாம் தனின்னு தான் சொல்லுது. உன் வாய் சொல்றதை கேட்க சைக்காலஜி தயாராயில்லை.

உன் மனசு எல்லாத்தையும் ஒன்னாவே பார்க்குது. ஒன்னத்துக்கு அடுத்ததை ஆல்ட்டர் நேட்டிவா பார்க்குது. சொல்லுது. இப்படி மனம் சொல்றதை கேட்கிறது தான் சைக்காலஜி. அதுக்குண்டான அவுட்லெட்டை ப்ரிஸ்க்ரைப் பண்றது தான் சைக்காலஜி. சரியான பாதைன்னு ஈர கோவணத்தை இழுத்து கட்ட சொல்றதும், காமப்பேயா மாத்தறதும் மத்தாலஜி ( மதங்களின் உபதேசம்)

என் கருத்து:

//பரமாத்மாவை இயற்கையின் மறு உருவா,உருவகமா, பிரதி நிதியா காட்டற கீதாசாரியர் புலன் களை அடக்குவது இயற்கைக்கு விரோதமானது அதாவது கிருஷ்ணருக்கே விரோதமானதுங்கற சங்கதியை வசதியா மறந்துர்ரார்.//

உங்க விமர்சனம்:

வயலில் புல் முளைப்பது இயற்கை என விடமுடியாது.

என் விளக்கம்:

அப்படி விடாம வீட்டு மனைகளாக்கினதும், சிறப்பு பொருளாதார மண்டலங்களை உருவாக்கினதும் தான் இப்ப தண்ணி லாரி பின்னாலே ஓட வச்சிருக்கு அண்ணாத்தை ..

நீங்க வெளியிட்டிருக்கிற குவிஸ்:

who is that உட்டாலக்கடி?

a)இந்தியாவை பணக்கார நாடாக்கிட திட்டம் தீட்டி அதை அமல் படுத்தியே தீர்வதென்று பிடிவாதமாய் உழைத்து ஏழையானவன்.

b)2006 ஹிட்ஸ் மட்டும் கண்டு இருட்டில் இருந்தவன்

என் ரியாக்சன்:

அசத்தப்போவது யார் பாணியில் படிக்கவும். நன்றி!   நன்றி!!   நன்றி!!!

**குவிஸ்:**

//c)தொழில் முறை ஜோதிடனாக மூடநம்பிக்கையை வளர்ப்பவர்.//

//d)நிர்வாண உண்மைகள்//

ஸ்மார்ட்டு கண்ணா.. பாவம் ரொம்பவே இர்ரிடேட் ஆயிட்டாப்ல இருக்கு. பிராமண விஷ விருட்சத்துக்கு எந்த உரங்களை போட்டு வளர்த்தாங்களோ, எந்த தண்ணீரை ஊத்தி வளர்த்தாங்களோ அதே உரங்களையும், அதே தண்ணீரையும் என் ஸ்டைல்ல கெமிக்கல் ட்ரீட் மெண்ட் கொடுத்து அந்த விஷ விருட்சத்தோட தோட வேர்களை வெட்டி எறிய உலகமகா சதி பண்ணிக்கிட்டிருக்கேன். இந்த சதில ஒரு பாகம்தான் தொழில் முறை ஜோதிடன் என்ற மாறு வேஷம். நான் மூட நம்பிக்கைய வளர்க்கலிங்கண்ணா.. ஒரு அக்மார்க் விஞ்ஞானத்துல அவாள் கலந்து விட்டுட்ட மூட நம்பிக்கைகளை பொறுக்கி எடுத்துக்கிட்டிருக்கேங்கண்ணா.. இந்த என் முயற்சிக்கு பெருமாளு, பெரியாழ்வாரு, பெரியாராழ்வார்லருந்து இந்த ஒட்டு மொத்த படைப்பே சப்போர்ட்டுங்கண்ணா..

**நான் ஒரு குவிஸ் தரேன்:**

கண்ணன் என்பவர் யார்?

பெண் வடிவெடுத்து ஈஸ்வருடன் ஹோமோ செக்ஸில் ஈடுபட்டவர்.

ஊரான் மனைவியர் குளிக்கும் இடத்துக்கு போய் அவிக ஆடைகளையெல்லாம் கவர்ந்து ரெண்டு கையால கும்பிட்டாதான் ஆடை வாபஸ்னு லந்து பண்ணவர். அவிகளோட ...... ஐ பார்த்து பரவசமானவர்.

திரவுபதிக்கு ஆயிரம் புடவை கொடுத்து மானத்தை காப்பாத்தினவர்.

இத்தனை லட்சம் வருஷத்துக்கப்புறமும் அண்டை வெளில மிதக்கிற தன் எண்ண அலைகள் மூலம் உண்மையான கீதையை எனக்கு உபதேசிச்சிட்டிருக்கிறவர்.

தங்கள் வலைப்பூவில் வெளியாகியிருக்கும் இரண்டு கமெண்டுகள் தங்கள் (புதிய) பார்வைக்கு

வால் பையன்:

நேரம் காலமெல்லாம் பார்க்குறதில்ல, எப்ப என்ன தோணுதோ, அதை அப்ப செய்வேன்

ஸ்மார்ட்:

எங்கவூர் எருமை மாடும் அப்படித்தான் செய்யும். நான் உங்கள சொல்லல பொதுவா சொல்றேன்

வால் பையன்:

நிச்சயமாக மனிதனை விட எருமைமாடு கேவலமானதல்ல!, நான் ஒரு இயற்கை விரும்பி, எருமமாடு போல வாழ்வதில் எனக்கு மகிழ்ச்சியே!

**கீதை பரிசீலிக்கப்படவேண்டிய ஒரு நூல் தானே தவிர ..தேசீய நூலாக அறிவிக்குமத்தனை ஒர்த்தில்லை பாஸ் !**

**- 0 -**